ஆனந்த போதினி

13 ஏப்ரல், 194[illegible]

34

10

7L

ஊ311,N49AB

N49.34.10

163762

ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 34 } விரோதிஞு சித்திரைமீ கஉ } பகுதி 10
1949 [illegible] ஏப்ரல்மீ 13உ

[illegible] MADRAS
8 JUL 1949

உள்ளுறை.

எண்		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	572
2.	சமுதாயமும் சட்டங்களும் (தலையங்கம்)	573
3.	அதிசயமான இயந்திரம்	579
4.	ஓவியன் கனவு	581
5.	வாழ்வு வளம்பெறுமா ?	583
6.	தமிழைக் காப்பாற்று! (கவிதை)	587
7.	அநாதை	588
8.	தியாகம்	590
9.	மூளையும் அறிவும்	593
10.	"நானென்ன செய்யட்டும்!" (கவிதை)	565
11.	விதவையின் கதறல்	596
12.	காப்பிக் கவிஞர்	599
13.	களங்காய்க்கண்ணி நார்முடிச்]சேரல்	604
14.	துப்பறியும் சந்துரு	611
15.	காதல் முடிவு	616
[illegible]	[illegible] சகோதரர்கள் (தொடர் கதை)	619
[illegible]	[illegible]	628
[illegible]	[illegible]	630

7L
Ɔ211,N15O8
N49.34-10
116972

ஆனந்த போதினி

கடவுள் வணக்கம்

காட்சியே காண்பதுவே ஞேய மேஉட்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே ஓங்கும்
மாட்சியே உண்மையறிவு இன்ப மென்ன
வயங்குகின்ற வாழ்வேமா மௌனக் காணி
ஆட்சியே ஆட்சிசெயும் அரசே சுத்த
அறிவேமெய் அன்பேதெள் அமுதே நல்ல
சூட்சியே சூட்சியெலாங் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித் தேவே. (1)

அருள்அருவி வழிந்துவழிந்து ஒழுக ஓங்கும்
ஆனந்தத் தனிமலையே அமல வேதப்
பொருள்அளவு நிறைந்தவற்றின் மேலும் ஓங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே புரண மாகி
இருளறுசிற் பிரகாச மயமாஞ் சுத்த
ஏகாந்தப் பெருவெளிக்குள் இருந்த வாழ்வே
தெருள்அளவும் உளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்கும் செழுந்தேனே தேவ தேவே. (2)

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
அறிவையெலாங் கடந்து கடந்து அமலயோகர்
உளவையெலாங் கடந்து பதங்கடந்து மேலை
ஒன்றுகடந்து இரண்டுகடந்து உணரச் சூழ்ந்த
களவையெலாங் கடந்து அண்டபிண்ட மெல்லாங்
கடந்துநிறை வானசுகக் கடலே அன்பர்
வளவையெலாம் இருள்அகற்றும் ஒளியே மோன
வாழ்வே என்உயிர்க்கு உயிராய் வதியுந் தேவே. (3)

வன்புகலந்து அறியாத மனத்தோர் தங்கள்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
என்புகலந்து ஊன்கலந்து புலன்க ளோடும்
இந்திரியம் அவைகலந்து உள்இயங்கு கின்ற
அன்புகலந்து அறிவுகலந்து உயிர் ஐம்பூதம்
ஆன்மாவுங் கலந்துகலந்து அண்ணித்து ஊறி
இன்புகலந்து அருள்கலந்து துளும்பிப் பொங்கி
எழுங்கருணைப் பெருக்காறே இன்பத் தேவே. (4)

தமிழ்நாடு
164262

சமுதாயமும் சட்டங்களும்

உலக அரங்கத்தில் இந்தியா ஒரு உன்னதமான ஸ்தானத்தைச் சர்த்திரங் கண்ட காலத்துக்கு முன்பிருந்தே பெற்று வந்திருக்கிறது. ரோம், கிரீக், எகிப்து போன்ற நாகரிகத்துக்குப் பேர்போன தேசங்களை விடப் பழம் பெருமை வாய்ந்தது நம் நாடு. இன்று உலகிலேயே நாகரிகத்தில் சிறந்து விளங்கும் நாடுகள் என மதிக்கப்படும், அமெரிக்க-ஐரோப்பிய நாட்டுமக்கள் மிருகப் பிராயமான நிலையில் இருந்த காலத்திலேயே நம் நாட்டு மக்கள் கலைநாகரிகங்களில சிறந்து மிக உன்னதமான வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். இவைகளை யெல்லாம் வெளிநாட்டுப் பேரறிஞர்களே ஒப்புக்கொள்ளுகிறார்கள். அத்தகைய பழம் பெரும் நாடு இன்று பலவகையிலும் தாழ்வுற்று நிற்பதர்குக காரணமென்ன? அதுவும் நீண்டகால அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட்டு, நம்மை நாமே ஆண்டு கொள்ளக்கூடிய அரசியல் சுதந்திரத்தைப் பெற்று அனுபவித்து வரும் இன்றும் கூட, நாம் சீர்குலைந்து நிற்பதற்குரிய காரணந்தான் என்ன ?

அறிவு மிக்க மக்களைக் கொண்டது எனப் பிறரால் மதிக்கப்பட்டு வந்த நம் சமுதாயத்தின் அமைப்பு கலகலத்து நிலை குலைந்து போனதுதான் காரணம் என்றால் மிகையாகாது.

‘எல்லோரும் ஓர் குலம்; எல்லோரும் ஓர் இனம்; எல்லாரும் இந்நாட்டு மன்னர்’ என்று யாதொரு பேதமுமின்றி நாம் வாழ்ந்து வந்த வரை நம் சமுதாய அமைப்பு சிறந்தே விளங்கிவந்தது. ‘ஒன்றே குலமும்; ஒருவனே தேவனும்’ என்ற உயரிய கொள்கையை நம் மக்கள் கடைப்பிடித்து வாழ்ந்து வந்த வரை நம் சமுதாயத்தில் யாதொரு கோளாறும் ஏற்படவில்லை. மக்களாய்ப் பிறந்த எல்லோரும் ஆணுயிருந்தாலும் பெண்ணுயிருந்தாலும் ஜன சமுதாயத்தில் சரி சமத்துவமாகக் கருப்பட்டு வந்த வரை—செய்யும் தொழில் காரணமாக வேற்றுமை கொள்ளப்பட்டதன்றி வேறு எவ்வித வித்தியாசமும் கொள்ளாதிருந்தவரை நம் சமுதாய அமைப்பில் கோணல் உண்டாகவில்லை.

* * * *

எங்கோ இருந்து வந்த ஒரு சுயநலக் கூட்டம் எப்படியோ நம் நாட்டில் புகுந்தபின்னர்,—நம் நாட்டு வளங்களையெல்லாம் வஞ்சகத்தால் அனுபவிக்க வேண்டும் என்ற சுரண்டல் மனோ பாவத்துடன் கூடிய கூட்டமொன்று

நம் மக்களிடையே உறவு கொண்டாடி உள்நுழைந்த பின்னர், அக்கூட்டம் சூழ்ச்சியாகக் கையாண்ட பலவித முறைகளால், நம் சமுதாயத்தின் கட்டுக்கோப்பு கலகலத்து விட்டது. நம் மக்களிடையே நிலவி வந்த சகோதர நேயத்தையும் ஒற்றுமையையும் முதலில் குலைக்க எண்ணங்கொண்டு அவர்கள் பிரித்தாளும் தந்திரத்தைக் கையாளலாயினர். கடவுள் பெயராலும் சமயத்தின் பெயராலும் பல அர்த்தமற்ற கொள்கைகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் மெள்ள மெள்ள புகுத்தலாயினர். எல்லாம் வல்ல முழு முதற் பெருங்கடவுள் ஒன்றே என்ற அழுத்தமான நம்பிக்கையுடைய நம் மக்களிடையே ஓராயிரம் கடவுளரைச் சிருஷ்டித்து உலவ விட்டனர். மக்களனைவரும் ஆண்டவனின் மக்கள்; செய்யுந் தொழிலாலன்றி வேறெந்த வேற்றுமையும் இல்லை என்று சகோதர பாசத்துடன் உறவாடி வந்த மக்களிடையே, பிறப்பினாலேயே பேதமுண்டு என்று கூறி மனித சாதி ஒன்றே என்றிருந்ததை முதலில் நால் வருணமாகப் பிரித்து நாளடைவில் நாலாயிரத்துக்கு மேற்பட்ட சாதிகளாகப் பிரித்தனர்; அதிலும், தீண்டப்படாத சாதி, கண்ணாலும் காணப்படாத சாதி என்றெல்லாம் தாழ்த்தப்பட்ட சாதியை ஏற்படுத்தி விட்டனர். இவ்விதம் பிரித்துப் பாழாக்கப்பட்ட சாதியிலும் ஆண் பெண் என்ற பால் மாறுபாடு காரணமாக மிகுந்த பேதத்தைக் கற்பிக்கலாயினர். ஆணுக்குப் பெண் பலவகையிலும் அடங்கித்தான் நடக்க வேண்டும். ஆடவர்களுக்குள்ள சமூக உரிமைகள் பெண்ணாய்ப் பிறந்தவர்களுக்குக் கிடையா. பெண்கள் ஆண்களுக்குப் பணிபுரிய பிறந்தவர்களே யொழிய, ஆண்களின் குறிப்பின் வழியே நடக்க வேண்டியவர்களே யொழிய சுயேச்சையாக எதையும் செய்ய உரிமையில்லாதவர்கள்; பெண்களுக்கு இம்மையில் மட்டுமல்ல; மறுமையில் நற்பேறு பெறுவதற்குக்கூட லாயக்கு கிடையாது' என்ற கேவலமான கொள்கையைப் பரவவிட்டனர். இத்தகைய மோசமான—ஆபாசமான—கொள்கைகளை நம் மக்களிடையே வேரூன்ற வைக்கும் நோக்கத்தோடு, அவர்கள் புராணக் கதைகளையும் இதிகாசங்களையும் காவியங்களையும் தர்ம சாஸ்திரங்களையும்—ஏன்? ஆகமங்களையும் வேதங்களையும்கூட இயற்றலாயினர். தாங்கள் செய்த இச்சூழ்ச்சிமிக்க காரியங்களை நம்ப வைப்பதற்காக—புராண இதிகாச தர்ம சாஸ்திரங்கள் முனிவர்கள் செய்தவை; வேதாகமங்கள் கடவுளாலேயே செய்யப்பட்டவை என்று அவர்கள் வற்புறுத்தி வரலாயினர்.

* * * *

சுயநலக் கூட்டத்தின் இவ்விதச் சூழ்ச்சி முறைகளால் பகுத்தறிவு வாய்ந்த நம் மக்கள் நாளடைவில் சிதறுண்டு போயினர். உன்னதமாயிருந்த நம் சமுதாய அமைப்பு சிதைந்து போய் விட்டது. இன்று நம் சமுதாயத்தில் காணப்படும் சீர்குலைவுக்கும் ஊழலுக்கும் மேற்குறித்த சுரண்டல் கூட்டத்தின் நுழைவும் சேர்க்கையும்தான் காரண மென்பதை நாம் ஐயந் திரிபற அறிய வேண்டும். ஆகவே, சுயநலக் கூட்டத்தால் வஞ்சகமாகக் கட்டப்பட்டுள்ள இன்றைய சமுதாய அமைப்பை அடியோடு தகர்த்தெறிந்தாலன்றி நம் மக்கள் எவ்விதமாகவும் உயர் நிலையை அடைய முடியாது. இன்றைய சமுதாய முறையை அடியோடு அழித்து, சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகியவைகளைக் கொண்டு சரியாக நியாய உள்ளத்தோடு புதியதொரு சமுதாய அமைப்பைக் காணவேண்டும். இந்த நவயுகத்தில் நவ யௌவனத்துடன் நம் சமுதாயம் விளங்க வேண்டுமானால்—கலை நாகரிகங்களில் பழமைபோல் சிறந்து விளங்க வேண்டுமானால்—இன்றைய சமுதாய அமைப்பு புரட்சிகரமான முறையில் புத்தம் புதிதாக மாற வேண்டும்.

அவ்விதமான புரட்சிகரமான மாறுதலைச் செய்து இன்று நம் சமுதாயத்தைச் சிறந்தொளிரச் செய்ய யாரும் துணிய வில்லை; ஏன்? முற்படவுமில்லை. சமூகச் சீர்திருத்த வாதிகள் என்போர் சிலர் வெறும் வார்த்தையளவில்—எழுத்தளவில்—தீவிரத்தைக் காட்டுகின்றனரே யொழிய, செயலில் தீவிரத்தைக் காட்டக் முயலக்கூட இல்லை. மிகவும் கிலமாகப் போய்விட்ட ஒரு வீட்டை அல்லது கட்டிடத்தை அடியோடு தகர்த்தெறிந்து சரியாக அஸ்திவாரத்தை எழுப்பிப் புதியதொரு கட்டிடத்தைக் கட்டுவதைவிட்டு, பிளவுபட்டும் இடிந்தும் உள்ள இடங்களை மட்டும் பழுது பார்ப்பது போல, சீர்திருத்த வாதிகள் என்போரும், சிறு சிறு சீர்திருத்தங்களை மட்டுஞ் செய்து நம் சமுதாயத்தைச் சரி செய்து விடலாமென்று நம்புகின்றனர். மாகாணச் சட்ட சபைகளிலும் மத்திய சட்ட சபைகளிலும் அவ்வப்போது ஹரி விலாச சாரதா, டாக்டர் அம்பேத்கார், பண்டிட் தாகூர்தாஸ் பார்க்கவா போன்றவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றும் சமூக சீர்திருத்தச் சட்டங்கள், பழைய கட்டிடங்களைப் பழுது பார்ப்பது போன்ற காரியங்களே யொழிய வேறில்லை என்பதே நம் அபிப்பிராயம். இத்தகைய சிறிய மாறுதல்கள் செய்வதைக்கூட, சிலர் எதிர்ப்பதை—அதுவும், அரசியலில் முற்போக்கானவர்கள்

என்று கருதப்படுபவர்கள் எதிர்ப்பதைக் காண நமக்குப் பெருவியப்புத்தான் உண்டாகிறது.

* * * *

சமீபத்தில், இந்தியப் பாராளும் மன்றத்தில் சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார் அமலிலிருக்கும் இந்து சட்டத்தில் சிற்சில மாறுதல்களைச் செய்யும் நோக்கத்தோடு, 'இந்து சட்டத் தொகுப்பு மசோதா' என்று ஒன்றைக் கொண்டு வந்திருப்பதும், பண்டிட் தாகூர்தாஸ் பார்க்கவா பாலிய விவாகத் தடைச் சட்டத்தில் சில திருத்தங்களைச் செய்வதற்காக மூன்று மசோதாக்களை கொண்டு வந்திருப்பதும் நாட்டு நடப்பைக் கூர்ந்து கவனித்து வருபவர்கள் அறிவார்கள். இம் மசோதாக்கள் மீது பலத்த விவாதம் நடக்கலாயிற்று. இம் மசோதாக்களை, ராஷ்டிரபதி பட்டாபி சீதாராமையா போன்ற பேரறிஞர்கள் கூட எதிர்க்கின்றனர்; 'இந்து' போன்ற பத்திரிகைகள் கண்டித்து எழுதுகின்றன என்றால், என்னவென்பது?

டாக்டர் அம்பேத்கார் கொண்டு வந்திருக்கும் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவில் ஆண்மக்களுக்கு இருப்பது போலவே, பெண்களுக்குச் சொத்துரிமை யிருக்க வேண்டும் என்பது போன்ற சில விஷயங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. சொத்துரிமை விஷயம் தவிர, மற்ற விஷயங்களில் கட்டாயம் கிடையாது. பண்டிட் தாகூர்தாஸ் பார்க்கவா பாலிய விவாகத் தடைச் சட்டத்துக்குத் திருத்தங்களாகத் மூன்று மசோதாக்கள் கொண்டு வந்திருந்தார். ஆனால், இம் மசோதாக்கள் செலக்ட் கமிட்டியிலும் பார்லிமெண்டிலும் அடைந்திருக்கும் மாறுதல்களைக் கவனித்தால் பண்டிட் பார்க்கவா எந்த நோக்கத்தோடு இவைகளைக் கொண்டு வந்தாரோ அவற்றைச் சரியாக நிறைவேற்றி வைக்குமா என்பது சந்தேகமாயிருக்கிறது.

டாக்டர் பட்டாபி சீதாராமையா, ஸ்ரீ அனந்தசயனம் ஐயங்கார் போன்றார் சமூக விவகாரங்களில் போலீஸாரைத் தலையிட அனுமதிப்பது தவறு என வாதிக்கலாயினர். மக்களைப் பயமுறுத்தி எந்தச் சமூக சீர்திருத்தத்தையும் செய்ய முடியாதென்றும் இது போன்ற சீர்திருத்தத்தை மக்கள் தாங்களே சுயமாகச் செய்து கொள்ள விடுவதுதான் சாலச் சிறந்ததென்றும் ஸ்ரீ காட்கில் போன்றார் சுட்டிக் காட்டினர். சமூக சீர்திருத்த லட்சியத்தை அடைய வேண்டுமானால் மக்களிடையே அறிவூட்ட வேண்டுவது அவசியம் தான்; எனினும் சட்டத்தின் வாயிலாக வற்புறுத்தவில்லையென்றால், மக்கள் வெறும்

வாய்ப் பிரசாரத்தால் மட்டும் திருந்தி விடுவதில்லை என்பதையும் மேற்குறித்த அறிஞர்கள் கவனிக்க வேண்டும். 45 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் 18 வயதுக் குட்பட்ட பெண்களைக் கலியாணஞ் செய்து கொள்வதைத் தடை செய்ய வேண்டுமென்று பண்டிட் பார்க்கவா தம் மசோதாவில் ஒரு ஷரத்தைச் சேர்த்திருந்தார். மிக முக்கியமான இந்த ஷரத்தைச் செலக்ட் கமிட்டி ஏற்றுக் கொள்ளாது தள்ளிவிட்டது வருந்தத்தக்கதாகும். பாலிய விவாகம் இனி நம் நாட்டில் நடக்காதவாறு தடுக்க வேண்டுமானால், குற்றங்களைக் கண்டு பிடித்து நீதி மன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்ய வைக்கும் பொறுப்பும் அதிகாரமும் போலீஸாருக்கு இல்லையென்றால் வெறும் சட்டங்களைச் செய்து விடுவதால் மட்டும் பயனேற்படாது என்ற உண்மையைப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் பலர் உணராதது ஆச்சரியமாக இருக்கிறது. இத்தகையோர் நம் சமுதாய சீர்கேட்டைச் சிறிதாயினும் சிந்தித்துப் பாராதவர்கள் என்றே தோன்றுகிறது. இல்லையானால் பெண்கள் விவாக வயது 15 ஆக இருக்க வேண்டுமென்று ஒப்புக் கொண்டவர்கள் ஆண்கள் விவாக வயதை 18-லிருந்து 20-ஆக்க மறுத்து விடுவார்களா? 45-வயதுக்கு மேற்பட்ட கிழவர்கள் 18-வயதுக்குட்பட்ட சிறுபெண்களை மணந்துகொள்ளும் அநியாயத்தைத் தடுப்பதற்கு முட்டுக்கட்டை போடுவார்களா?

முற்போக்கான கொள்கைகளும் தீர்க்க திருஷ்டியுமில்லாத அங்கத்தினர்கள் பலர் அங்கம் வகிக்கும் பார்லிமெண்டில் விவாக சம்பந்தமான மசோதாக்களில் இந்துக்கள், சீக்கியர், சமணர் ஆகிய பல்வேறு பிரிவினரிடையும் நடக்கும் கலப்பு மணங்கள் சட்டப்படி செல்லும் என்று கூறும் மசோதா ஒன்று நிறைவேறி யிருப்பது மகிழ்ச்சி தரத்தக்கதா யிருககிறது. நம் சென்னை சட்டசபையிலும் பல தாரத் தடைச்சட்டம் நிறைவேறி யிருப்பது இச் சமயத்தில் இங்கு குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற அரைகுறைச் சட்டங்கள் நிறைவேற்றப் படுவதையே நம்மவர்களில் அறிஞர்களாயுள்ளார் கூடப் பலர் எதிர்க்கிறார்களென்றால் இன்றைய சமுதாய அமைப்பையே அடியோடு மாற்றி யமைக்க வேண்டுமென்பதற்கு எத்தகைய எதிர்ப்பு இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. ஆனால், இத்தகைய எதிர்ப்புணர்ச்சிதான், நம் சமுதாயத்தில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்துவதற்கு அடிகோலுவதாக அமையும் என்று நாம் நம்புகிறோம்.

அதிசயமான இயந்திரம்

V. சங்கரஐயர்

★

பெட்ரோலின் உபயோகத்தால் மோட்டார் ஓடுவதுபோல் நம் உடல் ரத்தத்தால் இயங்குகிறது. ரத்தம் ஆகாரத்திலிருந்து உண்டாகிறது. இருதயத்திலிருந்து புறப்படும் சுத்த ரத்தம் தேகம் பூராவும் சுற்றி அங்கங்கே யுள்ள சகல உறுப்புகளுக்கும் வேண்டிய பிராண சக்தியைக் கொடுத்துவிட்டு, ஆங்காங்கே யுள்ள அசுத்தங்களை எல்லாம் அடித்துக்கொண்டு மறுபடியும் இருதயத்துக்குள் நுழைகிறது. இவ்வாறு இருதயத்திலிருந்து புறப்பட்டு பூரா ஒரு பிரதக்ஷணம் செய்து விட்டு மறுபடியும் இருதயத்தை அடைவதற்கு இரத்தத்துக்கு சுமார் ஒரு நிமிஷமாகிறது என்பது ஆச்சரியமல்லவா?

நிமிஷத்துக்கு ஒரு சுற்று ஆனல் 1 நாளைக்கு $1 \times 60 \times 24 = 1440$ தடவை சுற்றி வருகிறது. இருதயத்தைத் தண்ணீர் இறைக்கும் பம்புடன் ஒப்பிடலாம். இரவும் பகலும் எப்பொழுதும், தூக்கத்திலும் விழிப்பிலும், சுகத்திலும் துக்கத்திலும் ஓயாமல் தன் வேலையே 'கர்மமே கண்ணாக, எண்ணி செய்கின்றதே நமது இருதயம்—இந்த இயந்திரம் மிக அதிசயமானதன்ரே?

மனிதன் கண்டு பிடித்திருக்கும் சகலவிதமான கருவிகளிலும் இது மேலானதாகும். சுத்த ரத்தத்தை உடல் பூராவும் அதி சீக்கிரத்தில் அனுப்பி வழியிலுள்ள அசுத்தங்களை வரவழைத்து அவைகளை வெளியேற்றி மறுபடியும் அதைச் சுத்த ரத்தமாக்கி மறுபடியும் அனுப்புகிறது.

நல்ல தண்ணீர், நகரங்களிலுள்ள விடுகளுக்கு குழாய் மூலம் கிடைக்கிறது. அதை மக்கள் உபயோகித்து அசுத்தத் தண்ணீராக குழாய் மூலம் சாக்கடைக்குப் போகிறது. சாக்கடை நீரைச் சுத்தம் செய்து அதையே மறுபடியும் சுத்த நீராக அனுப்புவது தான் நடை பெறவில்லை.

சிரவம்



சடரம்

இருதயம்

இருதயம் கீழ்நோக்கி மார்பில் தொங்கிக் கொண்டிருக்கிறது. இதில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. உடலிலுள்ள அழுக்கு ரத்தத்தை வலப்பகுதியிலிருக்கும் பம்பு சுவாசாசயத்துக்குள் பாய்ச்சுகிறது. நாம் உட்கொள்ளும் பிராணவாயு அதைச் சுத்தப்படுத்தி விட்டு அழுக்கோடு வெளி யேறுகிறது.

ஒய்வின்றி ஓயாமல் வேலை செய்கிறது நமது இருதயம். இதன் வேலை நிற்பதானல் உயிரும் போய்விடும். அதிக வேலை செய்பவர் அதிகக் கூலி பெற வேண்டியது நியாயமே என்பதை இருதயம் எடுத்துக் கூறுகிறது. உடலின் எடையில் $\frac{1}{200}$ பங்கு கனமுள்ள இருதயம், உடலின் இரத்தத்தில் $\frac{1}{20}$ பங்கு இரத்தத்தைத் தன் உபயோகத்துக்காக எடுத்துக் கொள்ளுகிறது.

உற்சாகமும், சந்தோஷமும் இருதயத்திற்கு நல்ல டானிக் ஆகும். கவலையே இருதய சக்தியைக் குறைத்து விடும். உடலுக்கும் உயிருக்கும் இதுவே ஆதாரமாகும். உயிர் இன்பமயமானது. ஒளியுடையது என டாக்டர்கள் கூறுகிருர்கள்.

"பத்மகோச ப்ரதீகாசம்
ஹிருதயம்சா ப்தோமுகம் ||
அதோநிஷ்ட்யா விதஸ்தியாoது
நாப்யா முபரி திஷ்டதி" —(நாராயண ஸுக்தம்)

"கழுத்தின் கீழேயும் தொப்புளுக்கு மேலேயும் கட்டை விரல் அளவில் தாமரை மொக்குப் போன்று தலை கீழாக இருதயம் இருக்கிறது."

"ஸந்ததம் ஸிராபிஸ்துலம்—
பத்யாகோச சந்நிபம்
தஸ்யாந்தேஸுஷிரம் ஸூக்ஷ்மம்
தஸ்மிந் ஸர்வம் பிரதிஷ்டிதம்
தஸ்யமத்யே மஹாநக்னிர்
விச்வார்சிர் விச்வதோமுகஹ
ஸோக்ரபுக் விபஜந்திஷ்டன்
நாஹார மஜர:கவி:
ஸoதா பயதிஸ் ஸந்தேஹம்
ஆபாததல மஸ்தக:
தஸ்யமத்யே வந்ஹிசிகா
அணியோர்த்துவா விவஸ்தித:
நீலதோயத மத்யஸ்தாத்
வித்யுர்லேகேவ பாஸ்வரா
நீவாரசூகவ த்தந்வீ
பீதாபாஸ்யாத் தனூபமா
தஸ்யா: சிகாயாமத்யே
பரமாத்மா விவஸ்தித்:
ஸ:பிரம்ம: ஸசிவ: ஸஹரி:
ஸெந்திர: ஸோக்ஷர:
பரம: ஸ்வராட்" (நாராயண ஸூக்தம்)

"கொஞ்சம் மலர்ந்த தாமரை மொக்குக்குச் சமானமான அந்த ஹிருதயம் எக் காலத்திலும் நரம்புகளோடு தொங்குகிறது. அதனுடைய நடுவில் நுட்பமான துவாரமானது இருக்கிறது. அதில் எல்லாம் இருக்கிறது. எங்கும் அக்னி ஜ்வாலையுடனும் எங்கும் பரவியும் பெரிய ஜடராக்னியானது அதன் நடுவில் இருக்கிறது. அது அன்னையாததாகவும், ஒலித்துக்கொண்டும், உண்டதை முதலில் ஜீர்ணம் செய்கிறது. நம் தேகத்தை உள்ளங்கால் முதல் தலை வரைக்கும் சூட்டை யுண்டாக்குகிறது. அதன் நடுவில் மெல்லியதாகவும் மேல் நோக்கினதாகவும் ஜ்வாலையானது இருக்கிறது. கருமேகத்தினி

டையிலிருக்கிற ஒளியுடன் கூடிய மின்னல் கொடி போலவும் நெல் நுனி போல மெல்லியதாகவும், ஸ்வயம்பிரகாச முள்ளதாகவும், சமான மில்லாததாகவும் அது இருக்கிறது. அந்த ஜ்வாலையின் நடுவில் பரமாத்மா இருக்கிறார். அவரே பிரம்மா, அவரே சிவன், அவரே விஷ்ணு, அவரே இந்திரன், அவரே அக்ஷரன் (நாச மில்லாதவன், பாபமில்லாதவன்) அவரே மேலானவன், அவரே கர்மத்திற்கு வசப்படாதவன்.''

இருதயத்தைப் பற்றி வேதம் கூறி யிருப்பதை மேலே கூறி யிருக்கிறேன். வேதம் என்றால் தெரிந்துகொள்ள வேண்டியது என்று தான் பொருள். வேதத்தின் அர்த்தத்தை நன்கு படித்து தெரிந்துகொள்ள வேண்டியது மிக மிக அவசியமாகும். நாம் தெரிந்து கொள்ள வேண்டிய அதி விசேஷமான கருத்துக்களை அறிய முடியும். கடவுள் ஹிருதயத்தில் தான் இருக்கிறார் என்பதை இந்த வேதவாக்கியம் நன்கு உணர்த்துகிறது. அப்பொழுது ஹிருதயத்தை அசுத்தமான பதார்த்தங்களோ எண்ணங்களோ அணுக விடுவது பாபம் என்பதை அறியவேண்டும்.

ரத்த ஓட்டத்தின் ஆரம்பமும் முடிவும், எண்ணங் (சிந்தனை) களின் இருப்பிடமும் இருதயமே. அங்கே தான் ஆனந்தத்தையும் காண முடியும். ஹிருதயம் கெட்டால் உயிர் போய் விடும். பரமாத்மா, (கடவுள்) நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்.

உடலுக்கும் உயிருக்கும் முக்கியமான இருப்பிடம் ஹிருதயமாகும். ஆகாரசாதனம் சுத்தமாக இருந்தால், எண்ணங்கள் சுத்தமாக யிருந்தால், உடல் (கோவில்) சுத்தமாக யிருந்தால், அதனுள் இருக்கும் ஹிருதயம் (பரமாத்மா) அங்கேயே வசித்து நன்மை யளிப்பார். வேறு விதமானால் அவர் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார். ஆகையால் நம் சிந்தனையை நல்ல வழியில் செலுத்துவோம்; சுத்த ஆகாரத்தை உண்போம்; சுத்தமாக உடலை வைத்திருப்போமாக!

சந்தா நேயர்களுக்கு

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்துக்கு எழுதும் கடிதங்கள் ஒவ்வொன்றிலும் தங்களுடைய சந்தா நம்பரைக் குறிப்பிட்டு எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். சந்தா நம்பர் குறிப்பிடாமல் விலாசத்தை மாற்றும்படியோ, அல்லது வேறு எவ்விதமான காரியத்துக்கோ எழுதப்படும் கடிதங்களால் காரியாலயத்தினருக்கு வீண் காலதாமதமும் சிரமமும் ஏற்படும் என்பதை அறிவித்துக்கொள்கிறோம்.

ஓவியன் கனவு

OFF... JUL 1948 MADRAS

தி. மா. இராமலிங்கம்

★

திருத்தலையூர் ஓவியச்சாலையில் கோலோட்டுபவன் நான்; ஒரு நாள் நெடுநேரம் ஓவியச்சாலையில் பணி புரிந்துவிட்டு உணர்ச்சி குன்றி அயர்வுடன் இல்லம் செல்ல என் ஆசனம் விட்டெழுந்தேன். என் போன்ற உடன் ஊழியரும் நானுமாக அலுவலறை வாயில் தாண்டினோம். எங்களுக்கு மேலாளராக இருக்கும் ஒருவர் எங்களை விளித்து "தேசத்தின் சுதந்திர தின விழாவை ஒட்டி நமது சாலை கண்காட்சி ஒன்றமைக்க உத்தேசித்துள்ளது. கட்டாயமாக நீங்கள் ஒரு சித்திரம் வழங்க வேண்டும்" என்றார்.

இக்கட்டத்தில் என் பணியின் தன்மை, என் மனப்பான்மை இவை பற்றி அறிவிக்க விரும்புகிறேன். கோல் ஒன்று தீட்டும்; மனம் வேறொன்றினை மருவும்; தீட்டப்படும் சித்திரத்துக்கும் நாட்டத்திலேயுள்ள பாத்திரத்துக்கும் பெரும்பாலும் முரண்பாடுகள் இருக்கும். ஆயினும் என்? சாலை என்னுடையதல்ல, என் கருத்தை உருவாக்கிக் காட்ட.—கூலிக்கு, சே, அது இழிவான பதம்! சம்பளத்துக்கு குறிப்பிடப்படும் சித்திரத்தைத் தீட்டுவேன். உள்ளொன்று, புறம்பொன்று என்று நீங்கள் கேட்பீர்கள். ஆம். என் அளவில் மட்டும்தானா இந்நிலை? சற்று வருத்தம் பாராது என் உடன் வாருங்கள். எங்கு நோக்கினும் உள்ளும் புறமும்—சொல்லும் தோற்றமும்—வேறாக, மாறாக, இருப்பதையே காண்பீர்!

சுதந்திர தினவிழா! ஆம்; விடுதலை வேட்கை பெருகி, இனிப் பொறுக்க மாட்டோம் பரங்கியர்களை என்று குமரன் முதலிய அமரர்களைப் பறிகொடுத்து இன்று நாடு சுதந்திரம் பெற்றுள்ளதாகச் சம்பவம் கூறுகிறது. யாருக்கு இச் சுதந்திரம்? தெருவிலே தோள் மீது கோடரி ஏந்தி விறகுக் கட்டைகள் யார் வீட்டு வாசலிலேனும் உள்ளனவா என்று கண்களைத் தெருவின் இரு மருங்கிலும் சுற்ற விட்டுச் செல்லும் பாட்டாளிக்குச் சுதந்திரம் கிட்டியதா? நாட்டு அரசியலிலே ஏற்பட்ட ஆள் மாறாட்டத்து அளவுக்கேனும் அவன் வாழ்விலே மாறுதல் ஏற்பட்டதா? என்றும் போல கட்டை வெட்டி கால் வயிறு சாப்பிடும் ஒரு கட்டை அவன்!

* * * *

கடைவீதிக்கு வாருங்கள்! இதோ ஒரு அரசிமண்டி வியாபாரி. யுத்தகாலத்திலே எத்தன் வேலைகளிலே மெத்தவும் பயிற்சிபெற்று சொத்துமிகச் சேர்த்துச் சொத்தைத் தொந்தியும் கத்தை நோட்டுகளும் பத்திரமாக இரும்புப் பெட்டியில்—பாங்கியில் அல்ல; அதில் அவருக்கு அவ்வளவு நம்பிக்கையில்லை; அவருக்குத் தெரியாதா, "ஹனுமான் பாங்குகள்" கதை?—சேமித்து வைத்திருக்கிறார். இன்றும் இரும்புப் பெட்டிக்கு அருகிலேயே தான் அமர்ந்து கடையையும் கவனித்து வருகிறார்.

அவர் வேலையாள் வேலன் எசமானது கடையாயிற்றே என்று அரிசி வாங்க வந்தான்—தானமாக அல்ல; எங்குமே தானம்

எங்கே என்று எவரும் கேட்கக்கூடிய காலமல்லவா இது? வியாபாரி இல்லை என்று சொல்லா வள்ளல்; வேலனுக்காகத் தானே இடம் விட்டெழுந்து, சிரமம் பாராது ஒரு படி அரிசி அளந்து அளித்தார். வேலன் தான் கொண்டுவந்திருந்த ரூ. 1—2—0 ஐ பணிவுடன் ஒரு தட்டில் வைத்தான். வந்தது பாருங்கள் வியாபாரிக்குக் கோபம்! "டேய், படி அரிசி முழுசா உனக்கு நானே எழுந்து கொடுத்தேன். ஊரிலே நாழி அரிசிக்கு நாய் படாபாடு படுகிறார்கள். நீ என்னடா என்றால் 9 பணக்காசு கொடுக்கிறாய். நல்ல ஒழுங்கடா, வை இன்னும் 2 பணம்" என்றார் வியாபாரி.

இவர் யார் என்கிறீர்களா? பிரபல அரிசி கொள்முதல் வியாபாரி; தயாள நோக்கும் பொதுநல சேவையில் கருத்தும் விருப்பமும் பூண்டவர் என்பவராக, கிராம உணவுக் கமிட்டியின் சர்க்காரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர். கிழமைக்கொருநாள் ஜாவட்ட அதிகாரி காரியாலயம் சென்றும் கிராம மக்கள் சபைக்குச் சென்றும் உணவுப்பொருள் பஞ்சம் தீர்க்க மகாத்மா காந்தியடிகளும் பிற தேசபக்தர்களும் உபதேசிக்கும் வழிகளை விளக்கமாகக் கலக்கமின்றி விரித்துப் பேசுவார். 'கேவலம் பொருளாசைக்காக கள்ள மார்க்கட்டையோ அல்லது கொள்ளை லாபத்தையோ விரும்புவது மனிதத் தன்மையே ஆகாது" என்று அறிவுக்கண் திறக்கும் புண்ணிய சீலர்தான். ஆனாலும் தன் சொந்தக் கடையில்......?

* * * *

வாழ்க்கைக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைப் பெறப் போதுமான சம்பளம் தருங்கள் என்று தீப்பொறி பறக்க உடல் சிலிர்க்க, புரட்சி புறப்பட்டு விடுமோ என்று சந்தேகிக்குமளவுக்கு பலர் தலைவர்களென மேடைகளில் பறைசாற்றிக் கொள்ளுகின்றனர். ஆனால் அவர்களே தங்கள் சொந்த காரியங்களில் நாள் ஒன்றுக்கு பத்துமணி நேர வேலை வாங்கினாலும், வயிற்றுக்குப் போதாத கூலிதான் கொடுக்கிறார்கள். ஏன் என்று வினவினால் வேலையின் தரத்துக்கு ஏற்ப சன்மானம் எனப் பதில் வருகிறது. ஆம். இருக்கலாம்; ஆயினும் அறுசுவை யுண்டியில்லை என்றாலும் அடுத்து வேலை செய்ய தெம்பு ஏற்படும் அளவுக்கு, அவன் வயிறார கஞ்சியோ, பழையமுதோ சாப்பிடவாவது "சம்பளம்" போதுமானதாயிருக்க வேண்டாமா?

போதும் எடுத்துக் காட்டுகள். என் சொந்த விஷயத்துக்கு வருகிறேன். கட்டாயச் சித்திரம் வேண்டப்பட்ட தல்லவா? இக்காலத்திலே ஏதோ சிறிது உயர் பதவியில் இருந்த அளவிலேயே கீழே யிருப்பவர்களை மிரட்டி, கட்டாயப்படுத்தி வேலை வாங்கி விடலாம் என்ற கருத்து தோன்றி வருகிறது. ஒரு மனிதன் குதிரையை ஆற்றுக்கு கொண்டு செல்லலாம்; தண்ணீரையும் காட்டலாம்; ஆனால் பலர் சேர்ந்தாலும் குதிரையைத் தண்ணீர் உட்கொள்ளக் கட்டாயப்படுத்த முடியுமோ?

ஊழியர்களுக்கு ஊழியத்தில் சிரத்தை ஏற்படவேண்டும்; சிரத்தை ஏற்படுமாறு தக்க சூழ்நிலையை மேலாளர்கள் எனப் படுவோர் ஏற்படுத்தவேண்டும். "இன்சொலால் அன்றி வன்சொலால் உலகம் மகிழாது; தண்ணன் கதிர் வரவால்தான் கடல் பொங்கும்" என்னும் முதுரைகள் மேலிடத்தார்க்கு நினைவிருக்கவேண்டும். எனக்கோ சித்திரச்சாலையில் ஊதியம் சிறிது; அதிலும் வண்ணக் குழைவு இங்கு சற்று மட்டம், அங்கே அபத்தம் என்ற ஆத்திரத்துடன் வரும் இடியுரைகள். நான் சிறந்த ஓவியன் எனக் கூறிக் கொள்ளவில்லை; முழுத்தேர்வும் பயிற்சியும் பெற்றவனல்ல. ஆனால் என்னையும் கலையைக் கடைத்தேற்றும் வகையில் கனிமொழி, நல்லுரை பஞ்சமாயிற்றா? "சொற்ப சம்பளத்துக்கு உழைப்பவர்கள்" என்றாலும் மனிதத்தன்மையும் அற்றவர்களா, நாங்கள்? குரங்கேற்கா கொம்புண்டோ? திண்மை மிக்க ஆல் கிடைக்கப் பெருதிருக்கலாம்; என்றாலும் மரமாங் கொம்பும் கிடைக்காதா? ஓவியந் தீட்டும்போது மட்டுமே நான் உங்கள் ஊழியன்; ஆனால் அப்போதும் எப்போதுமே நான் உங்களைப் போன்ற "மனிதன்"தான்.

* * * *

"சரிதான், எழுந்திருங்கள்! விடிந்து மணி எட்டாகிறது. காலா காலத்தில் வேலைக்குப் போனால்தானே கிடைக்கிற கால்வயிற்று அளவரிசிச் சோறாவது கிடைக்கும்" என்று சீற்றமொடு கூறிக் கொண்டே என் துணைவி என்னைத் தட்டி எழுப்பினாள். ஆகா, என்னென்ன தோற்றங்கள், லட்சியங்கள், வாதப்பிரதிவாதங்கள், எல்லாம் கனவுதான்; ஒன்றும் நிசமல்ல என்றுணர்ந்தேன். என்றும் போல கனவும் நனவும் மாறுபட்டே இருக்கக் கண்டேன். ஆனாலும் தேசீயத் தலைவர்கள் சுயராஜ்ய கனவு கண்டோம்; இதோ, அதை நனவாக்கி விட்டோம் என்று கர்ஜிக்கின்றனர். சுதந்திர தினவிழாவை ஒட்டி ஓவியக்காரனின் கனவுலகக் கருத்துக்களையும் இந்நாட்டில் நனவாக்க அத்தலைவர்கள் வாழி பல்லாண்டு.

வாழ்வு வளம் பெறுமா?

"முருகன்"

★

நான் ஒரு பி. ஏ. பட்டதாரி. பி. ஏ. முதல் வகுப்பில் நல்ல தேர்வு எண்கள் எடுத்த படியால் வேலையில்லாத் திண்டாட்டத்தில் திக்கு முக்காடாமல் அரசியல் அலுவலகத்தில் வேலை கிடைக்கப்பெற்றேன். அது 140 ரூபாய் சம்பளத்தில் கிடைக்கப்பெற்றது. இன்றைய என்னுடைய வயது முப்பத்திமூன்று. சரியான பருவம். சென்னைப்பட்டண வாழ்க்கை. அழகும், அன்பும், அமைதியும் நிறைந்த ஒரு மனைவி. பிள்ளைக்கலி தீர்க்க இரு பிள்ளைகள். கையில் கொஞ்சிக் குலாவும், மழலைச் சொல்லால் மகிழ்விக்கும் பால்மணம் மாறாப் பச்சிளங்குழந்தை ஒன்று. பள்ளியில் ஆறாம் வகுப்பில் பயிலும் பத்து வயதுப் பாலகன் ஒருவன். இத்துணை இன்பங்கள், உல்லாசங்கள் இருந்தும் வாழ்க்கை இனிக்கிறதா என்றால் இனிக்காமல் மாத்திரமில்லை; கசக்கவும் செய்கிறது. அலுவலகத்தில் என்னைப் பார்த்தால் வாலிபத்தில் மிடுக்குடன் விளங்கவேண்டிய நான் சோர்வுற்ற முகத்துடன் விளங்குகிறேன். வேலையை மேற்கொண்டால் சுறுசுறுப்புடன் உற்சாகமாய் விரைவில் செய்ய முடியவில்லை. உள்ளத்தில் உற்சாகமும், கருத்தில் கவலையின்மையும், வயிற்றில் வாட்டமின்மையு மிருந்தாலல்லவோ வேலை ஓடும்.

அதுதான் அறவே கிடையாதே. காரணம்! என் குடும்ப வாழ்க்கை. என்னைச் சுற்றி யமர்ந்துள்ள குடும்பம். பையன் பள்ளிச் சம்பளம் கேட்டால் பல சரக்கு மளிகையில் வேலை பார் என்று சீறி விழுகிறேன். மனைவி பண்டங்கள் வாங்கப் பணம் வேண்டுமென்றால் பதை பதைக்கிறேன். குடக்கூலி கேட்டால் நெஞ்சம் குமுறுகிறது. கடன்காரர்கள் நாலாபக்கமும் என்னைச் சுற்றி வீற்றிருக்கிறார்கள். அவர்களைக் கண்டால் நாணம் அச்சம், மானம் இவைகள் என் உடம்பைக் குறுகச் செய்கிறது. உணவு அருந்த அமர்ந்தால் பைத்தியம் பிடித்தவன்போல் பாதி உண்கையிலேயே எழுந்து விடுகிறேன். இவைகளுக்குக் காரணம்! என் வாழ்க்கையே. இதோ என் வாழ்க்கை.

பத்தாம்வகுப்பு வரையில் நெல்லையில் பயின்று வந்தேன். அப்பொழுது என் தகப்பனார் எங்கள் சொந்த ஊரில் அதுதான் திருச்செந்தூரில் ஆரம்ப ஆசிரியர் வேலை பார்த்து வந்தார். அத்துடன் இரண்டொரு மாணவர்களுக்குத் தனிப் பாடம் சொல்லிக் கொடுத்து ஒரு வகையாக காலம் தள்ளி வந்தார் நல்ல காலமாக என் தாயார் என்னுடைய பதினாறாவது வயதிலேயே இறந்து விட்டார். ஆம். உண்மைதான. இன்றைய என் அவலநிலை காப்பாற்ற வகையற்ற நிலை. என்னைப் பெற்றுப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த அருமைத்தாய் இறந்து விட்டதை வரவேற்கிறது. எனக்கு ஒரு அண்ணனும், தங்கையும் உண்டு. சிறு வயதிலிருந்தே என் அண்ணன் ஒரு முரடன். படிப்பில் மட்டம். என் தகப்பனார்க்கும், அண்ணனுக்கும் ஏற்பட்ட ஒரு சிறு தகராறு காரணமாக அண்ணன் யுத்த சேவையில் ஈடுபட்டான். அண்ணன் யுத்தத்தில் சேர்ந்ததன் காரணமாக, படிப்புக்கு உபகாரச் சம்பளம் பெற்றேன். பள்ளியிறுதியுடன் என் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்பினார் என் தகப்பனார். விருப்பத்தாலும், அண்ணன் ஆதரவாலும் தந்தையாரின் பெருத்த எதிர்ப்புக்கு மிடையில் சென்னையில் கல்லூரிப் படிப்பைத் தொடங்கினேன். என் கல்லூரி வாழ்க்கைதான் என் வாழ்நாட்களில் உல்லாசமான வாழ்க்கை. இன்பபுரி வாழ்க்கை. அண்ணன் அனுப்பும் பணத்தை வைத்துக் கொண்டு ஆனந்தமாக வாழ்ந்த வர்ழ்கை. கவலையற்ற மிடுக்கான வாழ்கை. அந்த நாட்களை இன்று எண்ணிப் பார்த்தால் அவ்வளவும் கற்பனையாகத் தோன்றுகிறது. அவைகளை எண்ணி யெண்ணி ஏக்க மடைகிறேன். அந்த நாட்கள் என்றாவது என் வாழ்நாளில் மீண்டும் வருமா? வரவே வராது என்பது திண்ணம். கல்லூரியை விட்டுப் பட்டத்துடன் வெளியேறினேன். வேலையிலும் அமர்ந்தேன். கலியாண வேட்டையும் என்னைப் பொருத்த மட்டில் வெகு விரைவில் முடிவுற்று இல்லறவாசியானேன். நான் மணம் செய்துகொண்டு இரண்டாண்டு புத்துலகத்தில் நல்ல இன்ப மயமாகத்தான் வாழ்ந்தேன். ஆனால் அதன்பின் என் வாழ்வின் வசந்தகாலம் ஆரம்பமாகும் என்று அன்று நான் அறியாதிருந்தேன். நான் மணம் செய்துகொண்டு

இரண்டாவது ஆண்டில் என் அண்ணன் யுத்தகளத்தினின்று விடுபட்டு சென்னைப் பஞ்சாலையில் நாற்பது ரூபாய் சம்பளத்தில் வேலை மேற்கொண்டான். அவர் மணமே புரிந்து கொள்ளாதவர். அவர் என் வீட்டுடனேயே இருக்கத் தொடங்கினார்.

பின்னும் மூன்றாண்டு கழித்து என் இருபத்தெட்டாவது வயதில் என் தங்கை மணம் செய்து வைக்கப்பட்டாள். அவள் வாழ்க்கை இன்பமயமாக இருக்க வேண்டுமென்று எண்ணமிட்டோம். தாயில்லாக் குறையை நிவர்த்திக்க நற்குணம் படைத்த அன்பு நிறை கணவனுக்கு மணம் செய்து வைத்து இன்புற எண்ணினோம். சாத்திரங்களையும். ஜாதகங்களையும் நம்பி பல மணமகன்களை மணப் பரீட்சையில் தள்ளினோம். ஜாதக நலன்கள் யாவும் அமையப்பெற்ற, நீண்ட ஆயுசு என்று சோதிடர் உறுதியாய் கூறிய, தாய் தந்தையற்ற, ஏன் இதைக் கூறுகிறேனென்றால் தாய் இருந்தால் மாமியார் கொடுமைக்கு ஆளாக வேண்டிவரும் என்று அஞ்சி அதனையும் ஆழ்ந்து கவனித்து வந்தோம். அவள் மணம் செய்து கொடுக்கபபட்டாள். சில மாதங்களே அன்பாய், ஆதரவாய், ஆனந்தமாய் வாழ்ந்தாள். அவளுக்கு அவ்வாழ்க்கை நீடிக்கவில்லை. அவள் வாழ்வில் காலதேவன் குறுக்கிட்டான். விதி விளையாடிற்று. மணம் நடந்து நேரே பத்தாம் மாதத்தில் அவ்வருடம் ஏற்பட்ட காலராவுக்கு மணமகன், என் மைத்துனன், என் தங்கையின் கணவன் இரையானான் நாங்கள் அலறினோம், அரற்றினோம். பயனென்ன? மணக்கோலத் தங்கை விதவையானாள். சமுதாயக் கயிறு அவள் கழுத்தினின்று அறுக்கப்பட்டது. வண்ணமலராய் வாழ வேண்டியவள் வாடி வதங்கிய மலரானாள். அவளை நானும் என் அண்ணனும் சென்று என் வீட்டுக்கு அழைத்து வந்தோம்.

என் தங்கை மணமானவுடன் !என் தந்தை ஆசிரியர் வேலையினின்று ஓய்வு பெற்றார். வேலையற்ற அவர் திருச்செந்தூரில் என்ன செய்ய முயுரிம். ஆகவே அவரும் சென்னைக்கு வந்து என் குடும்பத்துடன் சேர்ந்து கொண்டார். இந்நிலையில் தான் 'பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்' என்றபடி மீண்டுமொரு பேரிடி ஏற்பட்டது. அண்ணன் வேலை பார்க்கும் பஞ்சாலையில் வேலை நிறுத்தம் ஏற்பட்டது. பட்டாளம் புகுந்து தொழிலாளர்களை அடித்து நொறுக்கியது. போலீஸ் லத்தி அடிக்கு அகப்பட்டு என் அண்ணன் கால்களை இழந்தான். வேலையை விட்டான். வீட்டோடு வீடாய் அடங்கினான்.

என் தந்தை, அண்ணன், மனைவி மக்களுடன் இன்றைய வாழ்க்கை என் ஒருவன் சம்பளத்தைக்கொண்டு ஓட வேண்டியிருக்கிறது. விவவைத் தங்கையின் இருதயக் குமுறலையும், விம்முதலையும், ஏக்கத்தையும் உணர்கிறேன். நான் சிற்சில சமயங்களில் என் மனைவியுடன் கூடிக் குலாவும் பொழுது என் தங்கையை யெண்ணுகிறேன். மனம் புண்படுகிறேன். அவ

ளுக்கு மறுமணம் செய்து விடலாம் என்று எண்ணி என் தந்தையைக் கேட்டேன். அவர் மூடக் கொள்கையிலேயே ஊறிய பழம் பெருச்சாளி. வேதாந்தம் பேசுகிறார் இளம் பெண்ணின் இதயத்தை அறியாமல். சாதிக் கட்டுப்பாடு பேசுகிறார் உலக மறியாமலே. அவர்தான் உத்தரவு அளிக்காவிட்டாலும் துணிந்து மணம் செய்து வைத்துவிட்டால் பிறகு என்னசெய்யப் போகிறார் என்று துணிந்து தங்கையின் சம்மதத்தை அறியச் சென்றால் பேதைப்பெண்! தந்தையின் விருப்பத்திற்கு மாறாக எதுவும் செய்ய முடியாதென்றும், எனக்கு அவள் இருப்பது தொந்தரவாக இருக்கிறதென்றால் தற்கொலை செய்து கொள்வதாகவும் கூறி விட்டாள். பிறகு என்ன செய்வேன்? சமூதாயமே! எனக்கு சதி செய்யும் பொழுது நான் என்ன செய்ய முடியும். இப்பொழுது கூறுங்கள். வாழ்க்கை இனிக்குமா கசக்குமா என்று. ரூபாய் நூற்றைம்பதைக் கொண்டு ஐந்து நபரின் வாழ்க்கைத் தரம் எப்படி யிருக்குமென்று ஏன் எனக்கு இந்த வாழ்க்கை? என்னிடம் படிப்பில்லையா? பட்ட மில்லையா? உழைப்பு இல்லையா? ஒழுக்க மில்லையா? இருந்தும் ஏன் இந்நிலை? அதுதான் இன்றைய என் சமூகம். என் அண்ணன் உடல்நிலை நன்னிலையில் இருக்குத் பொழுது அவன் உழைத்த உழைப்பினால் பல்லாயிரக் கணக்காக பணம் சம்பாதித்த பஞ்சாலை முதலாளி அவன் கால் ஒடிந்து வேலை செய்யும் சக்தியை இழந்தவுடன் லகுவாக வேலையை விட்டு நீக்கிவிட்டு வேறு ஆள் நியமித்துக் கொண்டார். அவன் பிற்கால வாழ்க்கைக்கு ஏதாவது வழிவகை செய்தாரா? அதைப்பற்றி பணமூட்டைகளுக்குக் கவலையேன்? இவைகளைச் சமூகம் கவனிக்கும் நாள் என்று வருமோ? அன்று என் போன்றோரின் வாழ்வு வளம் பெறும். உழைக்கும் சக்தி உள்ளளவும் மாணவர்கள் பொருட்டு உழைத்து உழைத்து ஓய்வு பெறும் பொழுது அவர் பெற்றதென்ன? அதன் பின் அடைந்ததுதான் என்ன? அரசாங்க வேலையினின்று ஓய்வு பெற்றால் அரைச்சம்பளம் மாதம் பெறுகின்றார்களே அதுபோன்று எல்லாம் உழைப்பினர்க்கும் சரிநிகர் சமானமாக வழங்க சமுதாயம் திட்டமிடும் பொழுது என் போன்றோரின் வாழ்வு வளம்பெறும்! விதவைக் கண்ணீர் இன்று நாட்டிலே துடைக்க ஓரளவு முயற்சி எடுக்கப் படுகிறது. விரைவில் முழு வெற்றியை யடைவோம். ஒருவன் உழைப்பைக் கொண்டு பலர் வாழவேண்டிய நிர்ப்பந்தம் சமுதாயத்தினின்று அகற்றப்படவேண்டும். அல்லாத வரையில் வாழ்க்கை வளம் பெற்று சண்டை சச்சரவின்றி வாழ முடியாது.

தமிழைக் காப்பாற்று!

"சொல்லழகன்"

★

தமிழ்மொழி தமிழனின் மூச்சு—அதைத்
    தான்மறந் தாலவன் வாழ்வில்லை போச்சு
தமிழ்மொழி தமிழனின் கண்ணே—அதைத்
    தான்பேணா விடிலவன் வாழ்விலே மண்ணே! 1

பிணிநீக்கிச் சுகந்தருங் காற்று—உன்னைப்
    பெருமையாய் வளர்த்திடும் அமுதமாம் ஊற்று
மணிமுத்து எனில்தரும் வாரி—இன்ப
    வளந்தந்து மகிழ்வூட்டும் வற்றாதஆறு 2

சுவைசுவை கனிதருஞ் சோலை—எழில்
    சிந்தி மணம்வீசும் தேன்மலர்ச் சோலை
குவைகுவைப் பொன்தருஞ் சுரங்கம்—கவிக்
    குயில்களும் மயில்களும் கூத்திடும் அரங்கம் 3

உரந்தந்து களிப்பூட்டுஞ் சுவைப்பால்—தமிழன்
    உடலினை வளர்த்துமே உணர்வூட்டும் தனிப்பால்
புறநாட்டுப் 'புட்டிப்பால்' ஏனோ?—சுவைப்
    பொங்குந் தமிழ்ப்பா லுக்(கு)அது நிகர்தானோ? 4

கரும்பியும் தீஞ்சுவைச் சாறு—பேய்க்
    கரும்பை விரும்புதல் அறிவோநீ கூறு
நறுங்கனி நிழல்தரும் தருவை—நீத்து
    நவைக்கள்ளி நிழல்நாடிச் செல்லுதல் அறிவோ? 5

சொல்லுங்கால் நாவினில் மென்மை—பேச்சு
    செவியிலே பாயுங்கால் தேனினும் இனிமை
பல்லுடைக்கும் ஒலி யுண்டோ?—காசம்
    பட்டவன் படுந்துயர் ஒலிக்கையில் உண்டோ? 6

"சாலிவ ளர்க்கின்றோம்" என்றார்—உரச்
    சத்தென்று உப்புநீர்ப் பாய்ச்சியே நின்றார்
"வேலிநாங் கள்தமிழ்க்" கென்றார்—அதை
    மேயவரும் பகையை வரவேற்று நின்றார். 7

தமிழின்றித் தமிழன்வாழ் வில்லை—சுற்றுஞ்
    சங்கிலி யின்றிமி திவண்டி யில்லை!
தமிழினைக் கண்ணெனப் போற்று!—பெற்ற
    தாயினும் மேல்; அதைநீகாப் பாற்று! 8

அநாதை ★

ரா. சு. சுப்பையா

★

ஊர் ஊராய்த் தெருத்தெருவாய் அம்மா! அம்மாவென்று அவன் கதறிக் கதறி அழைத்திருக்கிறான். அவனுடைய அழைப்பைச் செவிகொடுத்து யாரும் கேட்கவில்லை. உண்மையிலேயே தனக்கு தாயில்லையா? பாசத்தோடு அணைக்க ஒரு ஜீவனில்லையா? என்று அவன் உள்ளம் எத்தனையோ தடவை ஏங்கி ஏங்கித் தவித்திருக்கிறது. அவனுடைய பெயரென்ன? ஊரென்ன? அவன் எங்கே பிறந்தான்? ஏன் இக்கதிக்கு ஆளானான் என்பது கூட அவனுக்குத் தெரியாது.

உண்மையிலேயே தாயில்லையா? அவனுக்குத் தாயில்லாமல் அவன் எப்படி இந்த உலகத்திற்கு வர முடியும்? விதவைகளின் கண்ணீரால் அணு அணுவாக அழிந்து கொண்டிருக்கும் இந்து சமூகத்திலே அவளும் ஓர் பால்ய விதவை. இயற்கையின் திருவிளையாடல்களை அவளால் தடுக்க முடியவில்லை. அதன்பலன் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அழகான குழந்தை. அதைத் தெருவில் போட்டு வர அவளுக்கு மனமில்லைதான். ஆனால் கொடிய சமூகத்தின் கொடுமைக்கஞ்சி தன் தாய்மை உணர்ச்சியைக் கொன்றுவிட்டு அச்சிசுவை நள்ளிரவில் நடைபாதையின் ஓரமாகக் கிடத்திவிட்டு வந்துவிட்டாள்.

கல்லுக்குள்ளிருக்கும் தேரைக்கும் உணவளிக்கும் இறைவன் அந்தச் சிசுவையும் எப்படியோ காப்பாற்றி விட்டார். ஒரு வருடம் இரண்டு வருடங்களல்ல; ஏழு வருடங்கள் கழிந்தோடி விட்டன. எத்தனையோ பேர்களிடம் பழகியிருக்கிறான். யாரோ ஒரு புண்ணியவான் அவனுக்கு ஊர்சுற்றி என்று பெயர் வைத்தார். எந்த மனிதனுக்கும் பெயர் ஒன்று இருந்துதானே ஆக வேண்டும்.

கடைசியில் அவன் எந்த ஊரில் பிறந்தானோ அதே ஊருக்குத் திரும்பி வந்தான். அவனுடையதாய் எந்த வீட்டில் வசித்து வந்தாளோ அதே வீட்டின் வாசலில் நின்றுகொண்டு, "அம்மா! வயிறு பசிக்குது. கொஞ்சம் சாதம் போடுங்கோ! தாயே என்று அவனைப்பெற்று நடைபாதையில் போட்டுவிட்டுச் சென்றாளே அதே தாயிடம்தான் அவன் பிச்சை கேட்டான். ஆனால் அவனுக்கு அவள் தான் தாய் என்று தெரியாது. அவளுக்கும் அவன் தான் தன்மகன் என்றும் தெரியாது. ஆனால் அந்தக் குரல் அவள் உள்ளத்தை எட்டிப் பிடித்தது போலிருந்தது. அவனைக் கண்டதும் அவள் உள்ளத்திலும், உடம்பிலும், வதனத்திலும் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அழுக்குப் படிந்த கந்தைத்துணி, பரட்டைத்தலை, அழுக்குப் படிந்த உடம்பு; பனையோலையால் செய்த பட்டை ஒன்று. இந்தக் கோலத்திலிருந்த அந்த ஏழு வயதுச் சிறுவனைக் கண்டதும் அவள் உள்ளத்திலே வேதனை கவிய ஆரம்பித்தது. ஒருநாள் நள்ளிரவில் நடைபாதையில் கொண்டுபோய் கிடத்திவிட்டு வந்த தன் குழந்தையின் முகத்தைப் போன்றிருந்தது அச்சிறுவனின் முகம். ஒருக்கால்

அவனாகவே யிருக்கலாமோ? அதுவும் நடந்து ஏழு வருடங்களாகி விட்டன. கொஞ்ச நேரத்தில் அவனைத் தன் மகனென நிச்சயித்துக் கொண்டாள். ஆனாலும் அவனை இரண்டொரு கேள்விகள் கேட்டாள்.

'உன் பெயரென்னப்பா?'

'ஊர்சுற்றி' என்று சிறுவன் பதிலளித்தான். 'உனக்கு அப்பா அம்மா இருக்காங்களோ?' 'அப்பா அம்மாவை நான் பார்த்ததேயில்லையே.' அதைக் கேட்டதும் அவள் உள்ளம் துயரத்தால் துடித்தது. அவன் தன்னுடைய புதல்வன் என்று தெரிந்து கொண்ட பின்பும் அவனைத் தன்னோடு இருக்கச் சொல்ல அவளுக்குத் தைரியமில்லை. சமூகத்தின் விதவிதமான அர்த்தமற்ற கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லவேண்டியதாயிருக்குமே என்றஞ்சினாள். அவனுக்கு வயிறு நிறைய உணவு கொடுத்து நல்ல ஆடையொன்றும் கொடுத்துத் தினந்தோறும் அவனை அங்கு வந்து போகச் சொன்னாள். அவனும் தினந்தோறும் தவறாமல் வந்துகொண்டிருந்தான். திடீரென்று அவன் இரண்டு, மூன்று நாட்கள் வராமற்போகவே அவளுக்கு சந்தேகமேற்பட்டது. ஒருக்கால் ஊரைவிட்டே போய் விட்டானோ அல்லது உடம்புக்கு ஏதாவது சுகவீனம் ஏற்பட்டிருக்குமோ? என்று இந்தமாதிரி பலவித எண்ணங்களால் அவள் உள்ளம் கலங்கிக் கொண்டிருந்தது. அன்று மாலை வழக்கம்போல் குளத்துக்குத் தண்ணீர் எடுக்கச் சென்றவள் பிள்ளையார் கோவில் மடத்துப் பக்கமாகச் சென்றாள். ஒருக்கால் அவன் மடத்தில் இருப்பானோ என்ற சந்தேகத்தில் தான் சென்றாள். பாவம்! அவனைப் போன்ற அநாதைகள் வேறு எங்கே தங்க முடியும். அவன் அங்கேதான் இருந்தான். ஆனால் எங்கிலையில் கிழிந்த பாயொன்றில் கருங்கல்லொன்றைத் தலையணையாக வைத்துக்கொண்டு படுத்திருந்தான். ஜுரத்தினால் அவன் உடம்பு நெருப்புப்போல் காய்ந்து கொண்டிருந்தது. ஜுரத்தில் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் அச்சிறுவனைக் கண்டதும் அவள் கண்களில் நீர் நிறைந்து, பார்வையை மறைத்தது. கண்களைத் துடைத்துக்கொண்டு அவனோடு பேசினாள். மூன்று நாட்களாக ஜுரம். இதுவரை மருந்தோ, ஆகாரமோ அவன் சாப்பிடவில்லை. குளிர் காற்றில் போர்த்திக் கொள்ளக்கூட அவனிடம் ஒரு போர்வையில்லை. அவள் உள்ளம் கொதித்துக் குமுறிக் கொண்டிருந்தது. நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் தன் அருமைப் புதல்வனை அப்படியோ விட்டு விட்டுப் போக விருப்பமில்லை அவளுக்கு. ஏழு வருடங்கட்கு முன்பு பிறந்த அச்சிசுவை அவள் சமூகத்தின் கொடுமைக்கு அஞ்சி நடைபாதையில் போட்டு விட்டு வந்தாள். ஆனால் இன்று அந்த சமூகத்தை எதிர்த்து நிற்க அவளுக்குத் தைரியம் வந்து விட்டது. அந்த சமூகம் மட்டுமென்ன? உலகனைத்தும் திரண்டு வந்தால் கூட அதை எதிர்த்துப் போரிட அவள் தயாராயிருந்

தியாகம் ★

டாக்டர். எஸ். ஏ. சஞ்சீவி

★

'ஆ மூர்த்தி!' என்ற குரலைக் கேட்டு திடுக்கிட்டு சப்தம் வந்த திக்கை நோக்கினேன். அதற்குள் யாரோ ஒரு கனவான் என் கையைப் பிடித்து அப்புறம் இழுத்துவிட்டார். அப்போதுதான் நான் மரண பூதத்தின் வாயில் நின்று தப்பியது தெரிந்தது. பெரிய லாரி ஒன்று என்னைத் தாண்டி சென்றது. மறுபடியும் என்னை அழைத்த அந்தத் திசையை நோக்கினேன். அது ஒரு அழகிய உயர்ந்த மாடிக் கட்டிடம் அமைந்த இடம். அதற்கடியில் ஜனத்திரள் சூழ்ந்துவிட்டது. நானும் கும்பலைத் தள்ளிக்கொண்டு உள் சென்றேன். ஐயோ! அந்த காட்சியைக் கூறவும் என் நாக் குழறுகிறது. அந்த கோர சம்பவம் என் மனக்கண்ணில் ஊனக்கண் வழிச் சென்று பதிந்துவிட்டது. ஒரு பெண்-இளம் பருவத்தினள். இரத்த வெள்ளத்தில் தவித்து துடித்துக்கொண்டு மூர்த்தி மூர்த்தி என்று முணுமுணுத்தாள். அருகில் சென்று பார்த்தேன். என் தலை சுழன்றது. என் உடம்பெல்லாம் குளிர் ஜுரக்காரனைப்போல் நடுங்கியது. 'சந்திரா' என்றேன் தடுமாற்றத்துடன். 'ஆ! தப்பிவிட்டீர்களா? அந்த லாரி' ......என்றாள் தழுதழுத்த குரலில். 'லாரியா?' என்று வினவும் பார்வையுடன் கேட்டேன். 'ஆம்; தங்களை பல வருடங்கட்குப் பின் இன்று கண்டதும் உள்ளத்தின் பூரிப்பு குமுறிக்கொண்டு மூர்த்தி என்ற மூல மந்திரத்துடன் வெளிவந்தது...ஆம்; அப்பா ......அதற்குள் தங்கள் மேல் மோத இருந்த அந்த நிஜாம் போலீஸ் லாரி; ஐயோ......' என்றாள் வலிபொறுக்க முடியாமல் துடித்துக்கொண்டே. ஒரு பரோபகார கனவான் என்னை அப்புறப் படுத்தி உயிர்ப்பிச்சை யளித்தார் என்றேன் சாந்தமாக. 'தமிழ்மக்களை துன்பத் தூண்டில் முள்ளில் சொருகி மரண மீன்களுக்கு காட்டும் நிஜாம் போலீஸ் லாரி எங்கே இரக்கம் காட்டி வண்டியை ஒதுக்குவார்கள்? கண்டிப்பாக தாங்கள் இறந்தே போவீர்கள்' என்று தாவினேன். அவ்வளவுதான். மூர்த்தி பரவாயில்லை. என் உயிர் உடலைவிட்டு விடைபெறுமுன் தங்கள் திருவுருவைக் கண்டு பேசும் நிலையைப் பெற்றேனே அதுவே போதும். காமப் பேயர்களாய், கல்நெஞ்சர்களாய் நம் இனத்தை வரை கேவலம் ஜீவனாகவே கருதாமல் இம்சைக்கடலில் அழுத்தும் இந்த நிஜாம் நாட்டில் உயிர் வாழ்ந்து கணவனையும் குழவியையும் அவர்கள் கைவாளுக்கு இறை கொடுத்து என் கற்பை விற்று மானம் அழிவதைவிட இறப்பதே மேல். மூர்த்தி என் ஆத்மா சாந்திக்கு வேண்டிக்கொள்' என்று கூறியபடி கண்களை மூடிவிட்டாள். 'ஆ! சந்திரா!' என்று கூறினேன். அவ்வளவுதான். 'சந்திரா! சந்திரா!' என்று கூறிக்கொண்டே ஒரு கனவான் ஓடிவந்தார். அவர் வேறு யாருமில்லை. என்னை லாரி அபாயத்தில் நின்று காப்பாற்றியவர்தான். அவர்தான்: சந்திராவின் புருஷர் என்று தெரிந்ததும் என் ஆச்சரியத்துக்கு எல்லையே இல்லை. என் நாட்காட்டியின் பழைய குறிப்பைத் தேடியது என் உள்ளம்.

• • •

அன்று புது குடித்தனமாக எங்கள் எதிர் வீட்டில் ராதா கிருஷ்ண சாஸ்திரி குடியேறியதும், வழக்கமாக புது மனிதரை கண்டதும் வாசலில் கூடும் சிறுவர்கள் கோஷ்டியில் நானும் நின்றேன். அவர்களில் என்னைத்தான் தேர்ந்து எடுத்தாள் சந்திரா என்ற சாஸ்திரிகள் பெண் தன உடன் விளையாட தோழனாக. புது சிநேகம் அதிலும் பெண் தோழி என்ற தனி மதிப்பில் என்னுடன் நின்ற சிறுவர்களை உதறித் தள்ளவிட்டு அவளுடன் விளையாடச் சென்றேன். கடியார முள்கள் சுழலுவதுபோல் எங்கள் வாழ்க்கை சுழன்று கொண்டிருந்தது. நித்திரை காலம் தவிர இதர நேரங்களில் நாங்கள் ஒன்றாகவே வளர்ந்தோம் எங்கள் நட்பு பெற்றோர்களையும் சேர்த்து வைத்தது.

'மூர்த்தி, நாம் பெரியவர்களாகப் போனதும் கலியாணம் செய்துகொண்டு அப்பா அம்மாபோல் பண ஆசையில் உழலாமல் காந்தி தாத்தா கஸ்தூரிபாயம்மைபோல் பொதுத் தொண்டு செய்வோம்' என்று கூறி என் கைகளைப்பிடித்துக்கொண்டு குதிப்பாள். அவள் எதார்த்த முகத்தில் வடியும் அந்த எழிலைப் பருகிக்கொண்டே நிற்பேன் நான். எங்கள் அன்புச்செடி வளர்ந்து தளிர்விடத் தொடங்கியது பருவ மொட்டுகளாக விளங்கின எங்கள் வாழ்வில் ஒரு புது சம்பவம் அன்று நிகழ்ந்தது. சந்திரா புஷ்பித்துவிட்டாள். அவள் வனப்பு பதின்மடங்கு அதிகரித்துவிட்டது. அந்த மதுர மணம் என் உள்ள நாசியைத் துளைத்தது.

கனிவிட்ட மரமும் பூத்தமலர் செடியும் காவலுக்கு இலக்காவதுபோலானது. இப்பொழுதெல்லாம் சந்திரா என்னுடன் சகஜமாகப் பேசவில்லை. சமூகம் எங்கள் அன்பின் மத்தியில் வேலி போட்டுவிட்டது. நான் கலாசாலைக்குப் போகும்பொழுது சுதந்திரமாக என் கழுத்து அவள் வீட்டு வாசல் பக்கம் திரும்பிவிடும். அவளும் ஜன்னலில் நின்று காட்சியளிப்பாள். அந்தச் சாந்த பார்வையில் அப்பப்பா! எவ்வளவு விஷயங்களை கூறிவிடுவாள். இப்படியே ஓடிக்கொண்டிருந்த எங்கள் வாழ்க்கை சகடுக்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது அவள் தகப்பனாருக்கு உத்தியோக மாற்றம் என்ற செய்தி. எதிர்வீட்டு சாஸ்திரி

தாள். சமூகத்திற்கு அஞ்சி அவள் தன் மைந்தனை எமனுக்குப் பலியிட விரும்பவில்லை. அதைத் தடுத்து அவனை எப்படியாவது காப்பாற்றி விடவேண்டுமென்ற ஆசை அவளுக்குண்டாயிற்று. நோயோடு வேதனைப் பட்டுக் கொண்டிருக்கும் சிறுவனை எடுத்துத் தன் தோளில் போட்டுக்கொண்டு வீடு நோக்கி விரைந்து சென்றாள்.

தன்னுடைய செய்கைக்காக சமூகம் தனக்கு என்ன தண்டனை கொடுக்குமோ என்பது பற்றி அவள் கிஞ்சித்தும் அஞ்சவில்லை. ஆனால் அவள் உள்ளத்திலே ஒரே யொரு ஆசை மட்டும் இருந்தது. அது தன் புதல்வனை எப்படியாவது காப்பாற்றி விட வேண்டும் என்பதுதான்.

மதுரைக்குப் போகிறார், என்று எங்கள் அப்பா கூறியதும், 'நல்ல முகராசிக்காரி சந்திரா யாரை கட்டிண்டு வாழப்போகிறாளோ? என்றாள் என் தாயார் சலிப்புடன். ஒரு நாள் மாலை சர்மான்கள் வண்டியில் ஏறுவதை ஏக்க கண்களுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது என் வருத்தத்தின் மருந்தாகத் தோன்றினாள் சந்திரா. 'போய்வருகிறேன். மறந்துவிடாதீர்கள்.' இதுதான் அவள் உதடுகளின் பயணச்சொல். மறப்பதா மறித்தால்தான்' என்றேன். அதுவே என் பிரிவுபசார வார்த்தைகள் அந்த சௌந்திரமுகம் என அகக்கண்முன் தோன்றாத நாளே இல்லை. உன்மத்தம் பிடித்தவன்போல் சிலகாலம் தள்ளினேன். எங்கிருந்தால் என்ன? அவளை மணந்துகொண்டால் எப்போதும் நம்முடனே இருக்கப் போகிறாள். கல்லூரி படிப்பு முடியட்டும் என்று மனதைச் சமாதானம் செய்துகொண்டேன்.

அன்று கல்லூரிக்கு கிளம்பிய என்னை வழிமறித்து எமதூதனைப்போல் ஒரு தபாலைக் கொடுத்தான் தபால்கார கந்தசாமி. அந்தக் சுபகடிதம் சந்தோஷ உணர்ச்சியை தருவதற்கு பதில் என் உள்ளத்தில் துயரப் புயலைக் கிளப்பிவிட்டது. பாலிய முதல் அன்புக்கயிற்றால் கட்டி பருவத்தில் காதல் அமுது நிரப்பிக் காட்டி அதை பருகும் சமயத்தில் மற்றொருவர் கையில் ஒப்புக் கொடுப்பதென்றால் என் மனம் என்ன நிலையில் இருக்கும் என்று அதைப்போல் அனுபவித்தவர்களுக்குதான் தெரியும். சந்திராவுக்கும் ஹைதராபாத் பாங்கு மானேஜருக்கும் திருமணம் என்ன கடூரமான செய்தி இது. இதற்கு சந்திரா சம்மதித்திருப்பாளா? துரோகி, வேஷக்காரி. ஆசைகாட்டி மோசம் செய்த சண்டாளி. சே, இருக்காது அவள் சம்மதித்திருக்கமாட்டாள். இது கடிமணமாகத்தான் இருக்கவேண்டும். இவ்விதமாக என் பஞ்சபூதங்கள் போட்டி இட்டுக்கொண்டிருந்தன.

காலதேவன் வருஷ சக்கரத்தை புரட்டித் தள்ளிக்கொண்டிருந்தான் என் மனதில் உள்ள சந்திராவின் சந்திர பிம்பம் மட்டும் அஸ்தமிக்கவே இல்லை. ரயில் விபத்தில் என் பெற்றோர்களைப் பலியிட்டேன். இந்திய தேசிய இயக்கத்தில் இறங்கினேன் இன்று ஹைதராபாத் இந்தியர்கள் நிஜாம் ஆட்சிக் கிடுக்கியில் தவிக்கும் இந்த நேரத்தில் அருமைத் தலைவர்கள் சிறைக்கூட்டில் வாடும் நேரத்தில், மாணவர்கள் கொலையுண்டு வீதியில் உருளும் இந்நேரத்தில், தமிழ்நாட்டுச் சகோதரிகள கற்பைப் பறிகொடுத்து கைபொருளை இழந்து பரதவிக்கும் இந்த நேரத்தில், ஹைதராபாத்தில் தொண்டர் சேவை செய்ய வந்த சமயம் இன்று என் வாழ்க்கை குமுறல் அலைக்கு அணைபோல் காட்சி தந்து மறுகணம் துக்க சமுத்திரத்தில் என்னை அமுழ்த்திவிட்டாள் சந்திரா.

• • •

அப்பொழுது ஒரு கூட்டம்எங்கள் கும்பலைத் தகர்த்தது. இறந்த சவத்திடம் அகப்பட்ட நகைகளை பொறுக்கிக்கொண்டு ஓடியது. திக்பிரமை கொண்டவன்போல் ஸ்தம்பித்து நின்றுவிட்டேன்.

மூளையும் அறிவும்

டர்பன்—ச. முனிசாமி

★

ராஜ தந்திரிகளென்று கூறும் பெரிய தலைவர்களெல்லோரும் அறிவற்ற குழந்தைகளுக்குச் சமானமெனப் பேர்பெற்ற மனோதத்துவ சாஸ்திரியான டாக்டர் எலிஸபெத் ஸ்லோன் சொஸ்ஸர் கூறுகிறார். மனிதர் அறிவு சரியான பக்குவ மடையாததே இதற்குக் காரணமென்றும், பெரும்பான்மையான மேதாவிகளின் அறிவு சிறு குழந்தைகளின் அறிவுக்குச் சமமாக இருப்பதே இதற்குப் போதிய சான்றாகுமென்றும் அவர் கூறுகிறார். உலகில் யுத்தம், கொலை, கொடுந்துன்பங்களிருப்பதற்கு மனிதர் அறிவு நல்ல பக்குவ மடையாததே முக்கிய காரணமென்று அவர் வலியுறுத்துகிறார்.

மனிதர் அனைவரும் பொதுவாக அறிவாளிகள் என்றும், நாகரிகத்தில் சிறந்து விளங்குகின்றனரென்றும், ஒரு எண்ணம் இருந்து வருகிறது. ஆனால், டாக்டர் எலிஸபெத் ஸ்லோன் சொஸ்ஸர் அது தவறு என்று கூறுகிறார். இவர் ஒரு பெரிய மனோதத்துவ ஆராய்ச்சிக்காரர். இதற்கு முன்னர் எவரும் இக்காரணத்தைக் கூறியது கிடையாது. அவர் மால்வெர்ன் என்னுமிடத்தில் செய்த ஒரு பிரசங்கத்தில் குறிப்பிட்டதாவது:

'சகல மனிதரிடத்தும் மனோதத்துவ சாஸ்திரந்தான் தலைசிறந்து விளங்குகிறது. பொதுவாக உலக மக்கள் அனைவரிடமும் சிறு பிள்ளைத்தனமான குணங்களே காணப்படுகின்றன. அதுவே யுத்தப் பேச்சுகளுக்கு முதற்காரணம். துரதிர்ஷ்டவசமாய் பெரிய ராஜதந்திரிகளாய் இருப்பவர்களில் அநேகருக்கு இந்த மனோதத்துவ ஆராய்ச்சியே கிடையாது. ஆகையால், அவர்கள் வயது முதிர்ந்தவர்களாய் காணப்பட்ட போதிலும், அவர்கள் மனம் முதிர்ந்த மானிட அறிவு பக்குவ மடையவில்லை. அவர்கள் எண்ணம் குழந்தைகளைப் போன்றதாகவே இருந்து வருகிறது.

வயது வந்தவர்களில் பெரும்பாலோரை மனோதத்துவ சாஸ்திரப்படி பார்க்குமிடத்து, பதினாறு அல்லது, பதினேழு வயதுடையவர்களாகவே காணப்படுகிறார்கள். தற்காலத்தில் வாழ்க்கையில் வெறுப்புக் கொள்கிறவர்களின் தொகை அதிகமாக விருக்கிறது. வாழ்க்கையின் உண்மைத் தத்துவங்களை அறியாமலிருப்பதுவும் இதனாலே தான். இவர்களின் அறிவு சரியானபடி வளர்ச்சி பெறவில்லை என்றே கூறவேண்டும். ஒரு மனிதனின் அறிவு எவ்வளவுக்கு வளர்ச்சி யடைந்திருக்கிறதோ, அவ்வளவுக்கு அவன் குணமும் மாறியிருக்கும். தனது வாழ்க்கையைச் சந்தோஷமாக நடத்திவர எவ்வளவு தெரிந்திருக்

கிருனே, அதிலிருந்து தான் அவன் அறிவின் வளர்ச்சியையும் நிதானிக்கலாம்.

ஒருவனது புத்தி கூர்மை, அவனுக்கு அமைந்துள்ள மூளையின் பருமனைப் பொறுத்திருக்கிறது எனச் சிலர் கருதுகிறார்கள். அது தவறு. பெரிய மூளையைப் படைத்துள்ள ஒரு கூலிக்காரனைவிட சிறிய மூளையைக் கொண்ட, படித்த ஒரு பெண் அறிவில் சிறந்து விளங்கலாம். பருமானம் ஒரு காலத்திலும் அறிவைக் குறிக்காது. நம்மில் பெரும்பான்மையோரின் அறிவு பக்குவ மடையாமலிருக்கிறது. அது நமக்கும், பிறருக்கும் பெரும் தீமையாக இருக்கிறது. ஆகவே, மனிதர் அனைவரும் நன்மையடையும் பொருட்டு ஒவ்வொருவரும் அறிவை பக்குவமாக்க முடியு மென்பதே எனது கருத்து.

குழந்தைகளின் அறிவு விருத்தியும், மனோ நிலையும் எவ்விதமிருக்கிறது என்ற ஆராய்ச்சி, பல வருடங்களாக நடைபெற்று வருகிறது. காலஞ்சென்ற புரொபஸர் ஹக்ஸ்லியின் புத்திரி என்னிடம் ஒரு சம்பவத்தைப் பற்றிக் குறிப்பிட்டாள்.

ஒருநாள் அவர் வீட்டு மாடியில் குழந்தை அழுகிற சத்தம் கேட்டு அவர் தாய் மாடிக்கு ஓடினார். அங்கே ஆறு மாதக் குழந்தை யொன்றை ஹக்ஸ்லி வைத்திருந்தாராம். பேர் பெற்ற ஆராய்ச்சிக் காரரான தார்வின் ஒரு ஊசியால் அந்தக் குழந்தையைக் குத்தி, அது துன்பப் படுகிறதையும், சிறிது சர்க்கரை கொடுத்த போது இன்பமடைகிறதையும் கவனித்து ஒரு புஸ்தகத்தில் அவ்வப்போது குறித்துக்கொண் டிருந்தாராம். இதைக் கண்ட அவர் தாயார் அவர்களை வெகுவாகக் கோபித்துப் பேசினார். சாதாரணமானவர்களின் அறிவு 17 வயதுக்கு மேல் விசாலமாவதில்லை. நமது அறிவை நன்கு பண்படுத்தி உபயோகிக்க யாவராலும் முடியும். சாதாரண அறிவு கொண்ட சிலருடன் போட்டி போட்டு ஜயமடைய வேண்டுமென்பது இதன் அர்த்தமல்ல. யாவரும் உலக நன்மையை உத்தேசித்து அறிவைப் பக்குவப்படுத்துவது என்றால், தன்னிடமுள்ள சகல நன்மையான குணங்களையும், தீமையான குணங்களையும் நன்கு தெரிந்து கொள்ளுவதே அறிவைப் பக்குவப் படுத்துவதின் கருத்து. இதுவே சுகமடைய வழி. அதிக புத்திசாலியாக விளங்குவதைக் காட்டிலும், பொது அறிவில் சிறிது மேன்மையாக விளங்குவது பலருக்கு நன்மையாக இருக்கும். இவ்விஷயத்தில் தற்கால ஆண்களைவிட பெண்களே சிறந்தவர்களாக விருக்கிறார்கள். குழந்தைகள் வளர்க்கும் விஷயத்தில் பெண்கள் மிகுந்த சிரத்தை எடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. பெண்களே மக்களைப் பக்குவப் படுத்த வேண்டி யிருப்பதால், சகல பெண் மக்களும் அறிவை விசாலப்படுத்த வேண்டியது அவசியமாகும். மக்கள் அனைவரும் தங்கள் அறிவையும், மனதையும் சிறந்த வழியில் உபயோகிப்பார்களேயானால், உலகத்தில் யாவரும் இன்பம் பெறலா மென்பது எனது முடிவான கருத்து."

"நானென்ன செய்யட்டும்!"

ஜி. தியாகராஜன்

★

சிறுமையை வேரறுக்கும் செந்தமிழ்ப் பாஇயற்றும்
சிந்தனைச் சிற்பியெனும் சீலரையே நானணுகி
"வறுமையே கண்டறிந்த வன்சொற் கவிஞ! நீர்
வாழ்வில் வளம்பெற்ற வகைதான் என்ன"வெனப்
பொறுமையுடன் நானொருநாள் புதுமையாய்க் கேட்டிடவும்
புன்னகை பூத்துபெரும் புலவரும் தலையசைத்துத்
"திறமையிதில் ஒன்றுமில்லை செப்புவேன் கேளு"மெனத்
தெம்புடன் எனைநோக்கித் தெளிவுடன் கூறலுற்றார்.

"வண்ணப் புதுக்கவிதை வடித்திட்ட நாளிலெலாம்
வறுமையெனும் பெருநோயே வந்தெனை வாட்டியதால்
எண்ணத் தொலையாத எத்தனையோ பெருஞ்செல்வர்
எள்ளி நகையாடி இகழ்ந்தே யுரைத்திடவும்
திண்ணமாய்க் கூறுகின்றேன் தேகநிலை குன்றியதால்
திகைத்துமே இனிஉலகில் உயிர்ப்பதே அரிதென்று
உண்ணத் தெவிட்டாத உண்மைக் கவிதைகளை
ஓரிடத்தில் வைத்துவிட்டு உய்யும்வழி ஆராய்ந்தேன்.

கல்விச் செறிவில்லாச் செல்வரையே நானணுகி
காலத்திற் கேற்றபடி கவின்மொழிகள் தான்புகன்று
சொல்வண்ணச் சித்திரத்தில் சுத்தநிர் மூடரையும்
சூராதி சூரரென சுயகவியே தான்பாடிப்
பல்வேறு வழியெலாம் பாரிலுள்ள மக்களிடம்
பண்பட நடித்துமே பணத்தையே சேர்த்தவுடன்
நல்வரவு கூறியே நாடென்னை அழைத்தது
நகைக்காதே நற்றமிழா! நானென்ன செய்யட்டும்!"

விதவையின் கதறல்

ஆர். எஸ். சங்கரசுப்பு

★

சுந்தரமான வானிலே, சந்திரன் மேகக்கூட்டங்களின்றும் விடுவிக்கப்பட்டுத் தன் தண்ணிறை ஒளியை வாரி இறைக்கிறான். மனமொருமித்த இரு காதலர்கள் சுறு சுறுப்பான இன்பவாழ்க்கையில் உல்லாசப பிரயாணம் செய்கின்றனர். இன்பத்திற்காகவே பிறந்தவர் போலும்!

என் வரையில் முன்னாளில் வரைந்த எண்ணப்போக்கின்படி சில நாளாயினும் இனிய வாழ்வு வாழ எண்ணித் துடித்தது மனம். விடிந்தது கலியாணம்; விழுந்தது வாழ்வில் பேரிடி. என் மாமன் மகளைத்தான் மணம் புரிந்தேன். இருந்தாலும் காதலுக்காக விட்டில் பூச்சியென மனம் தாவிக்கொண் டிருக்கின்றது என் மனம். ஏன்?

முன் ஒருநாள் கோடைக் கானலிலே, அழகிய நீரோடையிலே, உல்லாசப் படகிலே சென்று கொண்டிருந்தேன். அங்கே நிம்மதியான நீலவானிலே என் மனம் இம்மை பற்றிக் கோட்டை கட்டிக்கொண் டிருந்தது. கண்ணுக்கெட்டிய தூரத்திலே விண்ணை அளாவிப் பற்றிப்பிடித்தது மலையடிவாரத்தில் ஜ்வாலை. என் எண்ணக் கோட்டையும் இதில் பற்றிக்கொண்டதே என எண்ணினேன்.

எதிரில் தனக்குத்தானே நிகரென விளங்கும் அழகிய ஒரு நங்கை "வாழ்க்கையில் மீட்சி" என்ற ஒரு புஸ்தகம் ஒரு கையிலும், துடுப்பு ஒரு கையிலுமாகப் படகிலமர்ந்து ஓட்டிக்கொண்டு வந்தாள். வெடுக்கென நழுவ விட்டுவிட்டாள் கையிலிருந்த துடுப்பை. இடுக்கிலகப்பட்ட உயிரெனத் துடித்தாள். படகை நெருங்கினேன்; கைகொடுத்து உதவினேன். தன் உயிரில் உணர்ச்சியுடன் ததும்பும் ஏதோ ஒருவித புத்துணர்ச்சி கிடைக்கப்பெற்றவள் போன்று பெருமூச்சுடன் என்னை நோக்கினாள்; பேசத் தவித்தோம்; பின் உள்ளக்கிடக்கையைத் தெள்ளத் தெளியச் சொல்ல மெல்ல மெல்லத் துணிந்தோம். இருவருமறிந்தோம் எங்கள் இன்ப ஊற்றை. அடுத்த ஒரு படகில் விரைந்து சென்று விட்டாள். அவள் விலாசமறிய மறந்துவிட்டேன் என்பது என் விசாலமான அறிவிற்கு இப்பொழுதுதான் புலப்பட்டது.

"காதலர்களிடம் ஊசலாடும் வார்த்தைகள் தன் நினைவின்றி மாசுமறுவில்லாத ஊற்றுப் பெருக்கென ஓடிவரும் வார்த்தைகளே எனவும், தன் சுயமனமாறிய கிறுக்கன் ஒருவனிடம் நாம் எதிர்பார்ப்பவை தன்னையுமறியாமல் அப்பொழுது உதித்த உண்மை வார்த்தைகளே அன்றி வக்கீல்கள் சொல்லிக்கொடுக்கும் சாட்சியங்கள் போன்றவை அல்ல" என்பதையும் அறிந்தேன்.

நான் படித்த கதைகளில் காதல் சந்தர்ப்பங்களில் காதலர்கள் சந்திப்பில் ஏற்பட்ட அசந்தர்ப்பங்கள் என்னிடமும் ஏன் ஏற்படக்கூடாது என எண்ணினேன். "காதல் நீதியில் எனக்கொரு நீதியா?"

மறுநாள் காலையில் குளித்துவிட்டு அன்றைய பத்திரிகையைப் புரட்டினேன். வேலைக்காரன் என் கையில் ஒரு கவரைக் கொண்டு வந்து கொடுத்தான். கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவ்வியது அதன் கருத்துக்கள்:

"நம் சந்திப்பு வருங்கால வாழ்வை ஊர்ஜிதப் படுத்திற்று. நம் காதலின் நாதம் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருக்க நம் உள்ளத்தை என்றென்றைக்கும் பக்குவம் செய்துகொள்ளுவோம். தங்கள் சாவிக்கொத்துடன் இணைக்கப்பட்ட இருவகை விலாசங்களும் எனக்குக் கிடைத்தன. சந்தோஷம் கொண்டேன்"—நிர்மலா.

மறுகணம் சந்திக்க வசதியில்லாது போகவே தபால் வாயிலாகவே எங்கள் பரிபூரண ஆவலைப் பறிமாறிக்கொண்டோம். ஆனால் சந்தர்ப்பம் எங்களைப் பெற்றோர்களின் வேண்டுகோளின்படி வேறு மணம் செய்துகொள்ள வற்புறுத்திற்று. சந்தர்ப்பத்திற்கு இடமும் அளித்தோம். வற்புறுத்திற்று சாதி சமயம், வீதி வழியே முரசும் கொட்டுகின்றது-வேதங்களில் இவ்விதி இல்லை என. ஆக நாதியற்றவர்கள்போன்று காதலர் வீதி வழியே வாழ்க்கையை வெறுத்தும்போகின்றனர்; இச் சேதி கேட்டு நியாயம் வழங்க யாருமிலர் என எண்ணி எண்ணி ஏங்கிச் செல்கின்றனர். வாழ்க்கையில் வெற்றியடையா மனம் இப் பரந்த மேதினியில் துறந்த வாழ்க்கைச்குரிய இடம் தேடப் புகுந்துவிட முயலுகின்றது. "நாட்டில் இயற்கை அறிவை ஒருவன் வாழ்க்கை முயற்சியில் காணும் தோல்வியால் தான் இழக்கின்றான் என்னலாம். நாட்டின் பணியிலே சாக எண்ணியவன் வீணிலே மாய முயலுகின்றான். பெரும்பாலும் படித்தவர்களின் காதல் பாதையிலேதான் பிடிக்கின்றான் சனியன் என்பானும். பொறுக்க முடியாமல் மனத்தளர்ச்சி யுறுகின்றனர். அவர்களைப் பெற்ற நாடும் பொலிவற்றுப் போகின்றது."

அவளை மணந்த கணவனும் பிணமாகி விட்டான் ஒரு சில வாரத்திலே என்ற செய்தி முன்னிலும் என்னை வாட்டிற்று. என்னை அவளும், அவளை நானும் அயர்ந்த வாழ்க்கையில் துயருடன் வாழ்ந்து வருகின்றோம் என்பதைமட்டும் அறிந்தோம்.

ஐயோ! விதவை என்னும் பட்டமும் சூட்டப்பட்டு விட்டாள். இப்பட்டம் கபடமனமுள்ள சுற்றுப்புறத்தாருக்கு எவ்வித ஆர்ப்பாட்டத்திற்கும் இடமளிக்கின்றதே தவிர ஏதேனும் மறுமணம் அளித்து முற்பட்ட வாழ்க்கைக்கு உதவமாட்டேன் என்கின்றது இம்மறுபெயர்.

சிற்சில நாட்களில் அவள் ஊரிலேயே ஆசிரியராக அமர்ந்தேன். சில சமயம் என் கண்களில் பட்டாள். நாளடைவில் சந்தித்துப் பேசிவரச் சந்தர்ப்பம் இடமளித்தது.

ஐயையோ! அவள் உள்ளம் நொந்து போகின்றாள்; உள்ளம் நொந்து உதிரக் கண்ணீர் சொரிகின்றாள்; அவ்வுதிரக் கண்ணீர் விழலுக் கிறைத்த வெற்று நீராகத்தான் போகின்றது. அவள் போன்ற விதவைகள் சிலரே என்று அச் சமூகத்தார் உதாசீனம் செய்தாலும் அவள்போன்றவர்கள் அநேகர் சின்னாபின்னமாய் கன்னாபின்னமாய்ச் சிதறுண்டு கிடக்கின்றனர்.

மனிதர்களோ என்றால் தத்தம் வாழ்க்கையை ஏதாவது ஒன்றை விருப்புடன் நோக்குபவர்தான் உலகில் தத்தம் வாழ்க்கையை வலியுறுத்த முயற்சிக்கின்றனர். ஆனால் மாசு மறு வற்ற உண்மையான தூய அழகை வெளிப்படுத்தும் வெண்மையான உடை தரித்த விதவைகளென அழைக்கப்படுகின்றவர்களோ என்றால் சீரழிவிற் கிலக்காகின்றனரே அன்றி வேறு எவ் வாழ்க்கையை எதிர் நோக்கி யிருக்கின்றனர்?

அநேக தடவைகள் தன் நிலையற்ற, சுகமற்ற வாழ்க்கையை வெறுத்து அவள் உயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்து இருக்கின்றாள்; அதைத் தடுத்து இருக்கின்றேன். ஏன்? சாதி சமயம் சாத்திர ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சோதிமயமாய் விளங்கும் (ஏனைய சமூகத்தில் விளங்கும் விதவா விவாகம்.) மறு மண வாழ்க்கையை நறுமணங் கமழப் புகழ்விப்பார்கள் இச் சமூகத்தாரும் என்று எண்ணித் தான் அவளைக் காப்பாற்றத் துணிந்தேன். உண்மையில் அவள் படும் புண்பாட்டிலிருந்தும் சிறிது மனந்தேறி அண்மையில் வரும் என்று நினைத்த மறு மண ஆதிக்கத்தில் இடம் கிடைக்கப் பெறுவாள் என எண்ணியே அவளைத் தினமும் சந்தித்துத் தேற்றியும் வந்தேன். நான் என் மனைவியுடன் மனம் ஒருமித்து வாழ்ந்தால்மட்டும் தான் உயிர்வாழ்வதாக உறுதி கூறினாள்; நானும் ஆமோதித்தேன். இதுதான் எங்கள் சந்திப்பின் இரகசியம்.

ஆனால் சந்தேக மனப்பான்மை கொண்ட அநேகர் எங்கள் சந்திப்பில் சந்தேகங்கொண்டு தூற்றினர். முயற்சியில் வெற்றி காணச் சகித்தும் வந்தோம். ஆனால் பின்னும் பேசினர். பாவம்! பெண் தானே! என்னை யறியாமல் கண்ணயர்ந்து விட்டாள்-நான் சொன்ன மறுமண வாழ்க்கை நாட்கள் விரைந்து போவதை எண்ணியேதான். அவள் இறந்ததும் என்னால்தான் என்று தூற்றுகின்றது இப்பாழும் சமூகம். அவள் கடைசியில் எனக்கு விடுத்துச் சென்ற கடைசி வார்த்தை "உங்கள் வாழ்க்கையில் வெற்றிபெற்று, உங்கள் முயற்சியிலும் வெற்றிபெற்று என் போன்ற சகோதரிகளுக்காயினும் மறு மண வாழ்க்கையின் மகோன்னத பதவி கிட்டட்டும். எங்கள் போன்றவரின் இரத்தக் கண்ணீரானது இப்பாழும் சமூகத்தாரைத் தட்டி எழுப்பட்டும். இதுவே என் கடைசி அவா."

என் வாழ்க்கை அவள் ஆசிப்படி நன்கு நடைபெறுகின்றது. ஆனால் "ஐயோ, இத்தனைநாளில் எத்தனை எத்தனைபேர் மாண்டனரோ? இவர்கள் வாழ்க்கையில் முழுதும் வெற்றிபெற்றால் கணவன்மார் மழலைக்கை முத்தங் கண்டு மனமகிழ்வெய்துவார்கள். மனவெழுச்சியுற்று வையகம் புகழ நாடும் ஏனைய மக்களும் சந்தோஷமாக வாழப் பாடுபடத் தூய்மையான சந்தோஷ மனதுடன் துள்ளி விடுவார்களே."

"இனியாயினும் அந்தச் சமூகத்தார் திட்டவட்டமான முடிவான தீர்மானங்கள் நிறைவேற்றி சரியான மறுமணமெனும் நறுமண ஆக்க வேலையில் ஈடுபடுவார்கள்" என எண்ணுகின்றது என் மனத்தில் எழுந்த நினைவூற்றுக்கள்.

காப்பிக் கவிஞர்

எல். ஹரிராம்

இடம்:—ஸாயிபவான் ஹோட்டல்.

பாத்திரங்கள் கவிஞர். ஒருவர்,
இன்னொருவர், மற்றும் ஒருவர்,
ஹோட்டல் முதலாளி, பையன்.

கவிஞர் வருகிறார் காபியருந்த. மற்றவர் அருந்திக்கொண் டிருக்கின்றனர்.

ஒருவர்:—(கவிஞரைக் கண்டதும்) வணக்கம் கவிஞரே, வரணும், வரணும்.

இன்னொருவர்:—அடடா, கவிஞரா? வாங்க, வாங்க.

மற்றும் ஒருவர்:—வந்துட்டாரைய்யா, கவிஞர்.

கவிஞர்:—

வருக வருக வெனவர வேற்றீர்,
பெருகிட அன்பு வெள்ள மென்றே,
வணக்கம் வணக்கம் ஏற்றுக் கொள்வீர்,
மணக்கும் காபி ஹோட்டலில் உள்ளீர்.

ஒருவர்:—உக்காருங்க,........உக்காருங்க.

இ-ஒ:—வந்ததுமே கவிமழை பொழியுறாரே.

ஒரு:—தமிழ்ப்பயிர் வாடாமல் இருக்கத்தான்.

ம-ஒ:—அணுக்குண்டு சகாப்தம் ஆசு கவியில்லையா?......

ஒரு:—அணுக்குண்டுன்னு, ஏன் அழிவுப்பெயரைச் சொல்றீங்க. கவிஞர் அழிவிற்கா? ஆக்கத்திற்கல்லவோ?

இ-ஒ:—காந்தியுகக் காளமேகக் கவியரசர்ன்னு சொல்லும்.

ஒரு:—(ஹோட்டல் பையனைக் கூப்பிட்டு) "ஸ்டிராங்கா," ஒரு கப் காபி கொண்டுவா, நம் கவிஞருக்கு.

இ-ஒ:—"ஸ்பெஷல்" காபியா கொண்டுவாப்பா. காபியைக் குடிச்சதும் கவிதா மழை வர்ஷிக்கணும். ஆமா.........

ஆவி பறக்க காபியைக் கொண்டு வருகிருன் பையன்.

கவிஞர்:—(காபியைக் கண்டதும்)

சீனியுடன் டிக்காஷன் பால்சேர்ந்து - வரும்
தேனினிய தீஞ்சுவைக் காபிவாழ்க.
நானிலத்தில் காபிதனை விரும்பிடா - ஒரு
மானிடரும் இல்லை இல்லை காபிவாழ்க.!

ஒரு:—கவிஞரின் காபி குடி படலம், வாழ்த்துடன் ஆரம்பம்.

இ-ஒ:—நாமும் வாழ்த்துகிருேம். காபி வாழ்க. அனுமார் வால்போல் நீண்டு வாழ்க!

ம-ஒ:—அழியாமல் ஒழியாமல் புகழ் குறையாமல் மறையாமல் வாழ்க, காபி வாழ்க.

ஒரு:—காபியைக் கண்டதும் எப்படி யிருக்கு தெரியுமோ?...............ஆஹா.

இ-ஒ:—கடவுளைக்கண்ட பக்தன்போலிருக்கோ?

ஒரு:—இல்லவே இல்லை.

இ-ஒ:—தனத்தைக்கண்ட தரித்திரன்போல..............

ஒரு:—ஊஹும்.

ம-ஒ:—உணவைக் கண்ட உறுபசி நோயோன்போல இருக்காக்கும்?

ஒரு:-உமக்கென்ன தெரியும். பழையது, நீராகாரப்பிரியர்நீர்!

இ-ஒ:—கதிரோனைக் கண்ட கமலம்போலும் காபியைக் கண்டோர் முகம்.

ம-ஒ:—நீரும் கவிபாட ஆரம்பிச்சுட்டீரே.

ஒரு:—கவிஞரோடு சேர்ந்த தோஷம்.

ம-ஒ:--கவிபாடுறேன்னு கவிதாதேவியை சொல்லீட்டியாலே குத்திக்கொல்லாதேயும்.

ஒரு:—கவிஞரே, காபியைக் கண்டோர் முகம்.........

கவி:— கார்முகில் கிழித்தெழும் முழுமதியாம்
பார்இதில் காபியைக் கண்டோர்முகம்.

இ-ஒ:—ஆம், ஆம் களைப்பு சோர்வு என்னும் கரு மேகங்களைக் கிழித்து................

இ-ஒ:—கவிதா தேவி உங்க நாக்கிலே தாண்டவமாடுறுங்க.

ம-ஒ:—தவறி கிவறி பல்லிடுக்கிலே அகப்பட்டு நசுங்கிடப் போரு.

இ-ஒ:—பல்லிடுக்கிலே அகப்பட்டு நசுங்கமாட்டா. உங்க வாய்ச்சொல்லிடுக்கிலே அகப்பட்டு நசுங்கிறுத்தான் உண்டு.

ஒரு:—கவிஞரே. முதல்லே காபி சாப்பிடுங்கோ. ஆறிடப் போவுது. அப்புறம் நல்லா யிருக்காது.

கவி:— தேறிய தீஞ்சுவைக் காபிதான்,
ஆறினும் தண்மை அடையினும்,
மாறிடா அதன்சுவை மாறுமென
கூறிடும் கூற்றது பொய்யாம்.

காபி யருந்துகிருர் கவிஞர். அருந்தியவுடன்............

இ-ஒ:—ஆம், ஆம்.

ஹோட்டல் முதலாளி வருகிருர் ஒரு மாதிரியாக............

ஹோ-மு:—கவிஞரே, காபியைப் பத்தியே பாடுகிறீரே. ஹோட்டலைப்பத்தி ஒரு கவி பாடுமே.

ம-ஒ:—ஹோட்டலைப்பத்தி யென்ன! உம்மைப் பத்தியும், இந்த உலகத்தைப்பத்தியும்கூட பாடுவாரு.

கவி:— ஹோட்டலெனும் சோலைதனில் - காபி
ஒப்பில்லா மணமலராம்.
நாட்டிலுள்ள மாந்தரெலாம் - காபிமது
நாடியுண்ணும் வண்டுகளாம்.

ஹோ-மு:—பேஷ்! பேஷ்.

ஒரு:—நாட்டிலுள்ள ஹோட்டல் எல்லாம் பூஞ்சோலைகள், நந்தவனங்கள்..

இ-ஒ:—அதில் மலரும் மாமலர்—மணமலர் காபி.

ம-ஒ:—தேனமிர்த காபியுண்ண ரீங்காரித்து வான்பறக்கும் வண்டுகள் மனிதர்கள்.

ஒரு:—அற்புதம். அற்புதம். கவிஞர் தம் கற்பனை இமயத்தினும் உயர்ந்த கற்பனை.

இ-ஒ:—காபியுடன் நம் கவிஞருக்கும் ஒரு ஞாபகச் சின்னம் ஏற்படுத்த வேண்டும்.

ம-ஒ:—அது அவர் மறைவுக்குப்பின்னர் ஆலோசிக்கப்படும்.

ஒரு:—ஹா.........என்ன சொன்னீர். செத்த பின்பா? மூளையில்லாமல் பேசுகிறீரே. மாண்டு மறைந்தபின் மாரடிக்கும் மடமைக் குணம் இன்னும் தமிழர்களாகிய நம்மிடமிருந்து போகவில்லையே.........

ம-ஒ:—மன்னிக்கணும்; மறந்து சொல்லிவிட்டேன்.

இ-ஒ:—கவிஞரே! ஒரு வேண்டுகோள். காபிக் காவியம் ஒன்று இயற்றிவிடும். அதுதான் உமது புகழை அழியாது அவனியில் நிலை நாட்டும்.

ஒரு:—(மேஜைமேல் ஏறி நின்று [illegible]) ஹோட்டல் மகா ஜனங்களே! காபிப் பிரியர்களே! காபியைப் பற்றியும், அதன் மகத்

165762

தான, அரிய பெரிய சேவைகளைப் பற்றியும், காந்தியுகக் கவியரசர் உங்கள் முன் செந்தமிழ் கற்கண்டு மாரி பொழிவார்.

இ-ஒ:—எல்லோரும் தயவுசெய்து கைவலிக்க, கட்டிடம் இடிய, கை தட்டுங்கள்.

கை தட்டும சப்தம், காதை செவிடு படுத்திவிட்டு, கட்டிடத்தைப் பொத்துக்கொண்டு, விண்ணில் முட்டி எதிரொலி செய்கிறது.

கவிஞர்:—காபி...........ஆஹா......

காப்பிக் குடித்ததுமே - நெஞ்சில்
களிமிகத் துள்ளிடுமே - கரம்
கூப்பித் தொழுதிடுவோம் - அதைக்
கொண்டாடிப் புகழ்ந்திடுவோம்.

ஒரு:—கரம் கூப்பித் தொழுவது மட்டிலும் போதாது. சிரம் வணங்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

இ-ஒ:—காபிக்கு நம் நன்றி உரித்தாகுக.

ஒரு:—நன்றியில்லே......வணக்கம்னு சொல்லும்.

இ-ஒ:—ஆமாம்; வணக்கம் தான்.

ஒரு:—நாமெல்லாம் நன்றிகொன்ற ஜென்மங்கள் தான்.

ம-ஒ:—ஏனய்யா அப்படி?

ஒரு:—காபியைக் குடித்துக் களித்துக் கூத்தாடுகின்றோமே, அதற்கு ஒரு நிலையான ஞாபகார்த்தம் உண்டா?

இ-ஒ:—காபிக்கு அழியா நினைவுச் சின்னம் அவசியம்.

ம-ஒ:—அதன் அரிய பெரிய சேவைக்கு நாம் செய்யும் கைம்மாறு அதுதான்.

ஒரு:—உண்மையான காபி யபிமானிகளின் கடமை அதுதானே.

இ-ஒ:—என்ன, கவிஞர் தம் திருவாயைத் திறவாமல் இருக்கிறார்? அவர் அபிப்பிராயத்தையும் கேளுமே.

ஒரு:—என்ன கவிஞரே, உம் அபிப்பிராயம்?

கவி:— செத்தபின், பாரதிக்கு, சிலைகள் நாட்டும்
செந்தமிழ், நாட்டினரே; உயர் புதுமைப்
பித்தன்தனைப் புதைகுழியிற் போட்ட பின்னவன்
புகழ்பாடிப் போற்றுந்தமிழ் நாட்டீர், கேளீர்.
இத்தமிழ், நாட்டினிலே, இப்பொழுதே காண்
இனிப்பூட்டிக் களைப்போட்டும் காபிதன் நாமம்
மெத்தவுமே, மேதினியில், நிலைத்து ஓங்க,
மாத்தமிழர், நாமெல்லாம், செய்வோம் சின்னம்.

ஒரு:—கவிஞர் சொல்வது உண்மை. கவிஞர்களையும், பேறு வீரர்களையும், வறுமையால் வாட கண்கலங்கவிட்டு காலனுக்கு இரையான பின் கட்டிடம் கட்டி களிப்புச் சிந்து பாடுவதை விட்டொழிப்போம். காபிக்கு அவசரமாக, அவசியமாக, ஒரு அழியாச் சின்னம் செய்ய வேண்டும்.

ம-ஒ:—உடனே இதற்கோர் நிதி திரட்டவேண்டும்.

கவிஞர்:—எழுந்து நின்று, கண் பார்வையை நாற்புறமும் சுழலவிட்டுக் கனைத்துக் கொண்டு,

தோழரே இங்குள பெரியோரே,
வேழமெனப் புகழ்வீர இளைஞரே:
போக்கிடும் களைப்பினை, காபிதான்
தேக்கிடும் மனத்திடை இன்பமே
ஊக்கிடும் ஆர்வமே ஊட்டிடும்
ஆக்கிடும் எறும்பென சுறுசுறுப்பை,
வறியர் செல்வர் என்னாது,
பெரியோர் சிறியோர் என்னாது,
உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னாது,
துயர்மிகு தொழிலாளி முதலாளி,
ஆடவர் பெண்டிர் அனைவருமே,
ஈடில்லா ஹோட்டலில் சமத்துவமாம்.
காருக்குப் பெட்ரோலைப் போலவும்,
வேருக்குத் தண்ணீரைப் போலவும்,
தேருக்குச் சக்கரத்தைப் போலவும்,
பாருள்ள மக்கட்குக் காபியாம்.

ஒரு:—(மேஜைமேல் ஏறிக்கொண்டு) காபியைப் பற்றியும், அதன் முக்கிய தொண்டைப் பற்றியும், கம்பன் முதல் காளமேகம் வரை யாருமே இதுபோல் பாடியதில்லை. காபியை விட இனிக்கிறது—சுவைக்கிறது, நம் கவிஞர் தம் கவிதை. எனவே காபியின் ருசியைக் கண்டறிந்த கனதனவான்களாகிய உங்கள் சார்பாகவும், ஹோட்டலை ஓயாது வட்டமிடும் பொதுமக்கள் சார்பிலும், நமது கவிஞருக்கு—காந்தி சகாப்த கவியரசருக்கு "காபிக் கவிஞர்" என்னும் கவுரவப்பட்டத்தை, களிப்புப் பொங்க அளிக்கிறேன். மலர்மாலையில்லை, நமது கவிஞருக்கு அணிவித்துக் கண்குளிரக் காண, மனங்குளிர மகிழ. அதற்காக நமது வருத்தத்தை தெரிவித்துக்கொண்டு, மன்னிப்பைக் கோருகிறேன்.

கவிஞர் வாழ்க! அத்துடன் காபியும் வாழ்க!!

விண் அதிர மண் அதிர வாழ்த்தொலி முழங்குகிறது.

களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல்

வெ. சு. சுப்பிரமணியாச்சாரியார்

★

இவன் நெடுஞ்சேரலாதனுடைய மகன். வேளாவிக் கோமான், பதுமன்தேவி இவன் தாய் என்று பதிற்றுப் பத்துப் பதிகம் கூறுகின்றது. இவனுடைய பெயர் பதிற்றுப்பத்தின் மூலத்தும் 38, 39, 40-ம் செய்யுட்களிலும் அகம் 39-ம் செய்யுளிலும் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் என்று கூறப்பெற்றுள்ளது. இவன் தேவப்பிரியன் என்று பொருள் படும் "வானவரன்பன்" (வானவர்+அன்பன்) பதிற் 34) என்றும் அழைக்கப் பெற்றுள்ளான். இவனுடைய முடியும் மாலையும் பகைவரால் கவரப்பட்டது. எனவே இவன் முடிசூடிக் கொள்ளும் போது களங்காயால் ஆகிய கண்ணியையும் நாரால் ஆகிய முடியையும் சூடிக்கொண்டான். ஆதலால் இவன் களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல் என்று அழைக்கப்பெற்ருன் என்று இவனுடைய பெயருக்குக் காரணம் கூறுகின்றனர்.

இவனைக் காப்பியாற்றுக் காப்பியனுர் பதிற்றுப்பத்து நான்காம் பத்தாலும் கல்லாடனுர் அகம் 199-ம் செய்யுளாலும் பாடியுள்ளார்கள். இவன் சிறுவனு யிருந்தபோது, நெடுமிடல் என்றும் அஞ்சி என்றும் அழைக்கப்பட்ட குறுநிலமன்னன் ஒருவனும், நன்னன் என்ற மற்றொருவனும் கூடி அவனுடைய நாட்டைக் கவர்ந்து கொண்டனர் போலும்; ஆகவே இச் சேரன் தக்க வயது வந்ததும், நெடுமிடல் மீது படையெடுத்துச் சென்று அவனுடைய யானைப் படை கலங்கிச் சிதறும் வண்ணம் தாக்கினுன். நெடுமிடல் ஆற்ருது தோல்வியுருன். சேரன் அவனுல் கவரப்பட்ட தன்னுட்டின் ஒரு பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். நன்னன் என்ற மற்ருெரு பகைவனும் சிறந்த வீரன். பொன்னுற் செய்த மாலையையும் பொன்னுற் செய்த தேரையும் உடையவன் என்று காப்பியாற்றுக் காப்பியனுரால் புகழப்பெற்றுள்ளான் (பதிற். 43) இவன் சேரருடைய எழுமுடியாரத்தையும் கவர்ந்து கொண்டான் என்று

எழுமுடி கெழீஇய திருஞெமர கலத்துப்
பொன்னங்கண்ணிப் பொலந்தேர் நன்னன். (பதிற். 40: 13)

என்ற தொடர்களால் கருத இடனுண்டு. இச் செய்தி கொண்டே, இவன் சேரனுடைய முடியையும் கவர்ந்திருப்பான் எனக் கருத வேண்டி யிருக்கின்றது. இப்பெருவலி படைத்தவன் மீதும் சேரன் களங்காய்க்கண்ணி பெரும் படையுடன் சென்ருன். எனவே சேரனுடைய சேனையும் நன்னனுடைய சேனையும் வாகைப்பறந்தலையில் கைகலந்தன. நன்னன் தோல்வியுற்ருன், சேரன் நன்னனுடைய காவல் மரமாகிய வாகையையும் வெட்டி வீழ்த்தினுன் என்பது

"சுடர்வீவாகைக் கடிமுதற் றடிந்து" (பதிற் 40: 15)
"......................" குடாஅ
"திரும்பொன் வாகைப் பெருந்துறைச்
செருவிற்பொலம் பூணன்னன் பொருதுகளத் தொழிய

வலம்படு கொற்றந் தந்த வாய்வாட்
களங்காய்க் கண்ணிநார் முடிச்சேரல்." (அகம். 199)

என்ற செய்யுட்களால் அறியக் கிடக்கின்றது.

இவன் சால்பும் செம்மையுங் கொண்டவன். செல்வமும் வென்றியும் உடையவன். இவன் மிகுந்த பொறையையும் உடையவன்.

"பகைவர் தேஎத்தாயினும்
சினவா யாகுதலிறும் பூதாற் பெரிதே" (பதிற். 35)

என்று புகழப் பெற்றமையால் தெரிகின்றது. இவன் கொடைத் தொழிலால் வண்டனை யொத்த வள்ளன்மையை யுடையவன். இவன் வைணவன். பல திருமாலடியார்கள் இவனது ஊருக்கு வந்து அங்கு எழுந்தருளி யிருக்கும் திருமாலை வணங்கித் தம் மூர்களுக்கு மீளுவார்கள் என்பது,

"வண்டுது பொலிதார்த் திருஞெம ரகலத்துக்
கண்பொரு திகிரிக் கமழ்குரற் றுழாஅய்
அலங்கற் செல்வன் சேவடி பரவி
நெஞ்சுமலி உவகையர் துஞ்சுபதி பெயர்" (பதிற். 31: 69)

என்று சிறப்பிக்கப் பெற்றுள்ளது. இவன் "வசையில் செல்வன் வானவரன்பன்", "பிறர்க்கென வாழ்திநீ" "ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மல்", என்றெல்லாம் புகழப்பெற்றுள்ளான்.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

இவன் இமயவரம்பன் என்ற குடக்கோ சேரலாதற்கு வேளாவிக் கோமான் தேவியினிடமாகப் பிறந்தவன் என்று ஆறும்பத்தின் பதிகம் கூறுகின்றது. ஆறும்பத்தின் செய்யுட்களில் இவனுடைய பெயர் ஆடுகோட் பாட்டுச் சேரலாதன் என்று எங்கும் கூறப் படவில்லை. "சான்ருேர் மெய்மறை" *வானவரம்பன் என்ப (பதிற் 58) என்றே விளிக்கப் பெற்றுள்ளான் * "தண்டாரணியத்துக் கோட்பட்ட வருடையைத் தொண்டி யுடைந்து கொடுப்பித்துப் பார்ப்பார்க்குக் கபிலையொடு குட நாட்டோரூரீந்து" என்ற பதிகக்காரருடைய ஆதரமற்ற கூற்றைக்கொண்டு, பகைவரால் கொள்ளப்பட்டுத் தண்டாரணியத்து இருந்த மலையாடுகளை மேற்குக் கடற்கரையோரத்தேயுள்ள தொண்டி என்ற நகருக்கு ஓட்டிக் கொண்டு வந்த காரணம் பற்றி இச் சேரனுக்கு ஆடுகோட்பாட்டுச் சேரன் (ஆடுகளைக் கொண்டு வந்தவன்) என்ற பெயர் வந்தது என்று சரித்திர ஆசிரியர்களும் கூறுகின்றனர். பதிகக்காரர் திரித்த கயிறுக்கு நார் எங்கும் பெற்றனரோ! அறியக் கூடவில்லை. சங்கப் பாடல்களில் யாண்டுமில்லை. சாதாரணமாகப் பசுமந்தைகளுக்காகத்தான் அரசர் போர் மேற்செல்லுவது வழக்கம், தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களும் "ஆகோள்" என்ற துறையால் இலக்கணமும் வகுத்திருக்கின்றன. சேரன் ஆகோடலை விடுத்து ஆடுகோடலை மேற்கொண்டான் என்று கூறுவது பொருந்துமா? அரசன் ஆட்டு மந்தைக்காகச் போர் மேற்சென்ருன் என்று கூறுவது அசம்பாவித மன்ருே? அரசர்கள் ஆடுகோட்படுதலை மேற்கொள்ளுதல் வழக்கமற்ற வழக்குமாகும். எனவே இப்பெயரின்

காரணம் யாதாக விருக்கலாம் என்று நோக்குவோமாயின் நமக்கு ஓர் உண்மை புலனாகும். இச் சேரனைப்பற்றிக் காக்கைப்பாடினியாரால் இயற்றப் பெற்ற பத்துச் செய்யுட்களுள் சிலவற்றில்,

"சுடரும் பாண்டிற் றிருநாறு விளக்கத்து
முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்பூவல் லேற்றிற் றலைக்கை தந்துநீ
களிந்தனை வருத லுடன்றனளாகி" (பதிற். 52)

"வளம்படு முரசந் துவைப்ப வளுயர்த்
திலங்கும் பூணள் பொலங்கொடி யுழிஞையன்
மடம் பெருமை மானுடன்று மேல்வந்த
வேந்து மெய்ம் மறந்த வாழ்ச்சி
வீந்துகு போர்க்களத் தாடுங் கோவே." (பதிற். 56)

"துணங்கை யாடிய வலம்படு கோமான்" (பதிற். 57)

என்ற தொடர்கள் கூறப்பெற்றுள்ளன. இச் சேரன் பகைவர்களை வென்று போர்க்களத்தே துணங்கைக் கூத்தாடுதலில் சிறந்திருந்தமைபற்றித் துணங்கையாடும் கோட்பாட்டையுடையவன் என்னும் பொருள்பட்ட, ஆடுகோட்பாட்டுச் சேரலாதான் என்ற பெயரைப் பெற்றான் என்று அத் தொடர்களால் அறியக்கிடக்கின்றது என்பதே பொருந்தும். மேலும் இவன் "வானவரம்பன்" என்றழைக்கப்பட்டுள்ளான் என்று முன்னமும் கூறியுள்ளேன். (இத் தொடர் வானவர்+அன்பன் = வானவரன்பன் என்றிருத்தல் வேண்டும்.) அப்பெயர் பெரும்பாலும் சேரர்களுக்கு ஒரு பெயராய் வழங்கிவந்தமைபற்றிச் சிறப்பாக "ஆடுகோட் பட்டான்" என்று பிற்பட்டோர் கூறியிருக்கவேண்டும். அத்தொடரைக் கொண்டு பதிகக்காரர் கட்டிய கதை தமிழ்நாட்டுச் சரித்திரத்தைக் கெடுத்துவிட்டது. நாமும் உண்மை காணாது ஒன்றன்பின் ஒன்றாகத் தலைகுனிந்தே செல்லும் ஆடுகளைப்போன்று பதிகக்காரர் பின்னே சென்றுகொண்டிருக்கின்றோம் என்று கூற வருந்துகின்றேன்.

இனிக் காக்கைப்பாடினியார் தவிர வேறு யாரும் இச்சேரனைப் பாடியதாகத் தெரியவில்லை. இவர் பாடிய பாடல்களில் பெரிதும் இவனுடைய வீரமும் கொடையும் கூறப்பெற்றுள்ளன. இவன் நாட்டிலே பனைமரங்கள் மிகுதியாக விருந்தன. இது "போந்தைப் பொழில்" (பதிற்-51) என்று சிறப்பிக்கப்பெற்றுள்ளது. இவன் போர்க்களத்திலே போர்செய்யும்போது பகைவர்களுடைய உதிரம் இவன் தலையிலே அணிந்திருக்கும் பனையின் வெள்ளிய ஓலையில் பட்டுச் செந்நிறமாகக் காணப்படுமாம். அதனைப் பருந்துகள் ஊன் என்று மயங்கிக் கொத்தக் கருதுமாம். இவன் போர்க்களத்திலே எமன்போன்று விளங்குவான். (பதிற் 51) போர்க்களத்தே இவனுக்குத் தப்பிய உயிர் ஒன்றுமேயில்லை. இவனைப் பணியாத அரசர்களில்லை. (51) இவனுடைய படைஞர்கள் பெரும் வீரர்கள். உடற்கவசம் அணியாமலேயே முன்னணியிற் சென்று போரியற்றும் வன்மையை யுடையவர்கள். (52) அரசர்கள் ஆபரணங்களையும் திறைமையாகச் செலுத்தினார்கள். (53) இவன் மிகுந்த சிறந்த

பல யானைகளை வைத்திருந்தான். இவனுடைய மனைவி கற்பிற் சிறந்தவள். (55) கடற்கரையோரங்களில் பல பண்டகசாலைகள் இருந்தன (55). அவனுடைய மழவர் அவரையும் துவரையும் கலந்த இறைச்சியை உண்ணும் இயல்பினர். 55. பகைவருடைய பல மலைநாடுகளைக் கைப்பற்றிக்கொண்டான் 55. இவனுடைய மறவர் பகைவர்களுடைய மதிற்சுவர்களைக் கைப்பற்றினால் அல்லாது உண்ணமாட்டார்களாம். 58. இரவலர்களுடைய துன்பத்தை அஞ்சி அவர்களுக்கு வேண்டுவன செய்தான். 57. வழி நடப்போர் களைப்பு நீங்கும் வண்ணம் உண்ணுவதற்குரிய பழங்களைத் தருகின்ற மரங்களை வழிச்சாலைகளில் வைத்து வளர்த்தான். (60) அவனோடு போர் செய்த அரசர்களின் பெயர் ஒன்றும் கூறப்பெறவில்லை. இவன் காலத்தே நரவு என்ற பாட்டினம் பிரபலமாக விருந்தது. பதி 60.

செல்வக் கடுங்கோ வாழியாதன்

இவனும் சேர மரபினனே. இவன் கபிலரால் பாடப்பெற்ற பெருமையை யுடையவன். "செல்வக் கோவே சேரலர் மருக" (பதிற் 63,) "வாழியாத வாழிய பலவே" (பதிற் 63,) "செல்வக் கோமான்" (67) என்றும் இவன் அழைக்கப் பெற்றுள்ளமையால் இவன் பெயர் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்பது பெறப்பட்டது. கபிலர் பாரிவள்ளலால் ஆதரிக்கப்பட்டவர் அன்றோ? பாரி இறந்த பின்னர்க் கபிலர் இச் சேரனுடைய கொடைத்திறங் கேட்டுச் சென்று அவனைப் பாசறையிலே கண்டதாகத் தெரிகின்றது. (61) கடுங்கோ வாழியாதன் பட்டமெய்தியபோது அவனுடைய நாடு சிறிதாக விருந்தது. தன்னுடை படைகளுடன் சென்று சோழனையும் பாண்டியனையும் வென்றான் (63-9-10) பகைவரை வென்றாலன்றி இவன் வஞ்சினம் தணியான். ஊருக்கு மீண்டும் செல்லான். இவனுடைய மறவரும் பகைவர் நாட்டைக் கைப்பற்றினாலன்றிப் பொருதல் ஒழியார். உண்ணாமலும் பல நாட்கள் போர் புரிவார். (68-6.14) இவன் தன்னால் கவரப்பட்ட பகைவர்களுடைய நாடுகளை முன்போல் வாழ்விக்கும் இயல்பினான். தன் முன்னோர்களைப் போன்று உலகம் செழித்தோங்க நெறி தவறாது ஆண்டான். (69: 5-10-12-17)

இவன் சிறந்த பல நல்லியல்புகளை உடையவன். அந்தணர்களை மட்டும் வழிபட்டான். நண்பர்களைத்தான் அஞ்சினான். பகைவரை ஒரு சிறிதும் அஞ்சான். 63. தன்னை யடைந்தோரை வாழ்விப்பவன். 65. பெரியோரை வணங்குதலும் பகைவரை வணங்காமையு முடையவன்(70-20) விளையாட்டாகவும் பொய் கூறாத வாய்மையை யுடையவன் (70: 12) பிறர் புறங் கூறுவதைக் கேளாதவன். (70: 13) இவன் சிறந்த கொடையாளி. வேள்விகள் பல செய்தான். அந்தணர்களுக்குத் தானம் செய்யத் தாரை வார்த்துக் கொடுத்த நீரால் அவனுடைய முற்றம் சேறாகக் கிடக்குமாம். (64: 3-6-70: 18) பாணர் முதலியோருக்கு நறவினைக் கொடுத்து வந்தான் (65-11-17) புலவர்களுக்குச் சிறந்த உணவைத் தந்து வந்தான். பகைவரிடமிருந்து பெற்ற கயிறுகளையும் நெற்குவையலையும் இரவலருக்கு மிகுதியும் கொடுத்தவன் (66-4-9) தன்னைப் பாடிவரும் கூத்தர் முதலாயினோர் தன்னை வந்து காண

வருவதன் முன்னரே அவர்கட்கு எருதும் குதிரையும் கொடுத்தனுப்புமாறு ஆட்களை ஏவிவிடுவான். (64: 8-11) பொதுவாக இவன் உலகுக்கே பெரு நன்மையைச் செய்தவன் (63: 18-21) என்பதை வலியுறுத்தவே கபிலர்,

> "நனத்தலை உலகம் செய்தநன் றுண்டெனின்
> அடையடுப், பறியா, அருவியாம்பல்
> ஆயிர வெள்ள வூழி
> வாழியாத வாழிய பலவே." (பதிற். 63-18:21)

என்று கூறினர் இவன் பிதிர்க்கடன் கழிக்கவே மக்கட்பேற்றினை அடைந்தான் (70: 21) இவன் கபிலருக்குப் பல ஊர்களைக் கொடுத்தான். 'நனவிற் பாடிய நல்லிசைக்கபிலன் பெற்ற ஊரினும் பலவே" (பதிற். 85) என்று பெருங்குன்றூர் கிழார் பாடிய பாட்டால் அச் செய்தி வலியுறுகின்றது.

கொடுமணம் பந்தர் என்ற ஊர்களிலிருந்து பெரும் பொருள்களைப் பெற்றான். நேரி அயிரை என்ற மலைகளும் இவனுக்குச் சொந்தமாக விருந்தன. இவன் காலத்தே பந்தர் என்ற ஊரிலிருந்து முத்து எடுக்கப்பெற்றது. 67. இவன் திருமாலிடம் அன்பு கொண்டவன் அவருக்கு ஒகந்தூர் என்றதொரு பதியினை அளித்தான் என்று பதிகம் கூறுகின்றது.

இனி, இச்சேரன் செல்வத்திற் சிறந்து விளங்கியதைக் கண்ட சோழனும் பாண்டியனும் பொறாமை கொண்டனர். அவனைப் பல வாறு தூற்றலாயினர். அதை யறிந்த சேரன் அவர்களை அடக்கக் கருதிப் பெரும் படையுடன் இருவர் மீதும் போருக்கு எழுந்தனன். இந்நிகழ்ச்சி தமிழகத்துக்கும் ஒரு பெருங்கலக்கத்தை உண்டாக்கியது. அதை அறிந்த கபிலர், வாழியாதனிடம் சென்றார். அவனைக் கண்டார். வேந்தே! உலகத்தே உள்ள பொருள்கள் அனைத்திலும் சூரியன் மிகச் சிறந்தவன் அன்றோ? அவனும் நினக்கு நிகராகமாட்டான். பகலவன் பகலிலேதான் பிறருக்குக் காட்சியளிப்பாத் தோன்றுவான். சந்திரன் வந்தாலோ ஒடி ஒளிந்து கொள்ளுவான். அயனங்கள் தோறும் திசைமாறிச் சஞ்சரிப்பான். நிலையற்றவனுகவும் தோன்றுவான். மாலையில் மலையின் கண்ணே மறைவான். நினக்கோ அத்தகைய குறைபாடுகள் ஒன்றேனும் இல்லை. நீயோ எக்காலத்தும் அனைவருக்குங் காட்சி கொடுப்பாய். எவருக்கும் தோற்று முதுகிடாய். எங்கும் உறுதியோடு நிற்கிறாய். நின் சிறப்பே சிறப்பு. இன்னோரன்ன பெருமை வாய்ந்த நினக்குச் சூரியன் மரபினனை சோழனும், சந்திரன் மரபினனை பாண்டியனும் ஒப்பாவரோ? நீ இவரை எதிரா தொழிக என்று இன் சொல் பகர்ந்தனர்.

சேரன் அவருடைய இன்சொல் மடுத்துச் சினந்தணிந்தான். கபிலருடைய கைகளைப்பற்றிப் பாராட்டினன். அதுபோது அவருடைய கை மிகவும் மெத்தென்றிருந்ததைக்கண்டு, ஆ! புலவரே! உம்முடைய கை மிகவும் மெத்தன விருக்கின்றதே என்றனன். கேட்ட கபிலர் அரசனை நோக்கிப் புன்னகை பூத்து, வேந்தே! என் கைகளோடு பயிலுவன மென்மைத் தன்மையனவாகிய சோறும், கறியும், ஊனுமாகும்; அதனல் கைகள் மென்மையவாயின. உனது

கைகளோடு பயில்வனவோ யானை செலுத்தும் அங்குசம், அம்பினைச் செலுத்தும் வன்சிலை, மாற்றார் மருமம் துளைக்கும் கூற்றுவனன்ன வேல் முதலியனவாகும்" என்று அவனுடைய பெருவன்மையைப் புகழ்ந்து வியந்தார்.

கேட்ட கடுங்கோ ஆழியாதன் அளவு கடந்த மகிழ்வெய்தினன். கபிலருக்குப் பல பரிசில்களைத் தந்தான். நன்று என்ற மலைமீதேறி நின்று தன் கண்ணிற்கண்ட நாடுகள் அனைத்தையும் தந்து உவப்பித்தான். என்று புறம் 8, 14-ம் செய்யுட்களைக் கொண்டும் பதிற்-7 அப்பதிகம் கொண்டும் கூறிவரும் செய்தியாகும்.

பெருஞ் சேரலிரும் பொறை (தகடூர் எறிந்தவன்)

இவன் அரிசில் கிழாராலும் மோசிகீரனாராலும், பரணராலும் பாடப்பெற்றவன். அரிசில் கிழாரால் பாடப்பெற்ற பதிற்றுப்பத்தின் எட்டாம் பத்தின் தலைவன் இவனே. மோசிகீரனர்புறம் 50-ம் செய்யுளாலும் பரணர் அகம் 62-ம் செய்யுளாலும் இவனைப் பாடியுள்ளார்கள். இவன் செல்வக் கடுங்கோ வாழியாதனுக்கும் வேளாவிக்கோமான் பதுமன் தேவிக்கும் பிறந்தவன் என்றும் 17-ஆண்டுகள் ஆண்டான் என்றும் 8-ம்பத்தின் பதிகம் கூறுகின்றது. தகடூர் எறிந்த பெருஞ்சேரலிரும்பொறை எனவும் பெரும்பூண் பொறையன் எனவும் அழைக்கப்பெற்றான்.

இவனும் சிறத்தவீரன். பகைவர்களைக் குளவிபோன்று கொட்டுபவன். தனக்குக் கொடுக்கப்படும் பலியை ஏற்றுக்கொண்டு தான் பற்றிய உயிரைவிட்டுச் செல்லும் பேய்போன்று பகைவர் இடுந் திறையை மட்டும் பெற்று அவர்களை உயிருடன் விட்டுச் செல்லும் இயல்புடையவன் (71) என்று கூறப்பட்ட உவமையால் இவனுடைய கருணை விளங்குகின்றது. இவன் போரில் ஊழித்தீப்போன்றும், பன்னிரண்டு சூரியர்களும் ஒரே காலத்துத் தோன்றி எரித்தாற்போன்றும் பகைவர்களைச் சுட்டெரிப்பான் (72), சிறந்த அறிவுடையவன் (73) காவிரியால் பயப்பெற்ற புகார் இவனுக்குச் சொந்தமாக விருந்தது. பூழிநாடும் இவன் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. கொல்லிமலையும், கொடுமலையும் பந்தர் என்ற ஊர்களிலுள்ள செல்வமும் சொந்தமாக விருந்தன 74. தேவர்களும் மகிழும் வண்ணம் அரிய பெரிய யாகங்களைச் செய்தான் 74. அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நடுநிலை என்ற இன்னோரன்ன சிறந்த குணங்களைக் கொண்ட நல்ல பிள்ளைகளையுடையவன் (74) சிறந்த தவ ஒழுக்கமுடையவன். (74) ஒரே காலத்தில் புலியையும் யானையையும் கொல்லும் ஆற்றலுடைய அரிமா போன்ற ஆண்மையை யுடையவன் (75) தன்னை வழிபடாத வேந்தரையும் வேளிரையும் கீழ்ப்படியச் செய்தான் (75) அவனுடைய போர் வீரர்கள் பகைவரை வென்று கொண்டுவந்த பொருள்களைக் கொடுத்துக் கள் வாங்குவார்கள். (75). இவன் நாட்டில் பலவகை ரத்தினங்கள் கிடைக்கும் (76). கட்டுத்தறியைக் கொள்ளாமல், குத்துக்கோல் பலவற்றை முறித்து மேலே பறக்கும் பருந்தினது நிலத்தே விழும் நிழலைக் கோபிக்கும் பெரிய யானைகள் மந்தை மந்தையாகவுண்டு. (77,80) சிறந்த கல்வியை யுடையவன் (80.)

இவன் கழுவுள் என்றவனோடு போர்புரிந்து வென்றதாகத் தெரியவருகின்றது (71) கழூரின்கண்ணே கழுவுள் வாழ்ந்து வந்தான். இஃது கழுமூர் என்றும் வழங்கப்பெற்றது (அகம். 135) அவ்வூர் வேளிர் பதினல்வரால் அழிவுற்றது என்று பரணர் அகம் 135-ம் செய்யுளால் கூறுகின்றார். கழுவுள் பெரும் வீரன், முல்லை நில மக்களாகிய இடையர்களுக்குத் தலைவன். இவன் சேரனை எதிர்த்துக் கொல்லப்பட்டான்.

இவன் காலத்தே தகடுரை எழினி என்பவன் ஆண்டு வந்தான். அவனும் சிறந்த வீரன். பெருஞ்சேரலிரும்பொறை எழினிமீது படை எடுத்துச் சென்று அவனுடைய கோட்டையை முற்றுகையிட்டான். எழினி கோட்டையினுள்ளேயே யிருந்து போரியற்றி இறந்தான். காவற் காட்டோடு கூடிய தகடுரும் அழிந்தது. (78: 89.) இதனைப் புறம் 230-ம் செய்யுளாலும் அரிசில்கிழார் கூறியிருக்கின்றார். மேலும் "உழிஞை திணைக்கு உதாரணமாகச் சேரமான் செல்வுழித்தகடூரிடை அதியமான் இருந்ததாம்" என்று (தொல்-புறம். சூ-7. நச்) வருகின்ற தொடரும் வலியுறுத்தும். இந்த அதியமான் எழினியை அதியமான் நெடுமானஞ்சி என்று டாக்டர். உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் கூறியுள்ளார். அஃது பொருத்தாது என்பதாக இச் செய்தியைப் பற்றிக் கடல் பிறக்கோட்டிய குட்டுவன் வரலாற்றில் விரிவாகக் கூறியுள்ளேன். இவன் தகடுரை அழித்து எழினியை வென்றது பற்றித் தகடூரெறிந்த பெருஞ்சேர லிரும்பொறை என்றழைக்கப் பெற்றான்.

இவனது ஆட்சியில் மோசி என்ற ஊரில் தோன்றிய கீரன் என்ற புலவர் ஒருவர் சேரனைக் காண விரும்பினார். தன்னூரினின்றும் புறப்பட்டார். காடும் நாடும் கடந்து சேரனுடைய நகரம் வந்தார். அரண்மனையை அடைந்தார். களைப்பின் மிகுதியால் இன்னதென்று அறியாராகி முரசு கட்டிலின் மீது ஏறிப் படுத்து உறங்கிவிட்டார். அதுபோது முரசத்தை நீராட்டக் கொண்டு சென்றிருந்தனர். எனவே கட்டில்மட்டு மிருந்தது. நீராட்டிய முரசம் கொண்டு வரப்பெற்றது. கட்டிலின் மீது யாரோ ஒருவன் படுத்துறங்குகின்றான் என்று அரசனுக்கு அறிவிக்கப்பெற்றது. அரசன் பெருங்கோபத்தோடு வாளேந்தி முரசுகட்டிலண்டை வந்தான். உற்று நோக்கினன். புலவர் என உணர்ந்தான். வாளைக் கீழே விடுத்தான் களைப்பின் மிகுதியால் இங்ஙனம் அயர்ந்துவிட்டார் போலும் என்று புலவரைப் போற்றும் புரவலன் ஆகையால் புலவர் விழிக்கும் வரை விசிறிகொண்டு விசிறி நின்றான். புலவரும் துயில் நீத்தெழுந்தார். கீழே கிடக்கும் கத்தியையும் விசிறி நிற்கும் சேரனையும் சேரக் கண்டார். திடுக்கிட்டு வியந்து இயன்மொழி கூறி உவப்பித்தார் புற: 50.

இவன் அரிசில் கிழாருடை பாடல்களைக் கேட்டு மகிழ்ந்து தானும் தன் மனைவியும் வெளியே வந்துநின்று "கோயிலிலுள்ளவெல்லாம் கொள்மின்" என்று ஒன்பது நூறாயிரம் காணத்தோடு தன் அரசுகட்டிலையும் கொடுத்தான். புலவர் அரசனை நோக்கி "யான் இரப்ப நீயாள்க" எனவே தான் அமைச்சு பூண்டார்" என்று எட்டாம்பத்தின் பதிகம் கூறுகின்றது.

துப்பறியும் சந்துரு

கிச்சு

★

(சென்ற இதழின் தொடர்ச்சி)

"பாவம்! நீர் இன்னும் வரவில்லையென்று காத்துக்கொண்டிருப்பார். போய்விட்டு வருவோம்" என்றான் சந்துரு. உடனே சந்துருவும் கஜபதிராவும் சுகுமார் வீட்டிற்குப் போனார்கள்.

சந்துருவைப் பார்த்தவுடன் சுகுமார் திடுக்கிட்டார். ஆனால் ஒருவாறு சமாளித்துக்கொண்டு அவர்களை புன்னகையுடன் வரவேற்றார்.

"உங்கள் வீட்டில் திருட்டுப் போச்சாமே! கஜபதிராவ் சொன்னார். உங்கள் வீட்டில் என்ன திருட்டுப் போச்சு!" என்று சந்துரு தனக்காகக் கேட்டான்.

"நல்லவேளை திருட்டு ஒன்றும் போகவில்லை. அவன் திருடிக்கொண்டு போகும்போழுது நாங்கள் விழித்துக்கொண்டு விட்டோம். அவன் அப்படியே நகைகளைக் கீழே போட்டுவிட்டுப் போய்விட்டான். இதுதான் அந்த நகைகள்" என்று சுகுமார் நகைகளை உள்ளே யிருந்து எடுத்துக்கொண்டு வந்து காண்பித்தார்.

"சுகுமார்! நாங்கள் கேட்கிறோம் என்று வித்தியாசமாய் நினைத்துக் கொள்ளாதேயுங்கோ. இந்த நகைகளெல்லாம் பழங்காலத்து நகைகள் போலிருக்கே. கிண்டு கிண்டாக இருக்கிறதே! இவைகளெல்லாம் உங்களுக்கு ஏது?" என்று அழுகை வாழைப்பழத்தில் ஊசி யேற்றுவதுபோல் நைஸாக சந்துரு கேட்டான்.

சுகுமார் திடுக்கிட்டார். இதுமாதிரி கேள்வியை அவர் சொப்பனத்தில் கூட எதிர்பார்க்கவில்லை. ஆனால் ஒருவாறு சமாளித்துக்கொண்டு "இவைகளெல்லாம் என் தாயாரின் நகைகள்" என்றார் அசட்டுச் சிரிப்புடன்.

"உம் தாயாரின் நகைகளா, நிஜமாகச் சொல்லுங்கள். இவைகளெல்லாம் திருட்டு நகைகளல்லவா? ரங்கு எல்லாவற்றையும் சொல்லி விட்டானே" என்று சந்துரு ஒரு குண்டை வீசியெறிந்தார்.

சுகுமார் அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். "ரங்குவா, அது யாரது?" என்றார் சுகுமார்.

"வேணுகானம் பிள்ளை என்கிற சிலோன் ரங்குவை உமக்குத் தெரியாதா? இப்பொழுது அவர் ஜெயிலில் இருக்கிறார். உங்கள் பெயர்கூட கொயிலோன் கோதண்டமாமே" என்றான் சந்துரு.

"என்ன?" என்றார் சுகுமார் திடுக்கிட்டு.

"ஆமாம்! இந்தக் கொலையைப்பற்றிக் கூட அவன் சொல்லிவிட்டான்" என்றான் சந்துரு.

"அந்த பாபி எல்லாவற்றையும் சொல்லிவிட்டானா!" என்றார் சுகுமார் திகிலுடன்.

"ஆமாம்! ராமேஸ்வரம் ராமநாதனை ஏதோ கோபத்தில் மண்டையில் தடியால் அடித்து அவன் இறந்தவுடன் அவனைக் கொல்லையில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு அவன் மாடியிலிருந்து கீழே குதித்தான் என்று கதையைக் கட்டி விட்டீர்களாமே" என்றான் சந்துரு.

"என்ன பெரிய ஆசாமியாக இருப்பான் போலிருக்கே! ரங்குனா அவனை மண்டையில் ஓங்கி யடித்தது. நான் கூட அடிக்காதே என்று சொன்னேன். கேட்காமல் அடித்தான். இதோ கொண்டு வருகிறேன் அவன் அடித்த தடியை" என்று சுகுமார் நழுவப் பார்த்தார். அவர் எண்ணத்தை அறிந்த சந்துரு "அதெல்லாம் இருக்கட்டும். அதற்கு இப்பொழுது அவசரமில்லை" என்று வழி மறுத்தான். அதற்குள் கஜபதிராவ் சைகை காட்டாமலே சுகுமார் கையில் விலங்கைப் பூட்டி விட்டான் ஒரு கான்ஸ்டேபிள்.

போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனபிறகு "சந்துரு! எனக்கு ஒன்றும் விஷயம் புரியவில்லையே" என்றார் கஜபதிராவ். "இன்னும் உங்களுக்கு விஷயம் புரியவில்லையா! இதுதான் சமாசாரம்" என்று சந்துரு சொல்ல ஆரம்பித்தான்.

"சிலோன் ரங்கு, கொயிலோன் கோதண்டம், ராமேஸ்வரம் ராமநாதன் என்று மூன்று பெரிய பக்காத் திருடர்கள் சிலோனில் இருந்தார்கள். நான் சிலோனில் இரண்டு வருஷகாலம் இருந்த பொழுது எனக்கு அவர்களைத் தெரியும். ஏதோ ஒரு கொலைக்கேஸில் சம்பந்தப்பட்டதற்காக, சிலோன் ரங்குவிற்கு பத்துவருஷ காலம் சிறைவாசத் தண்டனை கிடைத்தது. ஆனால் அவன் இரண்டுமூன்று வருஷகாலம் சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்குள் சண்டை ஆரம்பித்து விட்டது. கைதிகளில் யார் வேண்டுமானாலும் சண்டையில் சேரலாம் என்று கவர்ன்மெண்டில் உத்தரவு போடவே ரங்கு சண்டையில் சேர்ந்தான். ரங்குவிற்கு வேணுகானம் என்று ஒரு தம்பி உண்டு. ரங்குவும் வேணுகானமும் இரட்டையர்கள். இரண்டு பேரையும் சேர்த்து நிறுத்தி வைத்தால் யார் ரங்கு யார் வேணுகானம் என்று கண்டு பிடிப்பது சிரமம். வேணுகானத்திற்கு இடதுகையில் ஆறுவிரல் உண்டு. ரங்குவிற்குக் கையில் ஐந்து விரல்தான் உண்டு. கைவிரல்களைப் பார்த்துதான் யார் ரங்கு, யார் வேணுகானம் என்று சொல்ல வேண்டும். வேணுகானம் ரொம்ப நல்லவன். இந்தக் குடும்பத்தில் தப்பிப் பிறந்தவன். வேணு எஸ். எஸ். எல். ஸி வரையில் படித்து விட்டு வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருந்தான். சண்டை

ஆரம்பித்தவுடன் வேணுவும் சண்டையில் சேர்ந்தான். ரங்குவின் அதிர்ஷ்டம் இரண்டு பேரும் ஒரே படையில் இருந்தார்கள். சண்டை முடிவதற்கு ஒரு மாசமிருக்கும். வேணு குண்டு பட்டு இறந்தான். ரங்குவிற்கு திடீரென்று தான் முன்னுக்கு வர ஒரு யோசனை தோன்றியது. தன் பெயரை வேணுகானம் என்று மாற்றி வைத்துக்கொண்டு ரங்குதான் இறந்தான் என்று பெயர் பண்ணிவிட்டான். ரங்குவின் அதிர்ஷ்டம் சண்டை முடிந்தவுடன் சப்-இன்ஸ்பெக்டர் வேலை கிடைத்தது. திரும்பி மூன்றுபேரும் கூடி ரகஸ்யமாகத் திருட்டுத்தொழிலை நடத்த தீர்மானித்தனர். ரங்கு போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரான படியால் அவர்களுக்குப் போலீஸ் பயம் இல்லை. ராமநாதன் திருடுவதென்றும், அந்த திருட்டுத் சொத்துக்களை கோதண்டம் வாங்கி வைத்துக் கொள்ளுவதென்றும், போலீஸார் அவர்களைப் பிடித்துக்கொள்ளாமல் ரங்கு பார்த்துக் கொள்ளுவதென்றும் அவர்கள் தீர்மானித்தனர். ஒவ்வொருவருக்கும் திருட்டில் மூன்றில் ஒரு பங்கு உண்டு என்றும் முடிவு செய்து கொண்டனர். அதன் படியே ரங்குவின் டிவிஷனில் பல திருட்டுகள் நடந்தன. முந்தா நேற்றைக்கு நீங்கள் இவர்தான் புது சப்இன்ஸ்பெக்டர் என்று அறிமுகப்படுத்தினவுடன் எனக்கு சிலோன் ரங்குவின் ஞாபகம் வந்தது. இவனுடைய மூஞ்சி சிலோன் ரங்குவின் மூஞ்சியை உரித்து வைத்தாற் போலிருக்கே என்று எனக்குச் சந்தேகம் தட்டியது. அவன் வீட்டைச் சோதனை போட்டு எப்படியாவது உண்மையைக் கண்டுபிடித்து விடுவது என்று தீர்மானித்தேன். அதனால்தான் அவன் அன்றைய ராத்திரி வீட்டுப்பக்கம் எட்டிப்பார்க்காமல் இருப்பதற்காக உங்களுக்கு அம்மாதிரி மொட்டைக் கடிதம் எழுதினேன்" என்றான் சந்துரு.

"என்ன நீங்களா, மொட்டைக் கடிதத்தை அனுப்பினது?" என்றார் கஜபதிராவ் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்!" என்றான் சந்துரு.

"அப்படி யென்றால் அவன் வீட்டில் திருட்டுப்போன நகைகளெல்லாம் எங்கே?"

"நகைகளா! அவன் வார்த்தையை முழுவதும் நம்பி விட்டீர்களா? அவன் வீட்டில் ஒரு சல்லிக் காசுகூட நகை கிடையாது. மற்றவர்கள் வீட்டில் திருடினவன்தான், தன் வீட்டிலும் திருடி யிருக்கிறான் என்று நீங்கள் நினைத்துக் கொள்ளவேண்டும் என்பதற்காக அவன் அதுமாதிரி சொல்லி யிருக்கிறான். அவன் வீட்டில் இரண்டு மூன்று கடிதங்கள் அகப்பட்டன. அதிலிருந்து அவர்கள் பூர்வ சரித்திரத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ள முடிந்தது. மேலும் ஒரு கடிதத்தில் ராமநாதன் தனக்கு அவர்கள் கொடுக்கும் பங்கு போதாதென்றும் தனக்கு முக்கால்பங்கு தரவேண்டும் அப்படி அவர்கள் செய்யாவிட்டால் எல்லா விஷயத்தையும் தான் வெளியிட்டுவிடப் போவதாகவும் எழுதி யிருந்தான். தான் ஏதோ அவசர காரியமாக வெளியூருக்

குப் போவதாகவும், ஒரு வாரத்தில் திரும்பி வந்துவிடுவதாகவும் அதற்குள் அவர்கள் ஒரு முடிக்கு வர வேண்டுமென்றும் எழுதியிருந்தான். நான் உடனே சிலோனுக்கு இவர்களைப்பற்றி முக்கிய விஷயங்கள் அறிந்து கொள்ளுவதற்காக தந்தி அடித்தேன். நீங்கள் என் வீட்டிற்கு வருவதற்கு கால்மணி முந்திதான் பதில் வந்தது" என்றான் சந்துரு.

"நிஜமாகவா?"

"ஆமாம்! ரங்கு என்னை சிலோனில் பார்த்திருக்கிறான். ஒருவேளை நான் அவனை அடையாளம் கண்டு கண்டுவிடுவேனோ என்று அவனுக்குப் பயம். மேலும் அவன் வீட்டில் புகுந்து கடிதங்களை திருடியது நான்தானோ என்று சந்தேகம் வேறு. ஆகையால் என்னைத் தொலைத்து விட்டால்தான் கவலையற்று இருக்கலாம் என்று நேற்றைய ராத்திரி நான் வீட்டிற்கு திரும்பி வரும்பொழுது பின் தொடர்ந்து என் தலையில் ஓங்கி யடித்தான். நான் கீழே பொத்து என்று விழுந்ததிலேயிருந்து நான் செத்துப் போய்விட்டேன் என்று நினைத்துக்கொண்டு விர்ரென்று ஓடிப்போய் விட்டான்."

"ஓகோ! அப்படியா சங்கதி?"

"ஆமாம்! அதற்கப்புறம் கோதண்டம் வீட்டிற்குப் போயிருக்கிறான். முந்தாநேற்றைக்கு ஊருக்குபோன ராமநாதன் காரியம் முடிந்து நேற்றைக்குத் திரும்பி வந்திருக்கிறான். அவனும் கோதண்டத்தின் வீட்டிற்கு வந்திருக்கிறான். ராமநாதன் நான்தான் பாடுபடுகிறபடியால் தனக்கு மூன்றில் ஒரு பங்கு போறாது என்றும் தன் இஷ்டப்படி அவர்கள் கொடுக்காவிட்டால் தான் ஜெயிலுக்குப் போனாலும் லக்ஷ்யமில்லை. அவர்கள் விஷயத்தை போலீஸிற்குச் சொல்லிவிடப் போவதாகப் பயமுறுத்தியிருக்கிறான். மேலும் நீங்கள் திருடனைக் கண்டு பிடிக்காவிட்டால் வேலை போய்விடும் என்று பயமுறுத்தியிருக்கிறீர்கள். இனிமேல் ராமநாதன் உயிரோடிருந்தால் தங்களுக்கு ஆபத்து என்று அறிந்துகொண்டார்கள். ராமனாதனுக்கு நிறைய சாராயம் கொடுத்து அவன் போதையில் இருக்கும் பொழுது ரங்கு அவன் மண்டையில் ஓங்கி அடித்திருக்கிறான்" என்றான் சந்துரு.

"ஏன் கோதண்டம் அடித்திருக்கக் கூடாதா?" என்றார் கஜபதிராவ்.

"ஒருகாலும் இருக்க முடியாது. கோதண்டத்தின் வலது கையைக் கவனித்தீர்களா? அவன் கையில் மூன்று விரல்தான் இருக்கின்றன. டாக்டர் ஏதோ ஆபரேஷன் பண்ணி இரண்டு விரல்களை எடுத்திருக்கிறார். அவனால் தடியை எடுத்து அடிக்க முடியுமா என்று யோசித்துப் பாருங்கள். இரண்டு பேரும் கொலை செய்துவிட்டு, கொல்லைப்பக்கத்தில் கொண்டுபோய் போட்டுவிட்டு மாடியிலிருந்து கீழே குதித்தான் என்று கதையை கட்டி விட்டார்கள்" என்றான் சந்துரு.

அப்பொழுது டெலிபோனில் வாணாவரம் டிவிஷன் சப் இன்ஸ்பெக்டர் ஆஸ்பத்திரியிலிருந்து கஜபதிராவைக் கூப்பிட்டார். டெலிபோனில் இரண்டு நிமிஷம் கஜபதிராய் பேசிக்கொண்டிருந்து விட்டு, "சந்துரு! நீர் சொன்னது ரொம்ப கரெக்ட்" (correct) என்றார்.

"என்ன?" என்றான் சந்துரு.

"வேறு டாக்டரைக் கூப்பிட்டு பிரேத பரிசோதனை பண்ணச் சொன்னாராம் நம்ப வாணாவரம் சப் இன்ஸ்பெக்டர். கீழே விழுந்ததினால் அவன் தலையில் காயம் ஏற்பட்டு இறந்தான் என்று சொல்ல முடியாது என்று டாக்டர் சொல்லி விட்டாராம். தலையில் யாரோ நீண்ட தடியால் ஓங்கி யடித்ததினால் மண்டையில் பலத்த காயம் ஏற்பட்டு அவன் இறந்திருக்க வேண்டும். அதில் சந்தேகமேயில்லை என்று சொல்லி விட்டாராம். சந்துரு? உம் சாமர்த்தியமே சாமர்த்தியம். இரண்டே நாளில் இந்தத் திருட்டுக் கூட்டத்தை கண்டுபிடித்து விட்டீர்களே. இந்த கேஸ் போன வருஷம் நடந்திருந்தால் உமக்கு ராவ்பகதூர் பட்டமோ, திவான்பகதூர் பட்டமோ வாங்கிக் கொடுத்துவிட்டு மறு காரியம் பார்ப்பேன். இது காங்கிரஸ் ராஜ்ய மாச்சே, பட்டம் கிட்டம் ஒன்றும் கிடையாதே" என்றார் கஜபதிராவ் சிரித்துக்கொண்டு.

"உம் பட்டத்தை யெல்லாம் தூக்கி அடுப்பிலே போடுங்கோன்னோ! யாருக்குப் பட்டம் வேண்டும்! அதிருக்கட்டும்; உங்களுக்கு சரவணய்யர் தெருவிலே ஒரு வீடு இருக்கே தெரியுமோ? அது இப்பொழுது காலியாமே" என்றான் சந்துரு.

"ஆமாம்! முந்தா நேற்றைக்குத்தான் காலியாச்சு. நம்ப வாணாவரம் டிவிஷன் இன்ஸ்பெக்டருடைய மாப்பிள்ளைக்கு வேண்டுமாம்! இன்னம் யார் யாரோ வந்து நச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்பா பட்டணத்திலே இந்த வீட்டுக் கஷ்டம் இப்படி வந்து விட்டதே! ஆமாம்! என்ன விசேஷம் வீட்டைப்பற்றி விசாரித்தீர்கள்."

"அதையேன் கேட்கிறீர்கள்! வீட்டிலே ஹிம்சை தாங்க முடியவில்லை. என் மூத்த மச்சினி பட்டணம் வருகிறாளாம். அவளுடைய ஆம்படையானுக்கு உடம்பு சரிப்பட வில்லையாம். பட்டணத்திலே ஐந்து ஆறுமாசம் இருக்கப் போகிறார்களாம்" என்றான் சந்துரு.

"ரொம்ப கெட்டிக்காரர் ஐயா நீர்? என்னைப்போல ஏமாந்தவனல்ல நீர்! மச்சினியையும் ஷட்டகரையும் ரயிலில் வந்து இறங்கினவுடன் உம் வீட்டுக்குக்கூட அழைத்துக்கொண்டு போகாமல் நேரே எங்கேயாவது ஒரு வீட்டிலே ஜாகை வைத்து விட வேண்டும் என்று பார்க்கிறீரே! உம் சாமர்த்தியமே சாமர்த்

காதல் முடிவு

கோ. இரா. இராஜாம்பாள்

★

அன்று முத்து என்றுமில்லா சோகத்துடன் வீட்டிற்கு வந்தான். புத்தகங்களை வெறுப்புடன் மேஜையின் விட்டெறிந்தான். சிந்தனையில் ஆழ்ந்தான். தாய் அவனது நிலையைக் கண்டு வியப்புக் கொண்டாள். சந்தோஷத்துடன் "அம்மா" வென்று வாய் நிறையக் கூப்பிடும் மகனது சோக உருவத்தைக் கண்டு திகைப்புறுமல் இருக்க முடியுமா?

"அப்பா, காபி........"

"வேண்டாம்" என்றான் கடுகடுத்த குரலில்.

பின்னர் அவனது கோபத்தைப் போக்கலாமென்ற எண்ணத்துடன் அவள் சமையல் அறைக்குள் மறைந்தாள்.

கெடியாரம் அவனை லட்சியம் செய்யாமல் முன்னேறிக் கொண்டிருந்தது. அவனுடைய வாழ்க்கையின் ஒரு வருட நிகழ்ச்சிகள் கண் முன்னே காட்சி யளித்தன. அதிலே எத்தனை இன்பங்கள்!!

சிவ குமாரியும் முத்தும் ஒன்றாக ஐந்தாம் பாரம் படித்து வந்தார்கள். பள்ளி வாழ்க்கை அவர்களை ஒன்றாக பிணைத்து விட்டது. காதற் பூங்கா வனத்தில் நுழைந்து, அதிலுள்ள இன்பங்களைப் பருகி வந்தனர். வருங்கால வாழ்க்கையைக் கனவு கண்டுமகிழ்ந்தார்கள். கனவிலே புதிய திட்டங்களைவகுத்தார்கள்.

பள்ளி வாழ்க்கையிலே இருவரும் கை கோத்து உல்லாசமாகச் சென்று கொண்டிருந்தனர். சிவாவின் காளைப்பருவம் பொலிவுற்று மின்னியதன் காரணத்தால் பள்ளியை விட நேர்ந்தது,

அன்று அவன் சிவாவை வகுப்பில் காணவில்லை. திடுக்கிட்டான்; பற்பல எண்ணங்கள் அவன் மனத்தில் எழுந்தன.

தியம். நான் வீடு கொடுக்கிறதா யிருந்தால் ஒரு கண்டிஷன் (நிபந்தனை) பேரில் தான் கொடுப்பேன்" என்றார் கஜபதிராவ்.

"என்ன?" என்றான் சந்துரு ஆவலுடன்.

"இந்த மருங்காபுரி கொலைக்கேஸ் கட்டை உம் வீட்டுக்கு அனுப்பி விடுகிறேன்" என்றார் கஜபதிராவ் சிரித்துக்கொண்டு.

"போமய்யா போம்! உம் வீடுமாச்சு, நீருமாச்சு! என் மச்சினிக்கு பட்டணத்தில் இப்பொழுது ஒன்னும் கெட்டிக்கார டாக்டர்கள் இல்லை. அங்கேயே உடம்பை பார்த்துக்கொள்வதுதான் நல்லது' என்று இன்றைக்கே கடிதம் எழுதிப் போட்டு விடுகிறேன்" என்று சந்துரு சிரித்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

சிந்தித்தான் உடம்பு சௌகரியமில்லையோ என்று. அப்படியிருந்தால் லீவ் லெட்டர் வந்திருக்குமே? ஒரு வேளை எங்கள் காதல்.........சீச்சீ! அப்படி ஒன்றும் இருக்காது. பின்? எதற்கும் அவளைக் காண்போம் என்ற தீர்மானத்துடன் எழுந்தான்.

முத்து வழக்கம்போல் அவள் வீட்டிற்கு சென்றான். வீட்டில் நிசப்தம் நிலவியது. அன்புடன் 'சிவா' என்றான். தன் காதலனின் குரலைக் கேட்ட அம்மங்கை ஓடிவந்தாள். ஆனால் அவளது மலர்ந்த வதனத்தில் அன்று மலர்ச்சி காணவில்லை. முத்துவின் யௌவனத்தைப் பருகி இன்பம் அனுபவித்த அவளது கயல் போன்ற கண்கள் ஒளிமங்கிக் கிடந்தன; புன்முறுவல் தாண்டவமாடும் அவளது இதழ்கள் வாடிக் கிடந்தன; மழலைச் சொற்கள் உதிர்க்கும் அவளது செந்நிறவாய் மௌனத்தைக் கடைப்பிடித்தது. ஏன்? அவளது பொன் மேனி பனி காலத்தில் கருகிய மலரைப் போல் காட்சியளித்தது. அவளது நிலை மாற்றத்தைக் கண்டு திக்பிரமை கொண்டான்.

"சிவா................முகவாட்டம் ஏன்?" என்று மெல்லிய குரலில் கேட்டான்.

உண்மையைச் சொல்ல மனம் நடுங்கினாள். அதைச் சொல்வதற்கு எப்படி அவள் பேதை உள்ளம் இசையும்?

"ஏன் மௌனம்....................சொல்" என்று மறுபடியும் அழுத்திக் கேட்டான்.

அவள் நா தழுதழுத்தது. யாரோ அவள் மென்னியைப் பிடித்து அழுத்துவது போலிருந்தது.

'இனிமேல் நான் உங்களைப் பார்க்கக் கூடாதாம்........

எனக்குக் "கல்—யா—ணம்."

"சிவா......................." மேலும் சொல்ல வாயெடுத்தான். ஆனால் பதிலில்லை. நடைப்பிணம்போல் வீட்டை யடைந்தான்.

நாட்கள் ஓடின. மாதங்கள் வந்து ஆண்டுகள் நிரம்பின. காலச் சுழலில் சிக்கிய முத்து, துயர மென்னும் கடலில் சிக்கி, தன் யௌவன அழகிற்குப்பங்கம் தேடிக்கொண்டான். நிலையான லட்சியப் பாதையின்றி, நாடோடி போல் திரியலானான். ஒரு நாள் நிம்மதியற்ற மனதோடு அமைதியுற கடற்காற்று வாங்கச் சென்றான். அங்கே அவன் கண்டது?

அங்கு அவன் தனது அன்பின் செல்வியைக் கண்டான். ஆனால் பேச சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. மனமுடைந்தவனாய் வீடு திரும்பினான். அவளை எப்படியாவது சந்தித்து இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட வேண்டு மென்ற அவா அவனைத் தூண்டியது. ஆனால் பாழும் சமூகம் அவர்களைப் பிரித்து வைத்து சந்தோஷப்பட்டது.

சிவகுமாரியின் கணவன் ஓர் குமாஸ்தா. பாவை தன் காதலனை ஒரு முறை பார்த்து பேசி மகிழ ஆசை கொண்டாள். பன்

ளியில்—வாலிப பருவத்தில் பற்றிய கொடிய நோய் இருவர் உள்ளங்களையும் வாட்டியது. அந் நோயின் கொடுமையைச் சகிக்காத முத்து, ஒரு நாள் அவள் வீட்டிற்கு வந்தான். வந்தவனை அன்புடன் வரவேற்று உபசரித்தாள். இது முதற் சந்திப்பு.

மறுநாள் காதலன் காதலியைத் தேடி வந்தான். "அன்பே! என் கண்மணி!" என்றான். அவளும் 'நாதா' என்று அவனை ஆலிங்கனம் செய்து கொண்டாள். அவனது உதடுகள் அவளது வதனத்தில் பதிந்தன. அன்று பிரிந்தனர். மறுநாள் ....தேவியைத் தேடி வந்தான்.

எங்கோ மறைந்து—பதுங்கிக் கிடந்த காதல் உணர்ச்சிகள் வெளிப்பட்டன. சுற்றுப்புற உலகை அடியோடு மறந்தனர். ஒருவரை ஒருவர் கட்டியணைத்தனர்-ஊடல் நடந்தது-இன்பவெள்ளத்தில் சிறிதுநேரம்; அப்புறம்......பிரியமில்லாமல் பிரிந்தனர்.

நட்பின் காணத்தால் தன் சுய நாயகனை மறந்தாள். பழைய காதலின் உறவால் அவள் அவளுடைய புருஷனுக்குத் துரோகம் செய்ய முற்பட்டு விட்டாள்.

இவர்களை வெளியுலகம் காட்டிக்கொடுக்க எவ்வளவு நேரம் பிடிக்கப் போகிறது? இச் செய்தி காட்டு தீப்போல் பரவியது. வெளியுலகத்தின் புன்மொழிகள் அவளுடைய கணவன் காதில் படாமல் போகவில்லை.

உலகத்தார் "விபசாரி" என்ற பெரும்பெயரை அவளுக்கு சூட்டி மகிழ்ந்தார்கள். இச்சொல் அவள் தூயவுள்ளத்தை வாட்டியது. அவள் அவனைக் கேட்டாள். "எப்படி நான் விபசாரியாவேன்? இந்தப் பாழும் சமூகம் அல்லவா என்னை இந்த நிலைக்குக் கொண்டு வந்தது."

காதலனைக் கண்ட விடத்து கூறினாள் முழுவதையும். அவன் உண்மையை உணர்ந்தான். ஆனால் மறுகணம் சமூகம் இழைத்த கொடுமைகளைச் சிந்தனை செய்தான். "சொன்னால் சொல்லிக் கொண்டு போகட்டும்?,' என்று கூறிக் கொண்டிருக்கும்போதே குமாஸ்தா உள்ளே நுழைந்தார். எதிர்பாராத வருகையைக் கண்டு திகைத்தனர். அவருக்கு உண்மை புலப்பட்டது. உலகத்தார் சொல்லிய சொற்கள் அவர் காதில் எதிரொலித்தன.

ஒரு முறை இருவரையும் கூர்ந்து கவனித்தான். பின்னர் கதவைத் தாழிட்டுக்கொண்டு வெறி பிடித்தவன்போல் அவன் அறைக்குள் ஓடினான். கையில் "ரிவால்வ"ருடன் முத்து முன் காட்சி யளித்தான். சிவகுமாரி இந்தக் கோரத்தைப் பார்க்கச் சகிக்காமல் கதறினாள். அவனைக் கெஞ்சினாள். ஆனால் அவள் மனமோ இசையவில்லை. சுடும் சமயம், 'வேண்டாம்' என்று கதறிய வண்ணம் முத்துவின் முன்னே நின்றாள். குண்டு அவள் இருதயத்தை துளைத்துச் சென்றது. அவள் வேர் அற்ற மரம் போல் கீழே விழுந்தாள். அடுத்த கணம் மற்றொரு குண்டு வெளிப்பட்டது. அப்புறம் எங்கும் ஒரே அமைதி.

<u>தொடர் கதை</u>

இருசகோதரர்கள்

(P. C Wren என்பார் எழுதிய "Popes Prison" என்னும் ஆங்கில நாவலை ஆ. மா. தனக்கோட்டி தமிழ்ப்படுத்தியது.)

எல்லா விஷயத்திலும் முக்ய அம்சமாயிருந்தது மாதவனின் குருடுதான். இந்தப் பரிதாபமான நோயின் காரணமாக மாதவனுடைய இஷ்டத்துக்கு ஒன்றும் தடங்கல் கிடையாதென்பதையும் அறிவான்.

இருந்தாலும் நான் போகுமுன் அவனைக் கூப்பிட்டு ஒன்றிரண்டு புத்திமதியும் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளும்படி தாக்கீதும் செய்யவேண்டிய தவசியம்.

அவனை ஏன் பயமுறுத்தி வைக்கவேண்டும் என்று எனக்கு நானே கேட்டுக்கொண்டேன். ஏனெனில், அவன்மேல் எனக்கு நம்பிக்கையில்லை; அவனை வெறுக்கிறேன்; ஏனெனில், நானில்லாத சமயத்தில் அவன் கையில் இவ்வளவு அதிகாரத்தை விட்டுவைக்க இஷ்டமில்லை; குருட்டு ராஜனுக்கு சகுனி மாமன்போல், இவன் மாதவனை ஆட்டி வைப்பான்; வளர்த்த கடா மார்பில் பாய்வதுபோல் அன்னமிட்ட வீட்டில் கன்னம் வைக்கும் முதல் நம்பர் ராஸ்கல் இவனென்பதை நன்கறிவேன்.

துர்க்குணமும், கஞ்சத்தனமும், நம்பிக்கைத் துரோகமும் நிறைந்த ஒரு கேடு கெட்ட பயலான போதிலும், யூகமும், தைரியமும், நெஞ்சழுத்தமும், எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றலுமுடையவன். இந்த மாதிரியான பயலை எப்படி நம்பி மாதவனையும் வீட்டையும் இவன் வசத்தில் விட்டுச் செல்வது?

நான் எப்படியும் திரும்பவும் சண்டைக்குப் போகவேண்டும். மற்ற விஷயங்களில் கொஞ்சநஞ்சம் சந்தேகமிருந்தாலும், இதில் சந்தேகமேயில்லை. நான் போகவேண்டியதற்கு எத்தனையோ காரணங்கள் டஜன் கணக்கில் இருந்தன. வீட்டில் தங்கியிருக்க மனஉறுதியில்லை; மனக்கஷ்டமோ என்னை விட்டைவிட்டுப் போகும்படி தூண்டியது; நடுநடுவே என்னுடைய கடமை ஒரு பக்கம் என்னை வற்புறுத்தியது. ஏனெனில், நான் இப்போது போதுமான ஓய்வு எடுத்துக்கொண்டபின் சண்டைக்குப் போகும் நிலைமையை அடைந்திருந்தேன்.

யுத்தத்துக்குத் திரும்பவும் போகும் தேக நிலை எனக்கு ஏற்பட்டுவிட்டது என்று நான் நினைத்தாலும், எங்கள் ஊர் வைத்தியர் ரங்கநாதம் ஒத்துக்கொள்ளவில்லை. சென்னையிலிருந்து வந்த ஒரு நரம்பு வைத்தியத்தில் நிபுணரும் இவர் சொன்னதையே ஆமோதித்தார். நரம்புகளின் பலஹீனத்தையும் அதனுல் ஏற்படும்

கோளாறுகளையும், சிகிச்சைக்காகச் கடற்பிரயாணம் செய்வதும் அல்லது வேற்றூருகளுக்குப் போய் கொஞ்சகாலந் தங்கி யிருப்பதும் நலமாயிருக்குமென்று அவர்க ளிருவரும் யோசனை கூறினர்கள். அவர்களுடைய வைத்தியர் தொழிலின் முறைப்படி மேற்சொன்னவை சரியாக இருக்கலாம்; ஆனால் என்னைப் பொறுத்த வரையில் முற்றிலும் தப்பு என்றுதான் சொல்லுவேன். எனக்கு வேண்டி யிருந்ததெல்லாம் உழைப்புதான். எதைப் பற்றியேனும் யோசிப்பதற்குச் சிறிதுநேரங்கூட கிடைக்காதபடி சதா தேக உழைப்பு இருந்தால்தான் இரவில் கொஞ்சமாவது தூங்கலாம். நான் ஒழுங்கு தவறாமல் யோக்கியனாகக் காலந் தள்ளவேண்டுமானால் எனக்கு ஏதாவது ஒரு வேலையிருக்கவேண்டும்.

ஒரே வீட்டில் கமலாவுடன் நான் இனிமேல் இருப்பேனாகில் நான் என்ன செய்து விடுவேனோ வென்ற பயம் எனக்கிருந்தது. அவளுக்கும் மாதவனுக்கும் குறுக்கே நான் நிற்கக்கூடாதென்றால் அவனிடமிருந்து அவளை நான் எடுத்துக்கொள்ளக்கூடாது. இது சாத்தியமென்றாலும், அவளை நான் அடிக்கடி பார்ப்பதும், அவ்விருவரும் ஒன்றுகூடி யிருப்பதைப் பார்த்துக்கொண்டிருப்பதும் வேறு விஷயம். ஒவ்வொரு நாள் காலையிலும் இரவிலும் அவள் எனக்கு முத்தமளிக்கும்போது என்னையும் மீறி வரும் உள்ளக் கிளர்ச்சியையும் ஆவேசத்தையுங் கண்டு நானே பயந்துவிட்டேன். என் கையோடு தன் கையைச் சேர்த்துப் பிடித்திருக்கும்போதும் ஸோபாவில் இருவரும் பக்கத்தில் கிட்டநெருங்கி உட்கார்ந்திருக்கும் போதும் என் மனக்கஷ்டம் இவ்வளவுதானென்று சொல்ல முடியாது.

இதோடு, குருட்டுக் கண்களோடு அவஸ்தைப் படும் மாதவனைக் காணும்போதெல்லாம் என் மனம் துடிக்கும். தன் மனக்கவலையைப் பிறத்தியார் அறியாதவண்ணம் திடமனதுடன் இருக்க முயலுவதையும், தன் காரியங்களைத் தானே செய்வதற்காக எடுக்கும் முயற்சியையும், வீட்டிற்குள்ளும், தோட்டத்திலும் மற்றவர் உதவியின்றி தானே நடமாட யத்தனிப்பதையும், சாப்பாட்டு விஷயங்களில்கூட தானே பரிமாறிக்கொள்ள ஆசைப்படுவதையும் பார்க்க மிகவும் கன்றாவியாயிருக்கும்.

ஐயோ கடவுளே! அவனுக்குப் புத்தகங்கள் என்றால் உயிர். வாசிக்க முடியாமல் அவைகளைக் கையால் தடவிக்கொண்டே யிருப்பான். வேட்டையாடுவதில் அவனுக்கு வெகு பிரியம். தன் துப்பாக்கியை அடிக்கடி எடுத்து அதைத் தட்டிக்கொடுப்பான். மோட்டார் காரில் உட்கார்ந்துகொண்டு திருப்பும் சக்கரத்தை வெறுமனே சுற்றிக்கொண்டிருப்பான். சுக்கான் பிடித்து அதன் புகையை மேலே சுருள்சுருளாக விட்டுப் பார்ப்பதில் அவனுக்கு வெகு ஆனந்தம். இப்போது, சுக்கான் பற்றவைத்ததும் சிறிது நிமிஷத்துக்கெல்லாம் பெருமூச்செறிந்து கீழே வைத்துவிடுவான்.

பார்க்கப்போனால் அற்ப விஷயங்கள்தான். இருந்தாலும் இவைகள் தான் நம் மனதுக்கு மிகவும் விசாரத்தைக் கொடுப்பவை.

ஆம், இவைகளை என்னால் பொறுக்க முடியவில்லை. மனக்கஷ்டமும் கோழை மனதும் என்னை வீட்டை விட்டுப் போய்விடும்படி விரட்டின.

இன்னம் என் காலத்தை வீணாகக் கழித்துக்கொண்டிருக்க என் மனம் ஒப்பவில்லை. என் உடம்பு பரிபூரண நிலைமையடைந்த பிறகும், ஏற்கனவே குழிச்சண்டையில் நன்கு பயிற்சிபெற்றவனான நான், வைத்தியர்களால் நல்ல சர்டிபிகேட் கொடுத்த பிறகு கூட, மற்றவர்கள் எனக்காக அங்கு யுத்தம் புரியும்போது நான் கோழையாகக் காலந்தள்ளுவது ஈனக் காரியமல்லவா?

நான் படுகாய மடைந்து யுத்தத்துக்கு லாயக்கற்றவனாகி விடவில்லை. கல்யாணமாகி, குழந்தை குட்டியுடன் இருக்கும் 40 வயதுக்கு மேல்பட்ட மனுஷனுமல்ல. எங்கள் வீட்டு வைத்தியர், மாதவன் கமலா இவ்விருவருடைய முகதாக்ஷிண்யத்துக்காக நான் இன்னும் பூரணமாக சுகமடையவில்லை யென்றுதான் சொல்லுகிறார். இது எனக்குப் பிடிக்கவில்லை. என்னை ஒரு ரிக்ரூட்டிங் ஆபீஸ் டாக்டர் பரிசோதனை செய்து தான் யுத்தத்துக்குப் போக லாயக்கில்லையென்று சொன்னால் சரி. நான் இன்னம் ஆறுமாதத்துக்கு ரஜா எடுத்துக்கொண்டு உடம்பைத் தேற்றிக்கொள்ளுகிறேன்.

அப்படியின்றி, என்னை லாயக்கில்லை என்று சொல்லி சண்டைக்கு அனுப்பினால் அதுவும் நல்லதே. வீட்டைவிட்டு வெளியேறி ஏதாவதொரு தொழிலில் ஈடுபட்டிருக்கலாம். ஆம், ஓயாத வேலையில் ஈடுபட்டால்தான், எதைப்பற்றியும் சிந்தனை செய்து என் மூளையைக் கலக்கிக்கொள்ளாமலிருக்கலாம். ஆம், இன்னும் கொஞ்சகாலத்துக்கு வீட்டு விஷயங்களைப்பற்றியும் மாதவனைப் பற்றியும் நினைக்கவே கூடாது. எங்களுக்கு ரொம்ப வேண்டிய ஜெனரல் சர் ஹென்றி என்று ஒருவர் இருந்தார். அவரிடம் போய் ஒரு ஆபீஸர் உத்தியோகங் கேட்கலாமென்றாலோ, எனக்குப் பிடிக்கவில்லை. இந்த வேலைக்கு முதலில் 6 மாதம் டிரெயினிங் கற்றுக்கொள்ளவேண்டும். வேலை அதிகமிராது. ஓய்வு வேண்டிய மட்டும் கிடைக்கும். ஆகவே, என் மூளைக்கு வேலை கொடுக்க நிறைய அவகாசமிருக்கும். இதைத்தானே நான் தடுப்பதற்கு முயற்சி செய்வதெல்லாம் இன்னும், அப்படி 6 மாதம் டிரெயினிங் ஆனபிறகு ஒரு ராணுவ ஆபீசருக்கு வேண்டிய யூகமும், பழக்கமும், திறமையும், எனக்குக் கீழுள்ளவர்களைச் சரிவர கவனித்து அவர்களுடைய உயிருக்கு அனாவசியமாக ஆபத்தொன்றும் வராமல் பாதுகாக்கவேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய சக்தியும் எனக்கு வராது என்பது திண்ணம். சாதாரண சிப்பாய்கள் தங்களுடைய ஆபீசர்கள் என்னவிதமாய் இருக்க வேண்டுமென்றும் என்னவிதமாகத் தங்களை ஆபீசர்கள் நடத்த வேண்டும் என்பதையும் பேசிக்கொள்வதை நான் எத்தனையோ தடவை கேட்டிருக்கிறேன். ஒருவன் ராணுவ ஆபீசராய் இருக்க வேண்டுமானால், தனக்குக் கீழிருக்கும் சிப்பாய்களைக் காட்டிலும் யூகத்திலும், திறமையிலும், வேலையிலும் மேம்பட்டவனாய் இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் மதிப்பு கிடைக்கும். சிப்பாய்களை விட தைரியத்திலும் வைராக்கியத்திலும் சிறப்புற்று விளங்கவேண்டும். தங்களைவிட ஆபீசர் எல்லாவிதத்திலும் மேன்மையானவரென்றும் தங்களைத் திறமையுடன் நடத்த யோக்யதை யுள்ளவரென்றும் அவர்களே ஒப்புக்கொள்ள வேண்டும்.

ஆப்பிரிக்கா பிரஞ்சு அன்னியப் படையிலிருக்கும்போதே எனக்கு அங்குள்ள சிப்பாய்களுக்கு மேல் அதிகாரம் செலுத்தி

அவர்களுக்கு ஆபீசரா யிருக்கும் யோக்யதாம்சம் எனக்குக் கிடையாதென்பதை நன்கு அறிவேன். அப்படி யிருக்கும்போது ஒரு ஆங்கிலோ—இந்தியப் படையை சமாளிக்க எனக்குத் திறமை யிருக்கலாம் என்று நான் எப்படி நினைக்கலாம்?

ஆகையினாலே மறுபடியும் ஒரு சாதாரண சிப்பாயாகவே சேருவதற்குத் தீர்மானம் செய்துவிட்டேன்.

அடுத்தபடி, எந்தப் பட்டாளத்தில் சேருவதென்றபிரச்னை கிளம்பியது. ஏற்கனவே நான் காலாட்படையில் அநுபவம் பெற்றிருந்தபடியால், அதிலேயோ, பீரங்கிப் படையிலேயோ புதிதாகச் சேர்ந்தால், நான் அடைந்திருந்த பழைய அநுபவங்கள் அத்தனையும் வீணாகிவிடும். எந்தக் காலாட்படையில் சேருவதென்று யோசிக்குங்கால், 83-வது கர்னாடிக் படைதான் உசிதமென்று தோன்றியது. இந்தப் படையிலுள்ள சிப்பாய்களின் சிறந்த ஒழுக்கமும், கெட்டிக்காரத்தனமும், வேலையின் திறமையுந்தான் இதனுடைய புகழுக்குக் காரணம். இதில் சேர்ந்தால்தான் எனக்குத் தேவையான கடும் வேலையும் மனதை அப்படி இப்படி ஓட விடாதபடி ஓயா உழைப்பும் கிடைக்கும்.

ரிக்ரூடிங் ஆபீஸுக்குப் போய் பெயர் கொடுத்துவிட்டால், நான் வேண்டும் வேண்டாமென்பதைச் சொல்லும் பொறுப்பு ராணுவ டாக்டரைச் சேர்ந்தது.

3

இந்த முடிவுக்கு வந்ததும், என் மனம் ஒருவாறு ஆறுதலடைந்தது. என் கடமையைச் செய்யவில்லை யென்ற எண்ணம் என்னைப் பாதிக்காதல்லவா?

நான் சீக்கிரத்தில் புறப்படவேண்டும். மாதவனுடைய நிலைமையைப்பற்றி வைத்திய நிபுணர் மறுபடியும் தகவல் கொடுத்தவுடனே கிளம்பவேண்டியது தான். இதற்கு முன்னதாக, நான் பும்பாவிடம் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். பிறகு கமலாவிடம் சொல்லிக் கொள்ளவேண்டும். இதைப்பற்றி தான் நான் அதிகமாய் பயந்தது. என் உள்ளத்தை எவ்வளவுதான் அடக்கி வைத்திருந்த போதிலும, நான் எப்படி கமலாவிடம் சும்மா போய் விட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட முடியும்? அவள் என்னை அதிகமாய் நேசித்தாள் என்பதையும் இப்போதும் நேசிக்கிறாள் என்பதையும் நான் நன்கறிவேன். நான் மாத்திரம் தப்பித் தவறி, அவளைக் காதலிப்பதாகவும் அவளைக் கல்யாணஞ் செய்துகொள்ள விரும்புவதாயும் சொல்லிவிட்டேனே அவள் அதற்கு உடனே இணங்கி விடுவாளென்றே நம்பினேன். என்னையும் மாதவனையும் அவள் பாரபக்ஷமின்றி ஒரே விதமாக நேசித்ததால், யார் முந்திக்கொள்ளுகிறார்களோ அவனுக்குத்தான் அந்தப் பாக்கியம் கிட்டும். விஷயம் இப்படி யிருந்தபடியால், எனக்கு முந்திக்கொள்ள இஷ்டமில்லை. ஏனெனில், அப்படிச் செய்வது ஒரு விதத் திருட்டுத்தனமாகும். மாதவனுடைய குருட்டுத்தனத்தை சமயத்தில் உபயோகப் படுத்திக்கொண்டு அவனுக்குத் தெரியாமல் இந்தக் காரியத்தைச் செய்வதென்றால் இதைவிட வெறுப்பான விஷயம் வேறென்ன இருக்க முடியும்?

ஆகவே, மாதவனை விட்டுப் பிரிவதைக் காட்டிலும் கமலாவிடம் விடை பெற்றுக்கொள்ளும் விஷயந்தான் எனக்கு அதிக பயமா யிருந்தது.

மறுநாள் விடிந்ததும் நான் என்னுடைய அறையிலிருந்து கொண்டு பும்பாவுக்குச் சொல்லி யனுப்பினேன். பழைய விஷயங்களை யெல்லாம் தள்ளி வைத்துவிட்டு, எனக்கு முன்னால் அவனை ஒரு சாதாரண வேலைக்காரன் போல் நிறுத்தி, நான் சொல்வதைக் கேட்டு சரியானபடி நடந்து கொள்ளாவிட்டால், அவள் பிழைப்பு வாயில மண் என்பதை ஐயம் திரிபற சொல்லிவிட வேண்டும்.

பும்பா வந்தான். வருப்போதே, மட்டு மரியாதையுடன் மெதுவாக நடந்து தனக்குப் பின்னால் கதவைச் சாத்திவிட்டு வந்தான். அவனுடைய பல தொழில்களில், நடிப்பது என்பதில் தேர்ச்சியடைந்தவன். இந்தப் புது உத்தியோகத்திற்கேற்றவாறு நடந்து கொள்ள இவ்வளவு சீக்கிரத்தில் அவன் மாறிவிட்டது வெகு ஆச்சரியமா யிருந்தது. அவனுடைய பேச்சின் மாதிரியும் குணத்தைப் போலவே மாறி யிருந்தது. அபூர்வமாய் ஒன்றிரண்டு கொச்சை வார்த்தைகளை உபயோகித்தாலும், இப்போது தமிழ் வெகு சுத்தமாகப் பேசினான். புதிதாகப் பார்ப்பவர்கள் அவனை ஒரு நாட்டுப்புறத்தானென்று எண்ணிக் கொள்வார்களேயன்றி ஒரு பர்மியனென்று நினைக்கமாட்டார்கள்.

ஆயினும், சிறுத்தை எப்படி தன்னுடைய புள்ளிகளை மாற்ற முடியாதோ அதேபோல் பும்பாவின் கண்களில் கபடத்தையும், உதடுகளில் வஞ்சகத்தையும் மறைக்க முடியா.

அவன் உள்ளே நுழைந்ததும் வணக்கத்துடன் தனிகுனிந்து "என்னைக் கூப்பிட்டீர்களா, ஐயா!" என்று கேட்டான். இவ்வளவு வணக்கத்திலும், அவனுடைய கண்களில் வஞ்சகமும், உதடுகளில் ஏளனப் புன்சிரிப்பும் நன்கு வெளிப்பட்டது.

"ஆம், பும்பா; நான் போகப் போகிறேன்......"

"திரும்பவும் அன்னியப்படைக் கல்லவே! அட கடவுளே! அந்த மாதிரியான காரியம்......"

இது ஒரு மாறுதல். பும்பாவின் உண்மையான குணம் இங்கு சற்று தலைகாட்டியது. அவன் கேட்ட கேள்வியிலும், திடுக்கிட்ட மாதிரியிலும் ஒரு சாதாரண வேலைக்காரனுக்கு வேண்டிய பொறுமை யில்லாமற் போய்விட்டது.

நான் வெறித்துப் பார்த்ததில் அவன் தலைகுனிந்து விட்டான். "பும்பா, பேச வேண்டியவன் நான். நீ ஒரு வேலைக்காரன் என்பதை மறந்து விடாதே. நீ இதை விட்டுப் போகும் வரை ஒரு வேலைக்காரனாவேதான் இருப்பாய். தெரியுமா?"

"ஆம், ஐயா."

"நான் நாளைக்கோ, அதற்கு அடுத்த நாளோ போகப் போகிறேன். திரும்பி வர சிறிதுகாலம் செல்லும். கமலாதான் வீட்டுக்கு எஜமானியாக இருப்பாள். நீ மாதவனுடைய வேலைக்காரனான போதிலும், அவளுடைய உத்தரவுக்குக் கீழ்த்தான் வேலை செய்ய வேண்டும்."

"ஆனால், ஐயா......"

"ஆனால் கீனால் எல்லாம் கிடையாது. வீட்டுக்கு அதிகாரி கமலா தான். மாதவனுடைய கட்டளைக்கும் அவளுடைய கட்டளைக்கும் வேற்றுமை யிருக்கக் காரணமேயில்லை யென்றால், அம்மாதிரியான சந்தர்ப்பம் ஏற்படுமாகில் நீ அவளுடைய உத்தரவைத்தான் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் உன் உத்தியோகம் நிலைக்கும். புரிகிறதா?"

அவனுடைய வஞ்சகக் கண்கள் ஒரு விநாடி என்னை நோக்கிவிட்டு மறுபடியும் கவிழ்ந்து கொண்டன.

"சந்தேக மில்லாமல் அறிந்து கொண்டேன். ஐயா, மாதவனுடைய கட்டளைகளைத் தள்ளிவிட்டு......"

"பும்பா, இதை நன்றாகக் கவனித்து நடந்துகொள். நீ மாதவன் என்ன சொல்லுகிறானோ அதன்படி தான் நடக்கவேண்டும். நீ அவனுடைய வேலைக்காரனைத்தவிர வேறொன்றுமில்லை; ஒரு வேலைக்காரன் எவ்விதம் நடந்து கொள்ளவேண்டுமோ அவ்விதமே யிருக்கவேண்டும். எப்போதாவது கமலா உன்னைக் கூப்பிட்டு, "மாதவன் இவ்விதம் செய்வது எனக்குப் பிடிக்கவில்லை" யென்றாவது சொன்னால், நீ அதற்கு அனுசரணையாயிருந்து அவளிஷ்டத்தைப் பூர்த்திசெய்ய வேண்டியது உன்கடமை. தெரிகிறதா?"

"ஆம், ஐயா."

"மேலும், கமலா உன்னைக் கூப்பிட்டு, "பும்பா, நீ இன்னின்ன காரியங்களைச் செய்கிறாய் இவை எனக்குப் பிடிக்கவில்லை" என்று சொன்னால், நீ அக்காரியங்களில் மறுபடியும் தலையிடவே கூடாது. அல்லது, சென்னைக்குப் போய் இது அது வாங்கிக்கொண்டுவா என்று உத்திரவிட்டால், செய்ய வேண்டும்; அதாவது, நீ கமலாவின் உத்தரவுகளைச் சரிவரசெய்து அவளுடைய மனம் நோகாமல் நடந்து கொள்ள வேண்டும். உன் உத்தியோகத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் இப்படிச் செய். செய்வாயா?"

"சந்தேகமில்லாமல் ஐயா. நான் சின்ன ஐயாவிடமே எப்போதும் கிடக்காமல் மற்றக் காரியங்களையும் மேற்கொள்ளுவேன்."

"சரி அப்படித்தானிருக்கவேண்டும். நான் போனபிறகு கமலாவிடமிருந்து உன்னைப்பற்றி ஏதாவது புகார் வருமாகில், அடுத்த நிமிஷமே இங்கே வந்து உன் காதைப் பிடித்து இழுத்துக் கொண்டுபோய் வெளியே தள்ளிவிடுவேன் என்று உனக்கு உறுதி கூறுகிறேன். புரிகிறதா?"

பும்பாவின் கண்கள் மறுபடியும் என்னை ஒரு விநாடி உற்றுப் பார்த்துவிட்டு கீழ் நோக்கிவிட்டன. அவன் உதடுகளை நாக்கினால் தடவிக் கொண்டான்.

"ஆம், ஐயா, புரிந்துகொண்டேன்" என்றான்.

"நல்லது. இப்போது எல்லாம் சரிவர தெரிந்துவிட்டதல்லவா. நீ மாத்திரம் ஒன்றையும் மறந்துவிடாதே. போகலாம்."

என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டுப் பும்பா வெளியே சென்றான். அவனுடைய பார்வை எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கவில்லை.

4

என்னுடைய திட்டங்களைப் பற்றிக் கமலாவிடம் இதுவரை நான் ஒன்றும் சொல்லவில்லை. நான் என்ன செய்யவேண்டுமென்பதையும் எப்போது செய்யவேண்டு மென்பதையும் சொல்ல போதுமான அவகாசம் இன்னு மிருக்கிறது.

நான் பொழுது விடிந்ததும் பம்பாய்க்குப் போய் ராணுவத்தில் சேரவேண்டும். அதற்கு முந்தின இரவு மாதவனை அவனுடைய ரூமுக்கு அழைத்துப் போய் படுக்க வைத்தானதும், என்னுடன் வந்து சற்று பேசிவிட்டுப் போகுமாறு கமலாவிடம் சொன்னேன்.

ஹாலுக்கு வந்து ஒரு சோபாவில் உட்கார்ந்ததும் கமலா, "இரவில், மாதவன் தன் ரூமின் கதவுகளை உட்புறம் தாளிட்டுக்கொள்வதை நான் விரும்பவில்லை. சொன்னாலும் கேட்கமாட்டேன் என்கிறார்" என்று சொன்னாள்.

"கூடாதுதான். திடீரென்று அவன் வியாதியுற்றால், நாம் எப்படி அவனுக்கு உதவி செய்ய முடியும். நெருப்புப் பிடித்துக் கொள்ளுகிறதென்றே வைத்துக் கொள்ளுவோம். பும்பா பக்கத்து அறையில் தான் படுத்துக்கொள்ளுகிறானென்றாலும், மாதவனுடைய கதவை உடைத்து உள்ளே நுழைய சற்றுநேரமாகும். கையில் அணைக்காத சிகரெட்டோடு மறதியாகப் படுத்துக்கொண்டால்......அவனிடம் இதைப்பற்றி சொல்லுகிறேன்" என்றேன்.

"நான் எவ்வளவோ சொல்லியாயிற்று. காதில் போட்டுக் கொண்டால்தானே. இது ஒரு வியாதி. சிலருக்கு தாங்கள் தனியாக ஒரு பத்திரமான இடத்தில் இருக்க வேண்டுமென்ற எண்ணம் உண்டாகிவிடும். அவர்கள் இப்படித்தான் செய்வார்களாம்,"

"ஆமாமா. நானும் கேள்விப்பட்டிருக்கிறேன்".

"இது, தனியே யிராமல் கும்பலிலேயே சதா இருக்க வேண்டுமென்ற வியாதிக்கு நேர் விரோதமானது. இப்படிப் பட்டவர்களுக்கு எங்கே இவர்களைப் பிடித்து அடைத்து விடுவார்களோ என்ற பயம் எப்போது மிருக்குமாம். மாதவன் முன்பெல்லாம், எல்லோருடனும் இரவும் பகலும் கேளிக்கையாய் காலந் தள்ளினதால் இப்போது ஏகாங்கியாயிருக்கப் பிரியமாயிருக்கலாம்" என்றாள்.

"ஆம். மறைகுழிகளில் பதுங்கியிருந்த போதெல்லாம் அவன் முணகிக்கொண்டிருப்பான்."

"பாவம். யுத்தத்தில் சேர்ந்ததுமுதல் வீடு திரும்பும் வரையில் அவனுக்குச் சற்று நேரமாகிலும் ஏகாங்கியா யிருக்க சமயங் கிடைக்கவில்லை. காம்பிலும், ரயில் பிரயாணத்திலும், கால்நடைப் பிரயாணத்திலும் மறைவு குழிகளிலும் அவன் பட்ட அவஸ்தையின் காரணமாய் இப்போது அறையைப் பூட்டிக்கொண்டு தனிமையாய் காலந்தள்ள இஷ்டப்படுவதில் ஆச்சரியமில்லை." என்றேன்.

சற்றுநேரம் மௌனமாயிருந்தோம்.

"இருந்தாலும், இது மிகவும் அபாயகரமானது. நான் என்ன யோசித்திருக்கிறேன் தெரியுமா? அவனுடைய ஜன்னலுக்குச் சரியாக ஒரு ஏணியை அமைக்கலாமென்பதுதான்" என்றாள்.

"தீப்பிடித்துக்கொண்டால் அவசரத்தில் உபயோகித்துக் கொள்ளவைக்கிறார்களே, அது மாதிரியா?"

"ஆம். ஒரு மாதிரியான மச்சுப்படிகள் என்று வைத்துக்கொள்ளேன். இரும்பினால் செய்து, கைப்பிடியுட னிருக்கும். அவருடைய ஜன்னலுக்கு வெளியே ஒரு சிறிய மேடை யொன்றை இரும்புத்தகட்டினால் அமைத்து விட்டால், அவசரமானபோது அவர் இந்தப் படிகளின் வழியாகக் கீழே யிறங்கி விடலாம்."

"அடே அப்பா! ரொம்பப் பிரமாதமாக இருக்கிறதே. ஒரு சாதாரண இரும்பு ஏணியைச் சாத்தி வைத்தால் போதும். அதில் ஏறி இறங்க அவனுக்குச் சீக்கிரத்தில் பழக்க மேற்பட்டு விடும்."

இவ்வளவு சுலபமாக சொல்லி விட்டேனே யொழிய, மாதவன் எப்படி இதைச் செய்ய முடியு மென்பதை என் அகக்கண்ணால் பார்க்கும்போது எனக்கு வாயடைத்து விட்டது.

"நாம் ஒரு நிரந்தரமான படிக்கட்டைக் கட்டுவதென்றால் ஒருவேளை அவன் இஷ்டப்படாம லிருக்கலாம்."

"ஆம். நான் ஏதாவது ஒரு வழி சீக்கிரம் செய்யவேண்டும். இல்லாவிட்டால் நான் இரவில் நிம்மதியாய் தூங்க முடியாது. அவர் கதவை உட்புறம் பூட்டிக்கொண்டு, அதிலும் பார்வையற்ற கண்களுடன், தூங்குவதென்றால் எனக்கு திக்திக் என்றிருருக்கிறது."

சற்று நேரம் பேசாமலிருந்தோம்.

பிறகு, "நான் நாளைக்குப் போகலாமென் றிருக்கிறேன், கமலா" என்றேன்.

"எங்கே, டவுனுக்கா?"

"ஆம்."

"எத்தனை நாளைக்கு?"

"சொல்ல முடியாது. அனுமதிக்கப்பட்டால், ராணுவத்தில் சேரப் போகிறேன்."

"மூர்த்தி!......ஓ......"

கமலா அழுவதற்கு ஆரம்பித்தாள். இத்தனை வருஷங்களாகப் பழகியதில், கமலா இரண்டாந்தரமாக அழுவது இதுதான்.

அழுதுகொண்டே, "மூர்த்தி! நீ இப்படிச் செய்யக்கூடாது. உன் உடம்பு இன்னம் குணமடையவில்லை. இம்மாதிரி நான் குறுக்கிடுவதற்கு விசனிக்கிறேன். ஆனால், இவ்விஷயம் என்னால் பொறுக்க முடியாது. மூர்த்தி, என்னால் காலந் தள்ள.........நீ கட்டாயமாய் சேரவேண்டுமோ, மூர்த்தி?" என்று கேட்டாள்.

"ஆம்."

"ஐயோ, கடவுளே! மூர்த்தி, நான்......" சட்டென்று தன் மனதைத் திடம் செய்து கொண்டாள். பிறகு "மூர்த்தி, நீ அவசியம் போய்த்தான் ஆகவேண்டுமென்றால், வேறு பேச்சு இல்லை. ஆனால், ஓ......"

அவளை இறுகத் தழுவிக்கொள்ளாமலிருக்க நான் செய்த முயற்சி கடவுளுக்குத்தான் தெரியும். என் மனதை வைரம்போல் இறுக்கிக்கொண்டேன். அவள் மாதவனால் விரும்பப்பட்டவள். எவ்வளவு தூரம் அந்த விருப்பமிருக்கும் என்பதை என்னைவிட வேறு யார் அறிய முடியும்? என்னைவிட அதிகமாக அவளை மாதவன் விரும்பாவிட்டாலும், என்னைவிட அவனுக்குத்தான் அவளுடைய உதவி ஆயிரம் மடங்கு தேவையாயிருக்கும்.

வனப்பும், புத்தியும் நிறைந்த மாதவனை அவள் என்னைக் காட்டிலும் அதிகமாக நேசிக்க வேண்டுமென்பதில் ஐயமில்லை. அவனுடன் இந்த விஷயத்தில் நான் போட்டியிடுவது ஈனமான காரியமாகும்......இன்னம் ஒரு நிமிஷம், நான் கமலாவுடன் கைகோத்து நின்றேனேயாகில்......

நான் எழுந்து "நான் போய் படுத்துக்கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்துவிட்டேன்.

"சரி, நன்றாகத் தூங்கு" என்று பதிலளித்தாள்.

அன்றிரவு நான் எப்போதும்போல் அவளை முத்தமிடவில்லை. அவளை எப்படி சகோதர பாவத்தில் முத்தமிடுவது? அது முடியாத காரியம். (தொடரும்.)

பதினேழாம் ஆண்டு பிறந்து விட்டது!

பிரசண்ட விகடன்

(தமிழ் மக்கள் பட்சமுடன் படிக்கும் பக்ஷப் பத்திரிகை)

ஆங்கிலம் 1, 15-தேதிகளில் வெளிவருகிறது

ஆணித்தரமான அரசியல் கருத்துக்கள், அற்புதமான சிறு கதைகள், அழகிய கவிதைகள், 'ஜீவா' எழுதிவரும் அருமையான நாவல், பாரபட்சமற்ற கலை, இலக்கிய விமர்சனங்கள், உங்கள் எதிர்காலத்தைத் தெரிவிக்கும் எதிர்கால பலன், சிறுரும், மகளிரும் விரும்பிப் படிக்கத்தக்க அம்சங்கள் அனைத்தும் தாங்கி வெளி வருகிறது.

வருஷ சந்தா ரூ. 4-8-0 ஆறுமாத சந்தா ரூ. 2-4-0

தனிப் பிரதி விலை அணா 3.

பிரசண்ட விகடன் ஆபீஸ்,

நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை 1.

ஏளனம் ★

"இளங்கதிர்" ★

"டே, ராசு! அதோ பாரடா தகப்பனில்லா மகன் நித்திர நாராயணன் 'குமார்' வந்துட்டானடா."

"எங்கேடா அவன், தொட்டாச் சிணுங்கி."

"இதோ பாரடா, வரான்."

"ஆமாண்டா, கோபால்."

"இன்னிக்கு ஒரு வேலை பண்ணுவோமாடா, ராசு?"

"என்னடா?"

"அதுதானடா, நம் பள்ளிக்கூடத்திலே எல்லாம் படிப்பிலே நம்பளை எல்லாம் முந்திகிட்டு வரான் இவன் அதனாலே நம்ப கிட்டே எல்லாம் இவன் கர்வமாப் பேசறதில்லை. அதனாலே அந்தக் கர்வத்தைத் தொலைக்க"

"இவனைத் தகப்பனில்லேன்னு ஏளனப்படுத்த வேணுமா?"

"ஆமடா. அதுதான் சரியான யோசனை."

"சரி; அப்படியே செய்துடலாம்டா."

பள்ளி மாணவர்கள் இராசுவும் கோபாலும் பேசியதின் குரல் ஒலியைத் தூரத்தில் இருந்தே கேட்ட குமாரின் மனம் துடிதுடித்தது. மனப் பதற்றம் அவனைச் சொல்லொணாத் துன்பத்தில் ஆழ்த்தியது.

"தனக்குத் தந்தை இல்லை. தாய் உண்டு."

"தந்தை எங்கே?"

வாழ்வு முடிந்து அவர் மறைந்து விட்டார். இனி வரார்? ஆனால் மாணவர்களின் ஏளனச் சொல்? தங்களுக்குத் தந்தை உண்டு; குமாருக்கு இல்லை என்ற கேலி. அவன் உள்ளத்தையே அறுக்கும் வேலியாக அமைந்து விட்டது. தந்தை இருந்து இவர்கள் என்ன சாதித்தார்கள்? நான் என்ன சாதிக்காமல் போய் விட்டேன்? சுத்த அறிவிலிகள். இவ்விதமே குமாரின் உணர்ச்சி வெள்ளம் மனதில் பெரும் புயலைப்போல் கிளம்பிக் கொண்டிருந்தது. கரை தெரியாது தவிக்கும் மரக்கலம்போல அவன் கால்கள் கோலிய வழியில் சென்றான். அது அவன் வீட்டையே நாடிச் சென்றது. அங்கு தாயின் ஆவல் பூத்த முகம் அவனை மகிழ்வுடன் வரவேற்றது.

"அம்மா?"

"என் குமார்?"

"என் தந்தை..............

16962

"போய் விட்டார் அப்பா. அவரைப்பற்றி இனி வருந்திப் பயனில்லை. வருந்தாதே. மனதைத் திடப்படுத்து. நீ அறிவு தெரியும் முன்பே காலன் அவரைக் கொள்ளை கொண்டு விட்டான்."

"அவர் இல்லாததால் மாணவர்கள் என்னை ஏளனப் படுத்துகிறார்களே, அம்மா?"

"குமார்! அர்த்தமற்ற கூச்சலுக்கு நீ ஏன் செவிசாய்த்து வருத்த மடைகிறாய்? மனம் பதறாதே. அவர்கட்குத் தந்தை இருக்கலாம். உனக்குத் தந்தை இல்லை என்று அவர்கள் கேலி செய்கிறார்கள். அவர்கட்குத் தந்தை இருந்து என்ன செய்கிறார்கள்?"

"அதுதான் அம்மா, நேற்று கேட்டேன். தோழர்கள் ஒருவரும் பேசவே இல்லை."

"இதில் தான் அப்பா, இருக்கிறது சூட்சுமம். தெரிந்து கொண்டாயா, அப்பா!"

"ஆம்; அம்மா"

"சரி! நீ சென்று உன் படிப்பைக் கவனி."

"சரி; அம்மா."

குமார் மனப்புயல் நின்று சாந்தி நிலை பெற்றது. ஏளனம் காற்றுப்போல் பறந்து விட்டது.

"ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன்	ரூ. 2—0—0
நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை	ரூ. 0—3—0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை	ரூ. 0—4—0
ஜீவிய சந்தா	ரூ. 30—0—0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம்.

விரோதிஞு சித்திரைமீ கலியுகாதி 5051, சாலிவாகனம் 1872,
பசலி 1358, கொல்லமாண்டு 1124, ஹிஜிரா 1368
இங்கிலீஷ் 1949ஞு ஏப்ரல்மீ—1949ஞுமேமீ

சித்திரை	ஏப்ரல்மீ	வாரம்.	திதி.	நட்சத்ரம்	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	13	புத	பௌ9-08	சித்36-10	சி60	தமிழ் வருஷப்பிறப்பு, சித்
						திரைவிஷு புண்யகாலம்
2	14	வியா	பிர0-23 துதி52-30	சு29-55	அ29-55சி	சைத்ர பகுளம், அவமாகம்
3	15	வெ	திரு46-00	வி24-40	சி60	வ்ய-ஸ்ரா, வாகீச தீர்த்தம்
4	16	சனி	சது40-55	அ20-52	சி60	சங்கட சதுர்த்தி
5	17	ஞா	பஞ்37-33	கே18-40	ம18-40அ	... ...
6	18	திங்	சஷ்36-07	மூ18-20	சி18-20உ	கரிநாள்
7	19	செவ்	சப்36-40	பூர20-00	சி20மி	தன்ய நாள்
8	20	புத	அ39-07	உத்23-35	அ23-35சி	ரிஷபாயனம் நா-24-33
9	21	வியா	நவ63-08	திரு28-45	சி60	ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்
10	22	வெ	தச48-47	அ35-12	சி60	... ... [நக்ஷத்திரம்
11	23	சனி	ஏ54-45	சத42-32	அ42-32ம	ஸ்ரீ அப்பர் சுவாமிகள் திரு
12	24	ஞா	து60-00	பூர50-25	சி50-25அ	வைஷ்ணவ ஏகாதசி
13	25	திங்	து1-18	உட்58-13	சி60	வை-ஸ்ரா, பிரதோஷம்
14	26	செ	திர7-47	ரே60-00	அ60	மாச சிவராத்திரி
15	27	புத	ச●13-45	ரே5-35	உ5-35ம	சர்வத்ர-அமாவாசை
16	28	வியா	அ19-02	அசு12-20	அ12-20சி	... ...
17	29	வெ	பிர23-20	ப✱18-10	சி60	கிருத்திகை விரதம்
18	30	சனி	துதி26-37	கிரு23-02	அ60	சூ-பு சு-அ ரா புரே
19	1	ஞா	திரு28-45	ரோ26-45	சித்60	
20	2	திங்	சது29-40	மிரு29-17	அ29-17சி	1-மேஷ-சூ
21	3	செவ்	பஞ்29-17	திரு30-37	ம30-37சி	1-மேஷ-புத
22	4	புத	சஷ்27-40	புன30-07	சி60	2-மேஷ-சுக்
23	5	வியா	சப்24-47	பூச29-37	அ29-37சி	8-மேஷ-அங்
24	6	வெ	அ20-40	ஆ27-15	ம60	15-ரிஷ-புத
25	7	சனி	நவ15-30	மக23-47	அ23-47சி	குரு 20-சனி-வ-ரி (வ) சனி
26	8	ஞா	தச9-20	பூர19-25	சி19-25அ	26-ரிஷ-சுக்
27	9	திங்	ஏ2-22 து54-42	உத்14-17 அன்8-37	சி60	கே (வ) நெப்
28	10	செவ்	திர46-47	சித்2-42	சி60	பிரதோஷம், நரசிம்மஜயந்
29	11	புத	சசி38-57	சு56-52	சி60	வ்ய-ஸ்ரா, அவமாகம் [தி
30	12	வியா	○31-30	வி51-35	சி60	சித்திரா பௌர்ணமி
31	13	வெ	பிர24-42	அ47-07	சி47-07ம	வைசாக பகுளம்

1949ஞு மேமீ

EDITED, PRINTED & PUBLISHED BY N. MUNISWAMY MUDALIAR,
AT THE "ANANDA BODHINI" PRESS,
NO. 6, LAWYER CHINNATHAMBI MUDALI STREET, MADRAS.

புதிய அமைப்பு! புதிய அச்சுகள்!!

விரோதி வருஷத்திய

(நேத்திர ஜீவ நக்ஷத்திராதி சாந்திர ஸௌரமான)

சர்வ முகூர்த்த

"ஆனந்தபோதினி"

சுத்த திருக்கணித பஞ்சாங்கம்.

(108-பக்கங்கள் உள்ளது)

சென்ற 34-ஆண்டுகளாக நமது "ஆனந்தபோதினி" பஞ்சாங்கத்தைக் கணித்துவந்த திருக், சித்த, ஆரிய, சூரிய, சித்தாந்த, வாக்கிய கணிதப் பயிற்சியில் வல்ல நிபுணர்கள் பலர் உதவியைக்கொண்டு, ஸ்ரீ S. வாஸன் அவர்களால் கணிக்கப்பட்டது.

பஞ்சாங்கம் 1-க்கு விலை அணா 8.

தபால் கூலி பிரத்யேகம்.

எல்லா ஊர் புத்தக வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

விலாசம்:—

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

சர்வபடை சம்மாரன்

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய துடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள், ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 4. தபாற்கூலி வேறு.

மதன கோலாகல தங்கமாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயம் முதிர்ந்த காரணத்தாலும், உலக இச்சை இல்லாதவர்களும் இழந்த பலத்தை இம்மருந்து ஆச்சரியப்படத்தக்க விதமாய் உண்டாக்கி ஒரு விதமான றுசுறுப்பையும். கொடுக்கும். இதுவன்றி வேறு எந்த நோயினுலுண்டான பலவீனமும் இம்மருந்தினுல் நீங்கும். இரத்த விருத்தியை யுண்டாக்கி நரம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்ருது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து, அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச்சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்த கைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது.

இதனை ஒரு முறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரைகொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல் மங்கல், அந்திமாலை, பீளை கட்டல். சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணுடி போடவேண்டியதில்லை.

புட்டி 1-க்கு அணு 10. தபாற்கூலி வேறு.

தனலட்சுமி கம்பெனி, நெ. 6, லாயர் சின்னதம்பி முதலிதெரு, மதராஸ்.

மலையாள அஷ்டாங்க ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

மேகரோக நிவாரணி!

தாது விருத்திக்கும் இரத்த விருத்திக்கும் நிகரற்றது.

"எலிக்ஸைரன்"

பத்தியம் கிடையாது: ருசிகரமானது



இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும், தசை விருத்திக்கும், தாது பலத்துக்கும் இது ஒரு அமிர்த சஞ்சீவியாகும் நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேகவியாதி, நீர்நீர், மூலச்சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண் லிங்கப் புற்று, மேகப்படைகள், உடம்பு எரிச்சல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால் நோவு, மயக்கம், இடுப்பு வலி, மூத்திர நோய், மூத்திரத்துடன் இந்திரியம் நீர்த்துப் போகுதல் முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, இந்திரியத்தை இறுக செய்து ஆண் நரம்புகளை முறுக்கேற்றி, மனே உற்சாகம் மேனிப் பிரகாசம், குழிவிழுந்த கண்களையும் ஒட்டி உலர்ந்துபோன கன்னங்களையும் வசீகரமாக்கி, புத்துயிர் அளித்து, இல்லற இன்பத்தை அனுபவிக்க செய்து, யௌவனத்தைத் தரும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

20-நாள் மருந்து 40-வேளைக்கு (பூரண குணத்துக்குப் போதுமானது) ரூபா 2–4–0.

குன்மக் குடாரி

ஸ்டமக் பவுடர்:
ஆபரேஷன் தேவையில்லை.

சகலவித வயிற்றுவலியையும் Appendicitis என்னும் வயிற்றிலுண்டாகும் வியாதியையும், புண்களையும், வயிற்றை ஆபரேஷன் செய்யாமல் இம்மருந்து உத்தரவாதத்துடன் குணப்படுத்தும். இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது. (அல்சர்), அஜீரணம், மலபந்தம், குடலிரைச்சல், புளியேப்பம், வயிற்றுக்குத்தல், குடல்புண், ரணம், சதை வளர்தல், குலைக்கட்டி, ஈரலில் சதை வளருதல், குன்மம், சாப்பிடும் முன்னும் பின்னும் வயிற்றில் உண்டாகும் வலி இன்னும் பலவிதமான வியாதிகளையும் குணப்படுத்தும். **30-நாள் 60-வேளை மருந்து விலை ரூபா 2-8-0**

காசா

காசம், இருமல், க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு தலை சிறந்த ஔடதமாகும். (இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது.) இருமல், காசம், இளைப்பு, ஈளை, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டை வலி, மார் தடிப்பு, மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தணியச்செய்து கபத்தை அறவே ஒழித்து, குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூபா 2-8.

விலாசம்:-தனலட்சுமி கம்பெனி, தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

ஜீவானந்த ரஸாயனம்

இதில் சுக்கில சுரோணிதப் போஷணைக்கு உரிய அரிய பெரிய மருந்துகளும், விலையான மூலிகைகள், பழ ரசங்கள், புஷ்பச் சத்துக்கள் முதலிய பல மூலிகைகளும் சேர்த்து சாப்பிடுவதற்கு மிக இனிய லேகிய பதமாய் தயார் செய்யப்பட்டது.

*'**ஜீவானந்த ரஸாயனத்**'தை ஒரு மண்டலம் நீடித்துச் சாப்பிடுவதினால் ஜீவ நரம்புகளில் பற்றிவரும் மேகவிஷ துர்நீர்களைப் போக்கும். கெட்ட சகவாச தோஷத்தினால் ஏற்பட்ட வெள்ளை, கிரந்தி, மேகவியாதி, மேகச்சொறி, பித்தப்பாண்டு, துர் அட்பியாசம் முதலியவற்றால் ஏற்பட்ட பலஹீனம், தாது கஷ்டம், சொற்பன ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, ஆயாசம், உடல் நடுக்கம், பசியின்மை, குன்மம், தூக்கமின்மை, மேக காங்கை, மூலச்சூடு, மார்பு வலி, இடுப்பு வலி, மலச்சிக்கல், இருமல், மூத்திரத்துடன் இந்திரியம் நீத்துப்போகுதல், கைகால் ஓச்சல், ஞாபகமறதி, கண்மங்கல் முதலிய பல வியாதிகளையும் போக்கும். வீரிய விருத்தி, தாதுபுஷ்டி, இரத்தவிருத்தி, போகசக்தி முதலியவைகளை அபாரமாய் உண்டாக்கும். தளர்ந்து துவண்டு போன ஆண் நரம்புகளை முறுக்கேற்றும். தசைகளை வளரச் செய்யும். உடைந்துபோன இந்திரியத்தை இறுகச் செய்யும். இல்லற வாழ்க்கையில் இணையற்ற இன்பத்தை அளிக்கும். பெண்களுக்குக் காணும் சூதகச்சிக்கல், பெரும்பாடு போகுதல், அதிகப் பிள்ளைகளைப் பெற்றதனால் ஏற்பட்ட தளர்ச்சி, பலஹீனம், பர்மஸ்தானத்தில் நமை, எரிச்சல், வெள்ளை, வெட்டை முதலிய பல வியாதிகளையும் கண்டிக்கத் தக்கது. பத்தியமில்லை.*

1-பவுண்டு டின் 1-க்கு ரூ. 5. ½-பவுண்டு டின் 1-க்கு ரூ. 2-12-0.

மாலதி முகவசிகர மருந்து (முகப் பருக்களுக்கு)

முகத்தில் ஏற்படும் பருக்கள், தழும்புகள், வெய்யிலில் சுற்றுவதால் உண்டாகும் கருமை வேர்க்குருக் கட்டிகள் முதலிய முக அழகைக் கெடுத்து விகார ரூபத்தை யுண்டாக்கும் சர்வ பருக்களையும் போக்கி முகத்திற்கு நல்ல தேஜஸையும், பளபளப்பையும், காந்தியையும் கொடுக்கவல்ல மருந்து. விலை டின் 1-க்கு ரூ. 1.

நயன பிந்து (EYE DROPS)

கண் சம்பந்தமான வியாதிகளுக்கு மிகவும் சிறந்தது.

கண்ணோய், கண்ணில் பீளை கட்டுதல், கண் எரிச்சல், கண்ணில் சதை வளருதல், கண் வீக்கம், கண் சுருங்குதல், கண்ணிலிருந்து சதா நீர் வடிதல், கண் பார்வைக் குறைவு, கண்ணில் பூ படுதல், மாலைக்கண், கண் புளித்தல், கண் புகைதல், கண் கொதிப்பு, கண் சிவப்பு, கண்ணுக்குள் தூசு துரும்பு முதலானவை விழுந்ததுபோல் கண் அருகுதல் முதலிய கண்ணைச் சார்ந்த எல்லா நோய்களும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். கண்ணுக்கு நல்ல ஒளியைக் கொடுக்கும். கண்ணோய் பரவும் காலத்தில் இம்மருந்து கையிருப்பிலிருந்து விட்டால் மேற்படி நோய்கள் வராமல் தடுத்துக் கொள்ளலாம். சிறு குழந்தை முதல் கிழவர் வரை யாதொரு பயமுமில்லாமல் கண்ணில் விடலாம். 1-அவுன்ஸ் புட்டி 1-க்கு விலை ரூ. 1-4

தனலட்சுமி கம்பெனி, நெ, 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, மதராஸ்